
KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)


வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Prasath Estate
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086


வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage


GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL




மலர்:- 32, 22 August 2025 இதழ்:- 26

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600



NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com


GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!

Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING

Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8


## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## வடக்கு கிழக்கில் ஹர்த்தால் தினத்தன்று இயல்பு நிலை எப்படி இருந்தது?


விபரம் 9ம் பக்கம் பார்க்க

## சுமந்திரன் என்னும் தனி மனிதரின் ஹர்த்தாலா?

பத்தி எழுத்தாளர்கள் நிலாந்தன், அழகு குணசீலன், யசீந்திரா, கருணாகரன் ஆகியோர் விபரமாகத் தரும் கட்டுரை வடிவிலான முழுமையான விபரங்கள்

## செம்மணி முதல் துண்டி வரை கைதாகி சித்திரவதையில் உயிர் இழந்தோர் மணியம் தோட்டத்தில் புதைக்கப்பட்டனர்! சோமரத்ன கூறும் திடுக்கிடும் தகவல்!

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்




Nathaswara Thavil Music Of Global Inc.
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
28th ANNIVERSARY
தவில் வித்வான் கலைமாமணி திருப்புன்கூர் திரு. T.G முத்துக்குமாரசாமி அவர்கள்
நாதஸ்வர வித்வான் கலாநிதி M.P நாகேந்திரன் அவர்கள்
நாதஸ்வர வித்வான் M.P N நிருபன் அவர்கள்
தவில் வித்துவான் லயஞானதிலகம் காவாலம் திரு. B. ஸ்ரீகுமார் அவர்கள்
திரு. T.A.K.சண்முகநாதன்
திரு. D.பாபு
திரு. K.S.K.மணிகண்டன்
திரு. A.K.ஜயப்பன்
திரு K.A நந்தீஸ்குமார்
திரு.S.சந்தானபாரதி
திரு S.லக்சுமிநரேசையா
திரு V. ராஜா
திரு M. கிருஷ்ணா
திரு S. மணிகண்டன்
திரு.J.சூரியகுமார்
திரு G. பிரேம்குமார்
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு 28வது வருட விழாவை இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் 30ஆம் தேதி கொண்டாடுகிறது. இவ்விழாவை சிறப்பிக்க இந்தியாவில் இருந்து சிறப்பு வருகை தருகிறார். தவில் வித்வான் கலைமாமணி திருப்புன்கூர் T.G. முத்துகுமாரசுவாமி அவர்களும் சாவகச்சேரி மற்றும் ரொறன்ரோ நாதஸ்வர வித்வான் கலாநிதி M.P. நாகேந்திரன் அவர்களும் அத்துடன் தவில் வித்துவான் காவாலம் திரு. B. ஸ்ரீகுமார் அவர்களும் அத்தோடு இடும்பவனம் திரு. K.S.K. மணிகண்டன் அவர்களும் இந்தியாவில் இருந்து வருகைதந்திருக்கும் வித்வான்களும் Toronto நாதஸ்வர தவில் வித்வான்களும் இணைந்து மங்கள இசையை சிறப்பிக்க உள்ளார்கள் அனைத்து குருமார்கள் நாதஸ்வர தவில் கலைஞர்கள் மற்றும் ரசிக பெருமக்கள் அனைவரையும் வருக வருக என நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு வரவேற்கிறது.
திரு D. வினோத்
இடம் :
SRI SATHYA SAI BABA CENTRE
5321 Finch Ave E, Scarborough, ON M1S 5W2
Intersection: Middlefield & Finch
காலம் : Aug-30-2025 சனிக்கிழமை
நேரம் : மாலை, 4.30 மணிக்கு ஆரம்பம்
அனுமதி இலவசம்
ANALAI EXPRESS
Analaiexpress TV
Analaiexpress Facebook
மோர்சிங் திரு K.S.பாலாஜி சாய்ராம்
விபரங்களுக்கு: நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
DR. ஆ. முருகதாஸ் Tel:416-420-1309 / 289-660-3850
Email: ntm97@yahoo.com web:www.nathaswarathavil.org
தவில் கலைஞர் திரு. A.லோகன் அவர்கள் மொன்றியல் பொறுப்பாளர்
Design and Print By Designs 2 Print @ Majestic City : Prabagar • 647.858.2290 / 416 292 4999 / www.designs2prints.com

EELANADU
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!



என் இனிய உறவுகளே! கடந்த 14 ஆண்டுகளாக (423 குழந்தைகள்) இவர்களது உணவுத் தேவையை தங்கு தடையின்றி பூர்த்தி செய்து வந்தவர்கள் நீங்கள். தற்போதைய பொருளாதார நெருக்கடியான சூழலில் ஒவ்வொரு கனடியத் தமிழர்களும் இவர்களுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# இணை அனுசரணை நாடுகளின் புதிய பிரேரணை! புதிய அரசியலமைப்பு, பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம் மாகாணசபைத் தேர்தல் - நடைமுறை என்பன உள்வாங்கப்படும்?

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் செப்டெம்பர் மாதக் கூட்டத்தொடரில் பிரிட்டன் தலைமையிலான இணையனு சரணை நாடுகளால் இலங்கை தொடர்பில் கொண்டுவரப் படவுள்ள புதிய பிரேரணையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பணிகளை ஆரம்பித்தல், பயங்கரவாத்தடைச் சட்டத்தை நீக்குதல், மாகாணசபைத்தேர்தல்களை விரை ந்து நடாத்துதல் ஆகிய விடயங்கள் உள்வாங்கப்பட வுள்ளன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் வாக்குறுதி அளித்தவாறு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பணிகளை விரைவில் ஆரம்பிக்கவேண்டும், பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முற்றாக நீக்குதல் மற்றும் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாணசபைத் தேர்தல்களைத் தொடர்ந்து காலந்தாழ்த்தா மல் விரைவாக நடாத்துதல் ஆகிய விடயங்கள் உள் வாங்கப்படவுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகி, ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

தற்போது நடைமுறையில் இருக்கும் 'இலங்கையில் நல்லி ணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தீர்மானத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள ஆணைக்கு அமைவாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் 'இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டம்' முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. அதற்கமைய உயர்ஸ்தானிகர் அலுவல கத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான விரிவான எழுத்து மூல அறிக்கை, கூட்டத் தொடரின் ஆரம்ப நாளான 8 ஆம் திகதி உயர்ஸ்தானிகர் வோல்கர்



டேர்க்கினால் பேரவையில் சமர்ப்பிக்கப்படும். இது இவ் வாறிருக்க பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் பிரிட் டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகள் இலங்கை தொடர்பில் புதிய பிரேரணையொன்றை சமர்ப் பிக்கவுள்ளன. அப்பிரேரணையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் வாக்குறுதி அளித்தவாறு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பணிகளை விரைவில் ஆரம்பிக்கவேண்டும், பயங்கரவாதத்தடைச் சட்டத்தை முற்றாக நீக்குதல் மற்றும் அரசியலமைப்பு க்கான 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைத் தேர்தல்களைத் தொடர்ந்து காலந்தாழ்த்தாமல் விரைவாக நடாத்துதல் ஆகிய விடயங்கள் உள்வாங்கப்படவுள்ளன.

அதேவேளை செம்மணி சித்துபாத்தி மனிதப்புதைகுழி விவகாரம் சர்வதேச கவனம் பெற்றிருக்கும் நிலையில், மனிதப் புதைகுழிகளுடன் தொடர்புடைய விடயங்களும் இணையனுசரணை நாடுகளின் புதிய பிரேரணையில் உள்ளடக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# ஒன்ராறியோ - ரொறன்ரோ இணைந்து போக்குவரத்துக்கு அருகில் அதிக வீடுகளை உருவாக்கத் திட்டம்!



ஒன்ராறியோ அரசும் ரொறன்ரோ மாநகர சபையும் இணைந்து பேருந்து, தொடரி நிலையங்கள் மற்றும் நிலக்கீழ் வழித்தடங்களுக்கு அருகில் அதிக வீடுகளைக் கட்டவுள்ளன. இத்திட்டம் 120 போக்குவரத்து நிலையங்களுக்கு அருகில், குறிப்பாக ஸ்காபரோப் பகுதிகளில், உயரமான, அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுவதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுக்கும்.

இதனடிப்படையில் ரொறன்ரோவில் வரும் 25 ஆண்டுகளில் 1.5 மில்லியனுக்கும் அதிகமான புதிய வீடுகள் அமைக்கப்படலாம். இதனால் குடியிருப்பாளர்கள், புதிதாகக் குடியேறுபவர்கள் மற்றும் இளையோர், கல்விக்கூடங்களுக்கும் வேலைத்தளங்களுக்கும் அருகில் வசிக்க வழியேற்படும்.

இது பற்றி அமைச்சர் விஜய் தணிகாசலம் கூறுகையில், 'போக்குவரத்தின் முக்கியத்துவத்தையும், அதுவே மக்களை அவர்கள் இல்லங்களிலிருந்து அவர்கள் செல்ல வேண்டிய இடங்களுடன் இணைப்பதற்கு இன்றியமையாதது என்பதையும் எமது அரசு அறிந்துள்ளது' என்றார்.

ஸ்காபரோவிலுள்ள முக்கிய போக்குவரத்து நிலையங்களுக்கு அருகில் கட்டப்படவுள்ள குடியிருப்புகளால் பொதுமக்கள் பயனடைவர். ஸ்காபரோ நிலக்கீழ் வழித்தட நீட்டிப்பில் மூன்று புதிய நிலையங்கள் அமையவுள்ளன. அவையாவன:

லோரன்ஸ் கிழக்கு, ஸ்காபரோ மத்தி, மற்றும் ஷெப்பேட் கிழக்கு. இத்திட்டத்தினூடக பயண நேரம் குறைவடைவதுடன் குடியிருப்புக்கு அருகிலேயே வேலைவாய்ப்புகளையும் கடைகள், வணிகங்கள் போன்றவற்றையும் உருவாக்க உதவும். இக்குடியிருப்பு மற்றும் போக்குவரத்துத் திட்டங்கள், எதிர்காலத்தில் ஸ்காபரோவை வலுவானதும் குறைந்த செலவுடைய அனைத்துடனும் இணைந்த சமுகமாகவும் மாற்ற வல்லன.

# கனடாவில் பிரபலமான மதுபானமான கிரவுண் ராயல் விஸ்கி திரும்பப் பெறப்படுகிறது



கனடாவின் புகழ்பெற்ற விஸ்கி வகைகளில் ஒன்றான கிரவுன் ராயல், அதன் ஒரு தயாரிப்பை திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளது, ஏனெனில் பாட்டில்களில் கண்ணாடி இருக்க வாய்ப்புள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. பிரித்தானியாவை மையமாகக் கொண்ட விஸ்கி விநியோகஸ்தரான டியாஜியோ கனடா இன்க்., கிரவுன் ராயல் ரிசர்வ்' பிராண்டின் '12 ஆண்டுகள் முதிர்ந்த' என்று பெயரிடப்பட்ட தயாரிப்பே இவ்வாறு மீளப்பெறுவதாக அறிவிக்கப்பட்டு ள்ளது.

கண்ணாடித் துண்டுகள் காணப்படக்கூடிய சாத்தியங்கள் காரணமாக இந்த வகை விஸ்கி திரும்பப் பெறுகிறது. கனேடிய உணவு ஆய்வு முகமை (CFIA) வெளியிட்ட திரும்பப் பெறுதல் அறிவிப்பின்படி, பாதிக்கப்பட்ட தயாரிப்புகள் ஆல்பர்ட்டா, பிரிட்டிஷ் கொலம்பியா, நியூஃபவுண்ட்லாண்ட் மற்றும் லாப்ரடோர், மற்றும் ஒன்டாரியோ ஆகிய பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

# துப்பாக்கிச் சூட்டில் 13வயது சிறுவன் பலி!

கனடாவில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பதின்மூன்று வயது சிறுவன் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பிமிகிகாமாக் பழங்குடியின சமூகம் வாழும் பகுதியில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் காயமடைந்த சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளான்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் 17 வயதான சிறுவன் ஒருவனை அதிகாரிகள் கைது செய்துள்ளனர். இந்த துப்பாக்கிச் சூட்டுக்காக பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் வேறு எவருக்கும் தொடர்பு இருப்பதாக பொலிஸார் சந்தேகம் வெளியிடவில்லை. சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




# இலங்கையில் காணாமலாக்கப்படல் இடம் பெற்றது உண்மையை அரசும் - அரசு சாராத சகல அமைப்புக்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும்!

இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்படல்கள் இடம் பெற்றன என்ற உண்மையை அரசும், அரசு சாராத சகல தரப்புக்களும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் முன்னாள் தவிசாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் வலியுறுத்தியுள்ளார்.

சுதந்திர ஊடகவியலாளர்களான தரிந்து ஜயவர்தன, தரிந்து உடு வரகெதர மற்றும் எம்.எப்.எம்.பஸீர் ஆகியோர் எழுதிய 'செம்மணி' எனும் புத்தகத்தின் வெளியீட்டு நிகழ்வும், அதனைத் தொடர்ந்து இலங்கையில் காணாமலாக்கப்பட்டோர் மற்றும் மனிதப்புதைகுழிகள்' எனும் தலைப்பிலான கலந்துரையாடலும் இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தினால் கொழும்பிலுள்ள தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் சேவை சபை அரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



அக்கலந்துரையாடலில் பங்கேற்று கருத்து வெளியிட்ட காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் முன்னாள் தவிசாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாலிய பீரிஸ் கூறியதாவது: 2018ஆம் ஆண்டு காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் இரண்டு வருடகாலம் அதன் தவிசாளராகப் பணியாற்றினேன். அவ்வேளையில் அலுவலகத்துக்கு ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறப் பட்டது.

ஆனால் நாம் சென்று பார்த்த போது எமக்கான அலுவலகம் கூட இருக்கவில்லை. எனவே எவ்வாறிருப்பினும் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்துக்கு அவசியமான வளங்கள் மற் றும் வசதிகள் இல்லாமலும், தீர்வு காண வேண்டும் என்ற உண்மையான அரசியல் தன்முனைப்பின்றியும் எதனையும் செய்யமுடியாது.

அதேபோன்று காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் நீதியமைச்சின் கீழ் இயங்குகின்றது. அவ்வாறிருக்கையில் அந்த அலுவலகத்தினால் சுதந்திரமாகச் செயற்பட முடியாது. காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் உரியவாறு இயங்குவதற்கு அதற்குரிய சுதந் திரமும், வளங்களும் வழங்கப்பட வேண்டும்.

அதேவேளை வட, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு அரசினால் ஸ்தாபிக்கப்பட்ட காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் மீது சற்றும் நம்பிக்கை இருக்கவில்லை. அவர்கள் மத்தியில் பலத்த எதிர்ப்பு நிலவிய போதிலும், எம்மால் இயலுமானளவுக்கு நாம் பல்வேறு விடயங்களைச் செய்தோம்.

இவ்விவகாரத்துக்கு சர்வதேசத்தின் ஊடாக நீதியைப் பெற்றுக் கொள்வது என்பது நடைமுறையில் சாத்தியமற்றதொரு விடயமாகும். எனவே நாம் உள்ளகப் பொறிமுறையை மேலும் பலப்படுத்த வேண்டும். அது மாத்திரமன்றி இவ்வாறான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் உண்மையிலேயே இடம் பெற்றனவா என்ற கேள்வி தெற்கில் வாழும் பலருக்கு உண்டு. எனவே இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றன என்ற உண்மையை நாம் எவ்வாறு தெற்கு மக்களுக்குப் புரிய வைக்கப் போகிறோம் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். இவ் விடயத்தில் வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் நிலவும் இடை வெளியை எவ்வாறு சீரமைக்கப் போகிறோம் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

மேலும் இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்படல்கள் இடம் பெற்றன என்ற உண்மையை அரசும், அரசு சாராத சகல தரப்பு க்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அது மாத்திரமன்றி இவ்விடயம் சார்ந்து அரச கட்டமைப்பை எவ்வாறு மாற்றியமைக்க வேண்டும் எனக் கலந்துரையாட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

# ஜே.வி.பி கிளர்ச்சியின் போது காணாமல் போனோருக்காக நீதி கோரி நடந்த மகிந்தா வடக்கில் அவரே தமிழர்களைக் கொன்று புதைத்தார்




தற்போதைய அரசாங்கம் 'வலிந்து காணாமலாக்கப்படல்' என்ற வார்த்தையைக் கூடப் பயன்படுத்துவதில்லை. இந்த அரசாங்கத்தினாலேயே இதற்குத் தீர்வைப் பெற்றுத் தரமுடியா விடின், வேறு எந்த அரசாங்கத்தில் இதனைச் செய்யமுடியும்? என்று தெற்கைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் காணாமல் போனோர் குடும்ப ஒன்றியத்தின் தலைவரும், சிவில் சமூக செயற்பாட்டாளருமான பிரிட்டோ பேர்னாண்டோ கேள்வி எழுப்பியுள்ளார்.

சுதந்திர ஊடகவியலாளர்களான தரிந்து ஜயவர்தன, தரிந்து உடுவகெதர மற்றும் எம்.எப்.எம்.பஸீர் ஆகியோர் எழுதிய 'செம்மணி' எனும் புத்தகத்தின் வெளியீட்டு நிகழ்வும், அதனைத்தொடர்ந்து 'இலங்கையில் காணாமலாக்கப் பட்டோர் மற்றும் மனிதப்புதைகுழிகள்' எனும் தலைப்பிலான கலந்துரையாடலும் இளம் ஊடகவியலாளர் சங்கத்தினால் கடந்த வியாழக்கிழமை கொழும்பிலுள்ள தேசிய நூலகம் மற்றும் ஆவணப் படுத்தல் சேவை சபை அரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கலந்துரையாடலில் பங்கேற்று கருத்துரைத்த காணாமல் போனோர் குடும்ப ஒன்றியத்தின் தலைவர் பிரிட்டோ பேர்னா ண்டோ மேலும் கூறியதாவது: வடக்கில் இடம் பெற்ற வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளி ட்ட அட்டூழியங்கள் தொடர்பில் தென்பகுதி மக்களுக்குத் தெளிவூட்டும் வகையில் இப்புத்தகத்தை வெளியிட்டமைக்கு முதலில் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இதனை இடைநடுவில் கை விடாமல், தொடர்ந்து முன்னெடுத்துச்செல்லுங்கள்.

நாட்டில் மீண்டும் வலிந்து காணாமலாக்கப்படல்கள் இடம் பெறாதிருக்க வேண்டுமாயின், முதலாவதாகக் கடந்த காலங்களில் வலிந்து காணாமலாக்கப் பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். இவ்விடயத்தில் தெற்கில் கொந்தளிப்பு ஏற்படாமல் வடக்குக்கு நீதி கிடைப்பதற்கான சாத்தியம் மிகக் குறைவு. ஏனெனில் நாம் கடந்த காலங்களில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக பிரசாரங்களை முன்னெடுத்தோம். அவ்வாறிருந்தும் கூட 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தெற்கிலுள்ள பெரும்பான்மை மக்கள் கோட்டாபயவுக்கே வாக்களித்தனர்.

நாமறிந்தவரை தெற்கில் ஜனதா விமுக்தி பெரமுன கிளர்ச்சியின் போது பெரும் எண்ணிக்கை யானோர் மிகமோசமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். சிங்களமொழியைப் பேசக்கூடியவர்கள் வாழும் தெற்கின் நிலைவரம் இவ்வாறிருக்கையில், வடக்கில் என்னவெல்லாம் நடந்திருக்கக்கூடும்? எனவே இது பற்றிய தெளிவூட்டலை சகல தரப்பினர் மத்தியிலும் ஏற்படுத்தி, இதற்கான நீதியை சகலரதும் கோரிக்கையாக மாற்றவேண்டும்.

ஜே.வி.பி கிளர்ச்சியின் போது வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எம்முடன் பேரணியாக நடந்தார். ஆனால் வடக்கில் பலர் கொல்லப்படுவதற்கு அவரே காரணமாக இருந்தார். அதேபோன்று ரணில் விக்ரமசிங்கவும் சித்திரவதைக்கூடங்களை நடாத்தினார். ஆனால் 2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு அவர் இணையனுசரணை வழங்கினார். இவ்வாறானதொரு பின்னணியில் தற்போதைய அரசாங்கம் 'வலிந்து காணாமலாக்கப்படல்' என்ற வார்த்தையைக் கூடப் பயன்படுத்துவதில்லை. இந்த அரசாங்கத்தினாலேயே இதற்குத் தீர்வைப் பெற்றுத் தர முடியாவிடின், வேறு எந்த அரசாங்கத்தில் செய்யமுடியும்? எனக் கேள்வி எழுப்பினார்.

# இலங்கையில் மாறாத கட்டமைப்பு மீறல்கள் பொறுப்புக்கூறல் அவசியத்தை உணர்த்துகிறது!



இலங்கையில் கடந்தகால மனித உரிமை மீறல்களுக்கு வழி வகுத்த கட்டமைப்பு ரீதியான காரணிகள் இன்றும் தொடர்வதை ஐக்கிய நாடுகள் சபையின் சமீபத்திய மனித உரிமைகள் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதிப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார். இந்த அறிக்கை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தின் அவசியத்தை மீண்டும் உறுதிப் படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரை முன்னிறுத்தி வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கை, இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்த ஒரு கவலைக்குரிய சித்திரத்தை முன்வைப்பதுடன், சர்வதேச சமூகம் ஏன் இலங்கை விடயத்தில் தனது கண்காணிப்பைத் தளர்த்தக் கூடாது என்பதற்கான ஒரு எச்சரிக்கை மணியாகவும் உள்ளது.

ஐ.நா. அறிக்கை குறிப்பிடும் கட்டமைப்பு ரீதியான காரணிகள் என்பது தற்காலிகப் பிரச்சினைகள் அல்ல மாறாக, அவை நாட்டின் நிர்வாக, சட்ட மற்றும் பாதுகாப்பு இயந்திரங்களில் ஆழமாக வேரூன்றியுள்ள நீண்டகாலப் பிரச்சினைகளாகும். சர்வதேச கண்டனங்கள் இருந்தபோதிலும், தன்னிச்சையான கைதுகளுக்கும், சித்திரவதைகளுக்கும் வழி வகுக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னும் முழுமையாக நீக்கப்படவில்லை.

போர்க்குற்றங்கள் மற்றும் பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மீது நம்பகரமான விசாரணைகள் இன்றி, அவர்கள் தொடர்ந்தும் பதவிகளில் நீடிக்கப்பட்டுள்ளனர். மேலும் கடந்த கால மீறல்களுக்குப் பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கான முயற்சிகள் இல்லாமை மற்றும் உள்நாட்டு நீதிப் பொறிமுறைகள் தோல்வியடைந்தமை என்பன சர்வதேசத்தின் தலையீட்டை வலியுறுத்துகிறது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதிப் பணிப்பாளர் குறிப்பிடும் ஐ.நா. உயர்ஸ்தானிகரின் பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் என்பது, இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் பாரிய மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைச் சேகரித்து, பாதுகாத்து, பகுப்பாய்வு செய்யும் ஒரு சர்வதேசப் பொறிமுறையாகும். இலங்கை இத்தகைய சர்வதேசப் பொறிமுறைகளைத் தொடர்ச்சியாக நிராகரித்து, நாட்டின் இறைமையில் தலையிடுவதாகக் குற்றம் சுமத்துகிறது. ஆகவே, எதிர்வரும் ஜெனீவா கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான ஒரு புதிய தீர்மானத்தின் மூலம் பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தை மேலும் வலுப்படுத்தவும், அதன் ஆயுட்காலத்தை நீட்டிக்கவும் சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை வலுப்படுத்துகிறது. இலங்கையின் கட்டமைப்பு மாறாத வரை, சர்வதேசத்தின் கண் காணிப்பும் தளரக்கூடாது என மனித உரிமைகள் கண் காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதிப்பணிப்பாளர் மீனாட்சிகங்குலி வலியுறுத்தியுள்ளார்.

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரியை அனைவருக்கும் தெரியும்! அவரை எதிர்கொள்ள இலங்கை சக்தியற்றது - மைத்திரி

கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட ஆட்சி மாற்ற போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீதான தாக்குதல் விசாரணை தொடர்பாக முன்னாள் காவல்துறை அதிபர் தேசபந்து தென்னகோன் அவரது வீட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனிடையே 2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புக்குப் பின்னணியில் உள்ள மூளையாகச் செயல்படும் நபரை எதிர்கொள்ள இலங்கை சக்தியற்றது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி கோத்தபாயவை இலக்கு வைத்தே குற்றச்சாட்டுக்களை மைத்திரிபால சிறிசேன முன்வைத்துள்ளார்.

அந்த நபர் அரசாங்கங்கள், இராணுவம் மற்றும் உளவுத்துறை நிறுவனங்களுக்கு நன்கு தெரிந்தவர் என்றும், ஆனால் அவரை அடைய முடியாது .அது எப்படி நடந்தது என்பது பற்றி நான் சிஐடியிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். ஆனால் அதில் எதையும் பொதுமக்களுக்கு வெளியிட முடியாது. மூளையாகச் செயல்படுபவரைக் கண்டு பிடிக்க அனைவரும் துடிக்கிறார்கள், ஆனால் உண்மை என்னவென்றால் – அது யார் என்பது அவர்களுக்கு ஏற்கனவே தெரியும்.

ஒவ்வொரு அரசாங்கத்திற்கும், இராணுவத்திற்கும், உளவுத்துறைக்கும் தெரியும். மூளையாகச் செயல்படுபவர் எங்கே இருக்கிறார் என்பதை நாம் சொல்ல முடியும் என்றாலும், அவர்களை நாம் எதிர்கொள்ள முடியாது, என்றும் சிறிசேன தெரிவித்துள்ளார்.

இவற்றை விட மேலும் பல அநீதிகள் எமக்கு இழைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறான வேலைத்திட்டங்கள் மூலமாகவே எனது நற்பெயருக்கு இழுக்கு ஏற்படுத்தப்பட்டு எனது அரசாங்கம் கலைக்கப்பட்டு கட்சியும் சீரழிக்கப்பட்டது. இது எவ்வாறு இடம் பெற்றது என்பதை நான் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் தெரிவித்திருக்கின்றேன்.

ஆனால் யாராலும் அதனை வெளியில் கூற முடியாத நிலைமையே காணப்படுகிறது. தற்போது பிரதான சூத்திரதாரியைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்கள் அனைவரும் பிரதான சூத்திரதாரிகள் யார் என்பதை அறிவார்கள்.

சகல அரசாங்கங்களும், இராணுவத்தினரும், குற்றப்புலனாய்வுப் பிரிவினரும் பிரதான சூத்திரதாரிகள் யார் என்பதை அறிவார்கள். சூத்திரதாரி எங்கிருக்கின்றார் எனக் கூறினாலும், எம்மால் அவர்களுடன் மோத முடியாது.

சில சக்தி வாய்ந்த உலகத் தலைவர்கள் மனநலம் பாதிக்கப்பட்டவர்களாகவுள்ளனர். அவர்களால் போர் இல்லாமல் வாழ முடியாது. அவர்களுக்கு போர் மனநிலை மாத்திரமே இருக்கிறது. உதாரணமாக, நெதன்யாகுவைக் குறிப்பிடலாம். அவர் எப்போதும் யாரையாவது தாக்க முயற்சித்துக் கொண்டே இருப்பார்.



இந்தியாவுடன் அண்மையில் கைச்சாத்திடப்பட்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் எதிர்காலத்தில் எமக்கு அச்சுறுத்தலாகவே அமையும் என்பதை பகிரங்கமாகவே கூறுகின்றேன்.

ஜே.ஆர்.ஜெயவர்தனவின் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளோடு இறுதியில் இந்தியா எமக்கு பருப்பு வழங்கியது. பருப்பினை வழங்கி ஜே.ஆர்.ஜெயவர்தன தரப்பினரை அச்சுறுத்தி இந்து லங்கா ஒப்பந்தத்தில் கையெழுத்திடச் செய்தது.

இந்து லங்கா ஒப்பந்தத்தின் பின்னர் என்ன ஆனது? அதனை நடைமுறைப்படுத்துவதற்காக 13ஆவது அரசியமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டது. 13ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் மாகாண சபை சட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் கடந்த 11 ஆண்டுகளாக மாகாணசபைகள் செயற்பாட்டில் இல்லை. 2500க்கும் மேற்பட்ட அதிகாரிகள் வேலையின்றி காலத்தைப் போக்கிக் கொண்டிருக்கின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொழும்பில் கடத்தப்பட்ட 11 தமிழ்இளைஞர்களைப் படுகொலை செய்த கடற்படைத்தளபதியை மைத்திரிபால சிறிசேனா காப்பாற்றினார்



மைத்திரிபால சிறிசேன விடுவித்தார்!.

முன்னாள் கடற்படைத் தளபதி நிசாந்த உலுகேதென்ன கொழும்பில் கடத்தப்பட்ட 11 இளைஞர்களையும் திருகோணமலை நிலத்தடி முகாமில் இருந்ததை பார்வையிட்டுள்ளதாக தகவல் ஒன்றை சட்டத்தரணி அச்சலா செனவிரத்தின தெரிவித்துள்ளார்.

அன்றிருந்த கடற்படைத் தளபதி 11 இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் மேலே வராதப்படி செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார். அத்தோடு முன்னாள் கடற்படை தளபதி ரவீந்திர விஜேயகுணரத்தின சாட்சிகளை மறைக்க உதவி செய்தார்.

வழக்கு விசாரணையின் போது பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பிரசாத் சந்தன எட்டியாரச்சியை வெளிநாடு அனுப்புவதற்கு பண உதவி செய்துள்ளதோடு அவரை கடற்படை தளபதி இருந்த அறையின் பக்கத்தில் தங்க வைத்துள்ளார். இரண்டு வருடம் சாட்சியை வைத்திருந்து வழக்கை ஸ்தம்பிக்க முயற்சியெடுத்துள்ளார்.

அத்துடன் ரவீந்திர விஜேயகுணரத்தின கைது செய்யப்படவிருந்த சந்தர்ப்பத்தில் அப்போதிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதனை தடுத்துள்ளார். முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்ன கடற்படை புலனாய்வு பிரிவுக்கு பொறுப்பாக இருந்த காலப்பகுயில் இளைஞர்கள் கடத்தி வைக்கப்பட்டிருந்த திருகோணமலை முகாமை கண்காணிப்பு செய்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு கோட்டபாய தான் காணாமல் ஆக்கப்பட்டவர் தொடர்பில் விசாரணை நடத்துமாறு கூறினார். ஆனால் அவருக்கே தெரியாமல் போய்விட்டது இந்த விசாரணை இவ்வளவு தூரம் வரும் என்று. அப்போது அவர் போரில் ஈடுபட்ட பாதுகாப்பு தரப்பினரை கைது செய்ய முடியாது என்று விசாரணைகளை நிறுத்த அழுத்தம் கொடுத்தார்.

அப்போது தான் நான் பெற்றோர்கள் சார்பில் முன்னிலையானேன். எமக்கு வழக்கை தொடர்ந்து நடத்த முடியாத நிலைக்கு கொலை அச்சுறுத்தல் மற்றும் விடுதலைப்புலிகள் அமைப்புடன் எனக்கு தொடர்பு இருப்பாத பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. மேலும், அக்காலத்தில் வெள்ளை வான் காலாசாரமும் இருந்த நிலையில் தான் நாங்கள் போராடினோம். அதன் பிறகு நல்லாட்சியில் நீதி கிடைக்கும் என் நினைத்தோம். அதிலும் ஒன்றும் நடக்கவில்லை. தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் பல கோணங்களில் தடைகளை ஏற்படுத்தின.

மேலும் ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கோவிட் காலத்தில் ஊடகங்கள் வாயிலாக எனக்கும் குறித்த பெற்றோர்களுக்கும் பல அவதூறு பரப்புரைகள் செய்யப்பட்டன. 2009 ஆம் ஆண்டின் பின் இருந்த அனைத்து ஜனாதிபதிகளையும் சந்திக்க பெற்றோர்கள் சார்பில் கடிதம் எழுதி சந்தர்ப்பம் கேட்டபோது எவ்வித சந்தர்ப்பமும் வழங்கவில்லை என சட்டத்தரணி அச்சலா செனவிரத்தின மேலும் கூறியுள்ளார்.

## 7 மாதங்களில் 68 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள்! 37 பேர் பலி!

இந்த வருடத்தில் கடந்த 7 மாதங்களில் நாடு முழுவதும் 68 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸ் ஊடகப் பிரிவின் விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு. வுட்லர் இதனைத் தெரிவித்தார்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் 2025.01.01 முதல் 2025.07.13 வரை பதிவாகியுள்ளதாகவும், அவற்றில் 50 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுடன் தொடர்புடையவை என்றும், ஏனைய 18 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களும் தனிப்பட்ட காரணங்களுக்காக இடம் பெற்றுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

மேற்படி 68 துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் 37 பேர் உயிரிழந்ததாகவும், அவர்களில் 34 பேர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் என்றும், துப்பாக்கிச் சூட்டில் 39 பேர் காயமடைந்துள்ளதாகவும், அவர்களில் 30 பேர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். இந்த துப்பாக்கிச் சூடுகள் தொடர்பில் பொலிஸார் நடத்திய விசேட நடவடிக்கைகளின் போது, T56 ரக துப்பாக்கிகள் 23 , கைத்துப்பாக்கிகள் 46 மற்றும் 1,165 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தார் பொலிஸ் ஊடகப்பேச்சாளர்.

இதேவேளை அரகலய போராட்டத்தில் தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கைது செய்யப்பட்டார். அரகலய காலத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக இருந்த டிரான் அலஸின் பின்னணியில் இவர்கள் இயங்கினார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்த பாதாள உலகக் குழுவின் முக்கிய புள்ளியான ஹரக் கட்டாவின் சாட்சியங்களுக்கமைய டிரான் அலஸின் கைதும் இடம்பெற வேண்டும் என்றே கூறப்பட்டது. ஆனால் தற்போது அதற்கான வாய்ப்பு குறைவாக இருப்பதாகவே தெரிவிக்கப்படுகின்றது.

# பொறுப்புக் கூறலுக்கான அர்த்தமுள்ள நகர்வுகளை அநுர அரசு முன்னெடுக்கவில்லை என்பதால் ஆதாரங்களைத் திரட்டும் அதிகாரிகளை அனுமதிக்க வேண்டும்!

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டது முதல் `நல்லிணக்கம்' தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க பலமுறை பேசியிருந்தார். ஆனல் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களை தம்வசம் வைத்திருக்கும் அவரது அரசாங்கம் யுத்த காலப்பகுதியில் இடம் பெற்றது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை வெளிக்காட்டும் வகையில் எந்தவொரு நகர்வையும் மேற்கொள்ளவில்லை. இந்நிலையில் இலங்கை தொடர்பான பொறுப்புக் கூறல் செயற்திட்ட அதிகாரிகள் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கும், விசாரணைகளை முன்னெடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் சாட்சியங்களைச் சந்திப்பதற்கும் அரசாங்கம் இடமளிக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மிக மோசமான சர்வதேசக் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கும், நம்பகரமான உள்ளக பொறுப்புக்கூறல் பொறிமுறை எதுவும் அமுலில் இல்லாத நிலையில் நீதியை அடைந்து கொள்வதற்குப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழி காட்டுவதற்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரின் போது இலங்கை விடயத்தில் பேரவைக்கும், ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கும் வழங்கப்பட்டிருக்கும் ஆணை மேலும் இரு வருடங்களுக்குப் புதுப்பிக்கப்படவேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆட்சி பீடமேறி சுமார் ஒரு வருடம் பூர்த்தியடைந்திருக்கிறது. இலங்கையின் மனித உரிமைகள்சார் கடப்பாடுகளை உரியவாறு நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்திருக்கின்ற போதிலும், கரிசனைக்குரிய முக்கிய மனித உரிமைகள் விவகாரங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான முன்னேற்றமே எட்டப்பட்டுள்ளது. அதேபோன்று மிகப்பாரதூரமான அட்டூழியங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களைப் பொறுத்தமட்டில் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு இன்னமும் தொடர்கிறது.

ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரை நாட்டுக்கு வருகைதருமாறு கடந்த ஜூன் மாதம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் அழைப்பு விடுத்திருந்தது. இருப்பினும் உயர்ஸ்தானிகருடனான சந்திப்பின்போது தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை உறுதி செய்வதிலும், பொருளாதார சவால்களை எதிர் கொள்வதிலும் தாம் கொண்டிருக்கும் கடப்பாடு குறித்தும் ஜனாதிபதி உரையாடினாரே தவிர, பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளை வெளிப்படையாக ஆதரிப்பதற்குத் தவறியிருந்தார்.

அதேவேளை உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் நாட்டுக்கு வருகை தந்திருந்த போது, இலங்கையில் தொடரும் `தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு' எனும் பொறி குறித்து எச்சரித்ததுடன் நீதியை நிலை நாட்டப்படாமையானது வலுவான சமாதானத்தில் சீர்குலைவை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டியிருந்தார். இலங்கையில் ஆட்சிபீடமேறிய அரசாங்கங்கள் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதில் தடையேற்படுத்தியதன் மூலம் பாதிக்கப்பட்டோரின் துன்பத்தை மேலும் ஆழப்படுத்தின. அவ்வரசாங்கங்கள் தாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குத் தவறியதன் காரணமாக உண்மை, நீதி மற்றும் இழப்பீடு வழங்கலை உறுதிப்படுத்தவேண்டிய நிலை மனித உரிமைகள் பேரவைக்கு ஏற்பட்டது. அது மாத்திரமன்றி நீண்ட காலக் காத்திருப்பும், அக்காலப்பகுதியில் முகங்கொடுத்த கசப்பான அனுபவங்களும் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் உள்ளகக் கட்டமைப்புக்களிலும், பொறிமுறைகளிலும் நம்பிக்கை இழப்பதற்கு வழிகோலியிருக்கின்றன. எனவே தற்போதைய அரசாங்கத்தின்கீழும் தொடரும் ஒடுக்குமுறை அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினர் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்துடன் தொடர்புகளைப் பேணிவருகின்றனர்.

ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டது முதல் `நல்லிணக்கம்' தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க பலமுறை பேசியிருந்தார். ஆனல் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களை தம்வசம் வைத்திருக்கும் அவரது அரசாங்கம் யுத்தகாலப்பகுதியில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை வெளிக்காட்டும் வகையில் எந்தவொரு நகர்வையும் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்ட அதிகாரிகள் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கும், விசாரணைகளை முன்னெடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் சாட்சியங்களைச் சந்திப்பதற்கும் அரசாங்கம் இடமளிக்கவேண்டும். அத்தோடு ஜனாதிபதித்தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதியளிக்கப்பட்டவாறு சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து வேறுபட்டவகையில் பொதுக் குற்றவியல் தாக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய செயன்முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

மேலும் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தைப் பொறுத்தமட்டில், நாடளாவிய ரீதியில் மனிதப் புதைகுழிகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு சர்வதேச தொழில்நுட்ப உதவிகளை அனுமதிக்க வேண்டும். அத்தோடு பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக் கூடியவகையில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தை மறுசீரமைக்கவோ அல்லது பதிலீடு செய்யவோ வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

## தோல்வியடைந்த ஒரு சமூகம் எப்படியிருக்கும்?



தோல்வியடைந்த ஒரு சமூகம் எப்படியிருக்கும்?` என புகழ் பெற்ற ரஷ்ய எழுத்தாளரான ஆண்டன் செக்கோவ்விடம் கேட்டபோது இப்படிக் கூறுகிறார்:

தோல்வியடைந்த சமூகங்களில், ஆரோக்கியமாக சிந்திக்கும் ஒவ்வொருவனுக்கும் எதிராக ஆயிரம் முட்டாள்கள் களத்தில் இருப்பார்கள்.

சிந்தனையோடும் கரிசனையோடும் உதிர்க்கப்படும் ஒவ்வொரு சொல்லுக்கும் எதிராக தீவிரமானதும் முட்டாள்தனமானதுமான ஆயிரம் சொற்கள் உதிர்க்கப்படும்.

அங்கே பெரும்பான்மை முட்டாள்தனத்தினாலேயே உருவாக்கப்பட்டிருக்கும்.

எந்த சமூகத்தில் அற்பமான விஷயங்கள் பெரும் தலைப்புகளாக மாற்றப்பட்டு, நல்லுணர்ச்சி பெரும் வகையிலான சிந்தனைகளை எல்லாம் மிகைத்ததாக அவை இடம் பிடித்து இருக்கின்றனவோ, எந்த சமூகத்தில் அதன் களத்தை அற்பர்கள் ஆக்கிரமித்திருக்கிறார்களோ அதுவே தோல்வியடைந்த சமூகமாகும்.

இதுவே இன்றைய தமிழீழத்தினதும் தமிழ் சமூகத்தினதும் நிலையாகும்.

## யாழ்ப்பாணம் தவிர ஏனைய இடங்களில் ஹர்த்தல் வெற்றி!



யாழ்ப்பாணம் தவிர ஏனைய இடங்களில் ஹர்த்தால் வெற்றியளித்துள்ளது என தமிழரசு கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரன் மற்றும் பதில் தலைவர் சி.வி.கே சிவஞானம் ஆகியோர் கூட்டாக அறிவித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் 18 ஆகஸ்ட் 2025 திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தனர். குறித்த ஊடக சந்திப்பில் சுமந்திரன் கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கில் உள்ள இராணுவத்தினரை அகற்றுமாறு கோரிக்கையை முன் வைத்து ஹர்த்தாலுக்கு தமிழரசு கட்சி அழைப்பு விடுத்தது. அதனை ஏற்று வடக்கு கிழக்கில் பெரும்பாலான இடங்களில் ஹர்த்தலுக்கு ஆதரவு கிடைத்திருந்தது. யாழ்ப்பாணத்தில் குறிப்பாக யாழ். நகர் பகுதியில் மாத்திரமே வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தது. அவர்கள் ஆதரவு வழங்காதது மன வருத்தமே .

வடக்கு கிழக்கு முழுவதும் மக்களை ஒன்றிணைந்து போராட்டம் நடாத்த கூடிய கட்சியாக தமிழரசு கட்சியே உள்ளது. அந்த வகையில் நாம் ஹர்த்தலுக்கு அழைப்பு விடுத்தோம். அது வெற்றியை தந்துள்ளது.

எமது ஹர்த்தால் அறிவிப்பு வந்தவுடனையே ஜனாதிபதி , அமைச்சர் பிமல் உள்ளிட்டவர்கள் எம்மை தொடர்பு கொண்டு பேசி இருந்தனர். முத்துஜயன்கட்டு இராணுவ முகாமை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம் என கூறினார்கள். இதுவே வெற்றி.

வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும் அவர்கள் மக்களுடன் மக்களாக இருக்க முடியாது.

தெற்கில் இராணுவ முகாம்கள் உள்ளன. அங்கு அவர்கள் இராணுவ முகாம்களுக்குள் முடங்கி காணப்படுவார்கள். ஆனால் வடக்கு கிழக்கில் அந்த நிலைமை இல்லை. அவர்கள் மக்களோடு மக்களாக மக்களின் இயல்வு வாழ்வில் தலையீடு செய்கின்றனர்.

பாடசாலைகள் தனியார் காணிகள் , ஏன் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றுக்கு சொந்தமான காணியை கூட கையகப்படுத்தி அதில் நிலை கொண்டுள்ளனர். அதனால் அவர்கள் இங்கிருந்து வெளியேற வேண்டும்.

இந்த ஹர்த்தால் ஒரு அடையாள போராட்டமே. இனிவரும் காலங்களில் இராணுவ முகாம்களை அகற்ற கோரி போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்போம்.

வடக்குகிழக்கில் உள்ள பெரும்பாலான உள்ளூராட்சி சபைகள் தமிழரசு கட்சியின் கட்டுப்பாட்டிலையே உள்ளன. அதனால் அந்த அந்த பிரதேசங்களில் மக்களை ஒன்றிணைந்து , அந்த பிரதேசங்களில் உள்ள இராணுவ முகாம்களை அகற்ற கோரி போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுக்கவுள்ளோம்.

பருத்தித்துறை நீதிமன்றுக்கு சொந்தமான காணியில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்ற கோரி, பருத்தித்துறை நகர சபை நகர பிதாவின் அழைப்பில் போராட்டம் நடைபெறவுள்ளது. அவர் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர் என்றாலும் அந்த போராட்டத்திற்கு தமிழரசு கட்சி பூரண ஆதரவை வழங்கும். வடக்கு கிழக்கில் இராணுவ மயமாக்கலுக்கு எதிராக தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றார்.

அதேவேளை குறித்த ஊடக சந்திப்பில் .சி.வி.கே. சிவஞானம் கருத்து தெரிவிக்கையில், முத்துஜயன்கட்டு இளைஞன் கொலையானதும், இளைஞன் தொடர்பாகவும் சில விமர்சனங்கள் உள்ளன அவை எமக்கும் தெரியும். ஆனால் இதனை இராணுவ மயமாக்கலுக்கு எதிரான சுட்டியாக கொண்டே நாம் ஹர்த்தலுக்கு அழைப்பு விடுத்தோம்.

இங்கு நோக்கம் இராணுவ மயமாக்கலை எதிர்ப்பது. எனவே நோக்கம் சரியாக இருப்பின் ஹர்த்தலுக்கு ஆதரவு வழங்க வேண்டும். அதற்கு யார் அழைப்பு விடுத்தார்கள். யார் செய்கிறார்கள் என ஆராயாமல் ஆதரவு வழங்க வேண்டும். இங்கே ஒற்றுமை ஒற்றுமை என கூறி திரிபவர்கள் இந்த விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். நாம் நோக்கம் சரியாக இருந்தால் அதற்காக ஆதரவு கொடுப்பவர்கள். அவ்வாறு ஆதரவு கொடுத்து சென்றாலும் எங்களை தூரத்துவதில் குறியாகவே உள்ளனர். அது தெரிந்தும் நோக்கம் சரியாக உள்ள போராட்டங்களுக்கு ஆதரவு கொடுத்துள்ளோம். போராட்டங்களிலும் கலந்து கொண்டுள்ளோம் என்றார்.

# 60,000 மேலதிக இராணுவத்துடன் காசா நகரில் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது இஸ்ரேல்! பொதுமக்கள் தெற்குப் பகுதிக்கு தப்பியோட்டம்!



காசா நகரில் தரைவழி நடவடிக்கைகளை இஸ்ரேல் தொடங்கியுள்ளது, இதனால் அப்பகுதியில் மீதமுள்ள பொதுமக்கள் தெற்கே தப்பிச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தாக்குதலுக்கு இராணுவம் 60,000 ரிசர்வ் வீரர்களை அழைக்கும் என்றும் அது கூறியுள்ளது.

பொதுமக்கள் மேலும் உயிரிழப்புகளைத் தடுக்க ஐ.நா.வும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன.

21 ஆகஸ்ட் 2025 நேற்று வியாழக்கிழமை காலை காசா நகரில் இஸ்ரேல் தனது தரைவழி நடவடிக்கைகளைத் தொடங்கியதால் , காசா நகரில் தஞ்சம் புகுந்திருந்த லட்சக்கணக்கான பொதுமக்கள் வெளியேறி தெற்கு காசாவில் தஞ்சம் அடைய உத்தரவிடப்பட்டனர்.

காசா நகரத்தின் மீதான தாக்குதலின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளையும், முதல் கட்டங்களையும் நாங்கள் தொடங்கி விட்டோம், ஏற்கனவே ஐ.டி.எஃப் படைகள் காசா நகரத்தின் புறநகர்ப் பகுதியைக் கைப்பற்றியுள்ளன என்று இஸ்ரேலின் இராணுவ செய்தித் தொடர்பாளர் பிரிகேடியர் ஜெனரல் எஃபி டெஃப்ரின் கூறினார்.

காசா நகர தரைவழி நடவடிக்கைக்கு முன்னதாக, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ்,ஏற்கனவே அங்கு பொதுமக்களைப் பாதிக்கும் பல மனிதாபிமான நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு, உடனடியாக போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தார்.

காசாவில் உடனடியாக போர் நிறுத்தத்தை எட்டுவது மிக முக்கியம், அத்தகைய நடவடிக்கையால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் அழிவைத் தவிர்க்க, ஜப்பானில் நடந்த ஒரு மாநாட்டில் குட்டெரெஸ் கூறினார்.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மத்தியஸ்தர்களின் சண்டை நிறுத்த முடிவை புறக்கணித்ததாக ஹமாஸ் குற்றம்சாட்டியுள்ளது. மேலும் அவர் எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் தடையாக இருப்பவர் என்றும் விமர்சித்துள்ளது' என ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் மேற்கோள் காட்டியுள்ளது.

2023அக்டோபர் 7ஆம் தேதியன்று தெற்கு இஸ்ரேல் மீது ஹமாஸ் தலைமையிலான தாக்குதலில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டனர், மேலும் 251 பேர் பிணைக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். இதற்குப் பதிலளிக்கும் விதமாக ஹமாஸ் மீது இஸ்ரேல் இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியது.



அப்பகுதியின் சுகாதாரத்துறை அமைச்சரின் கூற்றுப்படி, காஸாவில் இது வரை 62,122 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அமைச்சகத்தின் இந்த உயிரிழப்பு எண்ணிக்கை மற்றும் புள்ளி விவரங்களை ஐ.நா மற்றும் பிற நாடுகள் மேற்கோள் காட்டுகின்றன.

இஸ்ரேலிய கூட்டாளிகள் பலரும் இதற்கு கண்டனம் தெரிவித்து வருகின்றனர். 'இது இருதரப்பு மக்களுக்கும் பேரழிவையே ஏற்படுத்தும், மேலும் முழு பிராந்தியத்திலும் நிரந்தரமாக போர் சூழல் ஏற்படும் அபாயம் உள்ளது என பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ராங் தெரிவித்துள்ளார்.

மேலும் இடம்பெயரும் சூழல், தீவிரமடையும் விரோதப் போக்கு ஆகியவை காஸாவின் 2.1 மில்லியன் மக்களுக்கு ஏற்கனவே பேரழிவு தரும் சூழ்நிலையை மேலும் மோசமாக்கும் அபாயம் உள்ளது' என சர்வதேச ரெட் கிராஸ் சங்கம் (ICRC) தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் சண்டை நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகள் விடுதலை ஒப்பந்தம் தொடர்பாக ஹமாஸ் உடனான மறைமுகப் பேச்சுவார்த்தைகள் முறிந்ததைத் தொடர்ந்து, முழு காஸா நகரையும் கைப்பற்றும் முடிவை அறிவித்தது இஸ்ரேல் அரசு.



# வடக்கு கிழக்கில் ஹர்த்தால் தினத்தன்று இயல்வு நிலை எப்படி இருந்தது?

வடக்கு கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றக் கோரி தமிழரசு கட்சியினால், பூரண கதவடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் வடக்கின் சில இடங்களில் கதவடைப்பு போராட்டத்திற்கு ஆதரவு வழங்கப்பட்ட போதிலும், பெருமளவான இடங்களில் இயல்பு நிலை சுமுகமாக காணப்பட்டது.

முத்தையன்கட்டு குளத்தில் இருந்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்திற்கும் இராணுவத்தினருக்கும் தொடர்பு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், வடக்கு கிழக்கில் அதிகரித்துள்ள இராணுவ பிரசன்னத்தாலேயே இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுவதாகவும் அதனால் இராணுவத்தினரை வெளியற்றுமாறு கோரி தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம். ஏ சுமந்திரன் வடக்கு கிழக்கில் பூரண கதவடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தார்.

முன்னதாக 15ஆம் திகதி கதவடைப்பு போராட்டம் என அறிவிக்கப்பட்ட நிலையில் அன்றைய தினம் மன்னார் மடு தேவாலய பெருநாள் என்பதால், 18ஆம் திகதிக்கு மாற்றப்பட்டது.

கதவடைப்பு போராட்டத்திற்கு தம்முடன் கலந்து ஆலோசிக்கவில்லை என வர்த்தக சங்கங்கள், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், பொது அமைப்புகள் குற்றம் சாட்டி, போராட்டத்திற்கு ஆதரவு வழங்க மறுத்திருந்தன. இந்நிலையில் திங்கட்கிழமை (18) காலை சில இடங்களில் கடைகள் பூட்டப்பட்டு இருந்தாலும், பல இடங்களில் கடைகள் திறக்கப்பட்டு இருந்தமையும் அவதானிக்க முடிந்தது.

அதேவேளை போக்குவரத்து சேவைகள் வழமை போன்று இயங்கி வந்ததுடன் அரச திணைக்களங்கள், பாடசாலைகள் என்பனவும் வழமை போன்று இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் திங்கட்கிழமை (18) கதவடைப்புக்கு ஆதரவு வழங்கப்படவில்லை என்பதுடன் நகரத்தின் அனைத்து வர்த்தக நிலையங்களும் திறக்கப்பட்டிருந்தன.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் கதவடைப்பு போராட்டம் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் குறித்த கதவடைப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவில்லை. குறிப்பாக பொதுச்சந்தை மற்றும் நகர வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டுள்ள நிலையில் போக்குவரத்துகள் வங்கி செயற்பாடுகள் அனைத்துமே நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா

வடகிழக்கு தழுவிய ரீதியில் கர்த்தால் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் வவுனியாவில் பொதுமக்களின் செயற்பாடுகள் இயல்புநிலையில் காணப்படுவதுடன் சில செயற்பாடுகள் மட்டுமே ஸ்தம்பிதமடைந்திருந்தன. இந்த நிலையில் வவுனியாவில் பொது மக்கள் இயல்பு வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளனர். நகரத்தில் அநேக வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்ததுடன், சில பூட்டப்பட்டும் இருந்தன. பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகள் வழமை போல இடம் பெற்றது. மாணவர்களின் வரவு குறைந்திருந்தது. வங்கிகள் ஏனைய நிறுவனங்களின் செயற்பாடுகள் வழமை போல உள்ளன.




இதேவேளை, கர்த்தால் போராட்டத்திற்கு வவுனியா உள்ளூர் விளை பொருள் உற்பத்தியாளர் சங்கம் தனது முழுமையான ஆதரவினை வழங்கியுள்ளதுடன், அவர்களது மொத்த வியாபார சந்தைக் கடைத் தொகுதி முழுமையாக மூடப் பட்டிருந்தன.

இதேவேளை பழைய பேருந்து நிலையம் மற்றும் பசார் வீதியில் உள்ள இஸ்லாமிய வியாபார நிலையங்களில் குறிபிட்ட அளவிலான வர்த்தக நிலையங்கள் மட்டும் திறந்திருந்தன. புறநகரப்பகுதிகளான குருமன்காடு, செட்டிகுளம், நெடுங்கேணி, கனகராயன்குளம், புளியங்குளம் பகுதிகளில் அனேகமான வர்த்தக நிலையங்கள் திறந்திருந்ததுடன், சில வர்த்தக நிலையங்கள் கர்த்தாலுக்கு ஆதரவினை தெரிவித்து பூட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவு

முல்லைதீவில் ஹர்த்தாலால் திங்கட்கிழமை (18) வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதுடன், தனியார் பொதுப் போக்குவரத்தும் முடங்கியது.



## கிழக்கில் ஆதரவும் புறக்கணிப்பும்

வடக்கு கிழக்கில் இராணுவ பிரசன்னம் முடிவுக்கு வர வேண்டும் என்றும் வடக்கு கிழக்கில் தொடர்ச்சியாக நிலவும் இராணுவ பிரசன்னத்திற்கும், அதனால் ஏற்படும் பாதிப்புக்களுக்கும் எதிர்ப்பு தெரிவித்தும் இன்று கிழக்கிலும் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் இராணுவ பிரசன்னம் முடிவுக்கு வரவேண்டும் என்றும் வடக்கு கிழக்கில் தொடர்ச்சியாக நிலவும் இராணுவ பிரசன்னத்திற்கும், அதனால் ஏற்படும் பாதிப்புக்களுக்கும் எதிர்ப்பு தெரிவித்தும் கிழக்கிலும் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

## திருகோணமலை



திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை, வெருகல், மூதூர் கிழக்கு, புல்மோட்டை பிரதேசங்களில் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. திருகோணமலையில் பாடசாலைகளும் ஸ்தம்பித்ததுடன் மாணவர்களின் வரவில் வீழ்ச்சி காணப்பட்டது.

இதேவேளை திருகோணமலையில் மத்திய பொதுச்சந்தை, மத்திய பேருந்து நிலையம் , வங்கிகள், நிதி நிறுவனங்கள், கூட்டுறவு கடைகள், அரச நிறுவனங்கள் வழமை போன்று இயங்கின.

## தம்பலகாமம்

திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் பகுதியிலும் திங்கட்கிழமை (18) ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. தம்பலகாமம் பகுதியில் பெரும்பாலான கடைகள் மூடப்பட்டும் ஒரு சில கடைகள் திறக்கப்பட்டிருந்தன. இதன் போது மக்களின் நடமாட்டமும் குறைந்து வீதி வெறிச்சோடி காணப்பட்டது. வடகிழக்கில் பூரணமான ஹர்த்தால் அனுஷ்டிப்பு இடம் பெற்ற நிலையில் தம்பலகாமம் வர்த்தகர்களும் ஆதரவை வழங்கியுள்ளனர்.

## களுவாஞ்சிக்குடி

களுவாஞ்சிக்குடி பகுதியில் பொதுச் சந்தை மற்றும் வர்த்தக நிலையங்கள் திங்கட்கிழமை (18) முற்றாக மூடப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் விடுக்கப்பட்ட ஹர்த்தாலுக்கு இணங்க மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி நகரப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. களுவாஞ்சிகுடி பொதுச் சந்தைத் தொகுதி மற்றும் பிரதான வீதியை அண்டியுள்ள வர்த்தக நிலையங்கள், என்பன பூட்டப்பட்டுள்ளன.

எனினும் உணவகங்கள், மருந்தகங்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், வங்கிகள், பாடசாலைகள், அரச அலுவலகங்கள் என்பன வழமை போன்று இயங்கி வருவதோடு, கிராமங்களிலுள்ள உள்ளூர் வர்த்தக நிலையங்களும் வழமை போன்று செயற்பட்டு வந்தது. மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதையும், போக்குவரத்துக்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை

இராணுவ பிரசன்னத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் அனுஸ்டிக்குமாறு இலங்கை தமிழரசுக் கட்சி விடுத்த வேண்டுகோளினை ஏற்று அம்பாறை மாவட்டத்தில் தமிழர் செறிந்து வாழும் பகுதியில் ஹர்த்தால் திங்கட்கிழமை (18) அனுஸ்டிக்கப்பட்டது. அம்பாறை மாவட்டத்தின் பெரிய நீலாவணை , பாண்டிருப்பு சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, கல்முனை, காரைதீவு, சம்மாந்துறை, மல்வத்தை நாவிதன்வெளி மத்தியமுகாம், அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், தம்பிலுவில், கோமாரி, தம்பட்டை பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன.

இருந்த போதிலும் பொதுப் போக்குவரத்து வழமை போன்று இப்பகுதியில் நடைபெற்றதை அவதானிக்க முடிந்தது. இது தவிர தனியார் அரச வங்கிகள் வழமை போன்று இயங்கியதுடன் தனியார் நிறுவனங்கள் அரச திணைக்களங்களும் மக்கள் சேவைக்காக திறக்கப்பட்டன.

இராணுவ பிரசன்னத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் இந்த ஹர்த்தாலுக்கு அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் மற்றும் வணிக பிரதிநிதிகள் உட்பட பல்வேறு தரப்பினர் முழுமையான ஆதரவு வழங்கினர்.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

15 ஆகஸ்ட் 2025 முதல் 22 ஆகஸ்ட் 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளு கின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 35வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம்

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 35வது ஆண்டு நினைவு நாள் 26 ஆகஸ்ட் 2025 விநாயகர் சதுர்த்தி தினமான செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர், சகோதர்கள் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 37வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சிவபாக்கியநாதன் கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாணம் தொல்புரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களது 37வது ஆண்டு நினைவு நாள் 26 ஆகஸ்ட் 2025 விநாயகர் சதுர்த்தி தினமான செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்ல க்குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை

புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் சாவகச்சேரி, கனடா ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த சாவகச்சேரி ரஞ்சனா கபே உரிமையாளர் திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாள் 22 ஆகஸ்ட் 2025 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 23வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பிராஜா ஞானானந்தன்

வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 23வது ஆண்டு நினைவு நாள் 21 ஆகஸ்ட் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 24வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி விநாசித்தம்பி தங்கம்மா

புங்குடுதீவு 10ம்வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது 24வது ஆண்டு நினைவு நாள் 28 யூலை 2025 திங்கட் கிழமையாகும். அன்றையதினம் அன்னாரின் குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31வது 5வது ஆண்டு நினைவஞ்சலிகள்



### திரு சின்னப்பு சிங்கநாயகம்


### திருமதி பரிமளம் சிங்கநாயகம்

தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சின்னப்பு சிங்கநாயகம் அவர்களது 31வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் திருமதி பரிமளம் சிங்கநாயகம் அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக 22 ஆகஸ்ட் 2025 வெள்ளிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு திருமதி சிங்கநாயகம் பரிமளம் இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



26 யூலை 2025 சனிக்கிழமை கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தவசீலன் சுப்பையா அவர்களது 3வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



28 யூலை 2025 திங்கட்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது 24வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




30 யூலை 2025 புதன்கிழமை கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த வதனி என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி பிறிட்டிக்கா சுகுமார் அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




02 ஆகஸ்ட் 2025 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




02 ஆகஸ்ட் 2025 சனிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு துரைராஜா குமாரசாமி அவர்களது 34வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




07 ஆகஸ்ட் 2025 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சோமநாத் துர்க்கா தம்பதிகளின் செல்வப்புதல்வி ஜெசியாவின் 8வது இனிய பிறந்த நன்நாளுக்காகவும் செல்வப் புதல்வன் ஜெரியானின் 11வது பிறந்த நன்நாளுக்காகவும் சகோரங்கள் இருவரும் தமது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு ம் இனிப்புகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்





11 ஆகஸ்ட் 2025 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கீர்த்தன் மயூரிகா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஈசான் கீர்த்தனின் இரண்டாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் ஈசான் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




13 ஆகஸ்ட் 2025 அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலம் சுப்பிரமணியம் அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




13 ஆகஸ்ட் 2025 அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வன் முகுந்தன் குலசிங்கம் அவர்களது 23வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




14 ஆகஸ்ட் 2025 வியாழக்கிழமை ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா காசிலிங்கம் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





20 ஆகஸ்ட் 2025 புதன்கிழமை மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி உமாகாந் உசாந்தினி இணையர்களது 15வது இருமன இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




20 ஆகஸ்ட் 2025 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலச்சந்திரன் கோகுலவாணி தம்பதிகளின் செல்வப்புதல்வி அபிராமி பாலச்சந்திரனின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி அபிராமி தனது பெற்றோர் சகோதரனுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




21 ஆகஸ்ட் 2025 வியாழக்கிழமை வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 23வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 ஆகஸ்ட் 2025 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 1ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது 6வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 ஆகஸ்ட் 2025 வெள்ளிக்கிழமை தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சின்னப்பு சிங்கநாயகம் அவர்களது 31வது ஆண்டு நினைவாகவும் திருமதி பரிமளம் சிங்கநாகம் அவர்களது 5வது ஆண்டு நினைவாகவும் அன்னார்களது குடும்பத்தினர் அன்றையதினம் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# மனிதஉரிமைகள் ஆணையாளரின் இறுதி செய்யப்படாத அறிக்கை!

(21ம் பக்கத் தொடர்ச்சி) புதிய அரசாங்கம் ஏதாவது மாற்றத்தை காட்டும் பொறுப்புக் கூறும் என்ற நம்பிக்கையினாலா? எதிர்பார்ப்பினாலா? இரண்டுமே இல்லை. முழுக்க முழுக்க புவிசார் அரசியல் நிலைப்பாடு அது. ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வர இருந்த பின்னணியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இதயமாக கருதப்படுபவர்களில் ஒருவராகிய ரில்வின் சில்வா சீனாவுக்கு போயிருந்தார்.

சீன சார்பு இடதுசாரி மரபில் வந்த ஜேவிபியை அடித்தளமாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தியானது இலகுவாக சீனாவின் செல்வாக்குக்குள் விழுந்து விடலாம் என்ற பயம் மேற்கு நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் உண்டு. நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வந்ததும் வடக்குக்கு முதலில் வந்த தூதுவர் சீன தூதுவர் தான்.

தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தி வழங்கிய ஆதரவை அவர் சிலாகித்துப் பாராட்டி இருந்தார். எனவே சீனா தெளிவான செய்தியை ஐநாவுக்கும் இந்தியாவுக்கும் மேற்கு நாடுகளுக்கும் ஏற்கனவே வழங்கி விட்டது. சீனாவை நோக்கி இலகுவாகச் சாயக்கூடிய, சீன இடது சாரிப் பாரம்பரியத்தில் வந்த அரசாங்கத்தை அதிகம் பகை நிலைக்குத் தள்ளக் கூடாது என்று மேற்கும் ஐநாவும் இந்தியாவும் சிந்திக்கின்றன. ஒரு கட்டத்துக்கு மேல் நிர்பந்தித்தால் தேசிய மக்கள் சக்தி சீனாவை நோக்கி அதிகமாகப் போய்விடும். எனவே ஐநா இலங்கை அரசாங்கத்தை பொறுப்பு கூறுமாறு நிர்பந்தித்தால்,நெருக்கினால் சீனா இலங்கை அரசாங்கத்தைத் தத்தெடுத்து விடும் என்ற பயம் அவர்களுக்கு உண்டு. இது தான் பிரச்சினை. இது தான் பிரதான காரணம்.

பொறுப்புக் கூறலை இலங்கை அரசுக் கட்டமைப்பின் தலைக்கு மேல் நிரந்தரமாகத் தொங்கும் ஒரு கத்தி போல வைத்திருப்பதன் மூலம், ஏற்கனவே சீனாவின் செல்வாக்கு வலையத்துக்குள் சென்று விட்ட இச்சிறிய தீவின் மீது தமது பிடியை உறுதிப்படுத்துவதுதான் மேற்கத்திய,ஐ நா வியுகங்களின் நோக்கம். இந்தியாவின் நோக்கமும் அது தான். இப்படிப்பட்ட ஒரு பின்னணிக்குள் இந்த இடத்தில் தேசிய மக்கள் சக்தி அல்ல எந்த புரட்சிகரமான அரசாங்கம் வந்தாலும் இது தான் நடக்கும். அதாவது பொறுப்பு கூறல் என்ற விடயம் ஒரு ராஜதந்திரக் கருவியாக மாறிவிட்டது என்பதே உண்மையாகும்.

# NPP + தமிழ் பேசும் கட்சிகள் பொறுப்பும் கூட்டுப் பொறுப்பும்

(13ம் பக்கத் தொடர்ச்சி) குறிப்பாக அரசாங்கத்தின் அழைப்பையும் நல்லெண்ணத்தையும் ஏன் புறக்கணிக்கிறீர்கள் என்ற கேள்வியை மக்களிடம் எழுப்பும்.

இப்பொழுது கூட இரண்டு தரப்புக்கும் (அரசாங்கம் {NPP — தமிழ் பேசும் தரப்புகள்) காலம் கடந்து விடவில்லை. பரஸ்பரம் இரண்டு தரப்பும் சுமுகம் கொள்வதற்கான வழிகளைத் தேடலாம்.

NPP ஏற்றுக்கொள்ளவே முடியாத சக்தி என்றால், ஐ.தே.கவை அல்லது சு.கவை அல்லது பெரமுனவை அல்லது ஐக்கிய மக்கள் சக்தியை ஏற்றுக் கொள்ளப் போகிறீர்களா? இவை தானே முன்பு ஆட்சியில் இருந்தன. இவற்றோடு குறைந்தளவிலேனும் உரையாடப்பட்டது. உறவாடப்பட்டது. ஏற்பட்ட விளைவு?

ஐ.தே.க, சு.க, பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி போன்றவற்றை விட NPP ஆபத்தானதா?

NPP தவறு என்றால் அடுத்த தெரிவு என்ன? அதைப் போல தமிழ் பேசும் சக்திகளைப் புறக்கணித்து விட்டு, இந்த நாட்டில் எத்தகைய தீர்வை எட்ட முடியும்? எத்தகைய முன்னேற்றத்தை உருவாக்கலாம்?

இந்த நாட்டில் மாற்றம் வேண்டும் என்றால், அது தனியே NPP யில் மட்டும் நிறைவேறக் கூடியதல்ல. அனைத்துத் தரப்பினதும் அனைத்துச் சமூகங்களினதும் பங்களிப்புடன் தான் ஏற்படக்கூடியது. அதற்கான கதவுகளை (வாசல்களை) திறக்க வேண்டிய பொறுப்பு Responsibility (கடப்பாடு Obligation) அனைவருக்கும் உண்டு.

ஆயிரம் உண்டிங்கு ஜாதி — எனில்

அன்னியர் வந்து புகல் என்ன நீதி? — ஓர் தாயின் வயிற்றில் பிறந்தோர் — தம்முள்

சண்டை செய் தாலும் சகோதரர் அன்றோ? பாரதி பாடல் சொல்கின்ற இந்த உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். இலங்கைச் சமூகங்கள் தங்களுக்கிடையில் இணக்கம் கொள்ளவில்லை என்றால், ஒருங்கிணையவில்லை என்றால். இலங்கையில் பன்மைத் தன்மைக்கான இடமில்லை என்றால், அந்திய சக்திகள் (வெளியார்) (The forces of darkness – outsider) ஆதிக்கம் செய்யவே வழியேற்படும். அது இலங்கையை வெளியாரிடம் அடிமைப்படுத்துவதாகவே அமையும். என்ன செய்யப் போகிறோம்?



# NPP + தமிழ் பேசும் கட்சிகள் பொறுப்பும் கூட்டுப் பொறுப்பும்

வரலாற்றில் ஒரு மாற்றுத் தரப்புஎன்ற அறிவிப்போடும் அடையாளத்தோடும் அதிகாரத்தில் ஆட்சியில் இருக்கிறது NPP. அது மாற்றுத் தரப்பா, இல்லையா? அது பிரகடனப்படுத்தியதைப் போல முறைமை மாற்றத்தை (System change) மெய்யாகவே நடைமுறைப்படுத்துகிறதா?

தன்னுடைய ஆட்சிக் காலத்தில் மாற்றங்களை நிச்சயமாகச் செய்யுமா? செய்யாதா? NPP சுயாதீனமாக இயங்கக் கூடியதாக இருக்கிறதா? அல்லது அதை JVP கட்டுப்படுத்தித் தன்னுடைய பிடியில் வைத்திருக்கிறதா? அல்லது NPPயும் ஏனைய ஆட்சியாளர்களைப் போலத்தான் இயங்குகின்றதா சிந்திக்கின்றதா? அதை மீறிச் செயற்படுமா? என்ற சந்தேகங்கள், விமர்சனங்கள், விவாதங்கள் எல்லாம் எல்லோருக்கும் உண்டு.

ஆனாலும் ஆட்சியில் (அதிகாரத்தில்) பெரும்பான்மை பலத்தோடு NPPயே இருக்கிறது என்பது ஏற்றுக் கொள்ள வேண்டிய — மறுக்க முடியாத — உண்மை. இந்த உண்மையிலிருந்தே நாம் விடயங்களை அணுக வேண்டும்.

இந்த உண்மையை ஏற்றுக் கொண்டபடியால் தான் இந்தியா பல வழிகளிலும் NPP அரசாங்கத்தோடு ஒத்துழைக்கிறது. அநுர குமாரதிசநாயக்கவுக்கு புதுடெல்லி அளித்த உற்சாகமான வரவேற்பிலிருந்து இதைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்தியா மட்டுமல்ல, சீனா, மேற்குலக நாடுகள், அரபுதேசங்கள் எல்லாம் NPP அரசாங்கத்துடன் சீரான உறவையே கொண்டிருக்கின்றன. IMF, ADB என சர்வதேச நிதி நிறுவனங்களும் UN போன்ற சர்வதேச அமைப்புகளும் NPP ஆட்சியுடன் இணைந்தே பயணிக்கின்றன.

விருப்பமோ விருப்பமில்லையோ மக்களால் தெரிவு செய்யப்பட்ட தரப்புத்தான் ஆட்சியிலிருக்கும். அந்தத் தரப்புடன் தான் தொடர்பு கொள்ள முடியும். அதனோடு இணைந்தே எதையும் செய்ய முடியும்.

பெரும்பான்மை மக்கள் (இந்தப் பெரும்பான்மை வேறு. சிங்கள மக்கள் மட்டுமல்ல, தமிழ்பேசும் மக்களிலும் கணிசமானவர்கள்) NPP யையே ஆட்சியமைப்பதற்குத் தெரிவு செய்துள்ளனர். ஆகவே அந்த மக்களுடைய தெரிவின் அடிப்படையிலே, அதற்கு மதிப்பளித்தே இந்தத் தரப்புகள் எல்லாம் NPP ஆட்சியுடன் தொடர்புறுகின்றன் தம்முடைய வேலைகளைச் செய்கின்றன. இதைத் தவிர்க்க முடியாது.

இங்கே இந்தத் தரப்புகள் கவனத்திற் கொள்வது, தம்முடைய தொடர்பைப் பேணுவதையும் தம்முடைய வேலைகளைச் செய்வதையும் பற்றியே. இதற்காக NPP அரசாங்கத்தை ஆட்சியிலிருக்கும் தரப்பை எப்படிக் கையாள்வது என்பதையே சிந்திக்கின்றன. அதற்கப்பால் எதைப்பற்றியும் அவை சிந்திக்கவில்லை.

ஆனால் தமிழ் பேசும் தரப்புகளோ தமக்கு முன்னே உள்ள துலக்கமான உண்மையையும் யதார்த்தத்தையும் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளன. அதனால் உண்மைக்கும் யதார்த்தத்துக்கும் மாறாகவே சிந்திக்கின்றன் செயற்படுகின்றன என்பதால் தான் NPP ஐ எதிர்ச்சக்தியாகவே பிரகடனப்படுத்தி வைத்துக் கொண்டு அதனுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கின்றன.

இதனால் அரசாங்கத்துக்கு (ஆட்சிக்கு) முற்றிலும் வெளியிலேயே தமிழ் பேசும் தரப்புகள் நிற்கின்றன. அரசாங்கத்துக்கு வெளியே என்பதை, 'அரசாங்கத்தை எந்த நிலையிலும் தொடர்பு கொள்ள முடியாத நிலையில்' என்று பொருள் கொள்ள வேண்டும்.

இங்கே ஒரு ஆழமான உண்மையை உணருவது அவசியம்.

சுதந்திர இலங்கையில் முதற்தடவையாக இப்போது தான் தமிழ்பேசும் தரப்புகள் முற்றாகவே ஆட்சிக்கு வெளியே நிற்கின்றன. இதற்கு முன்பெல்லாம் எப்படியாவது சில கட்சிகள் ஆட்சியில் பங்கேற்கும். அது சரியானதா பிழையானதா என்பதல்ல இங்கே உள்ள விடயம். இங்கே



கவனித்திற்குரியது. அப்படிச் சில கட்சிகளாவது அரசாங்கத்தோடு (ஆட்சித்தரப்போடு) இணைந்து நின்றதால் பங்கேற்றதால் அந்தந்தச் சமூகங்கள் முழுச் சுமையிலிருந்து அல்லது முழுமையான நெருக்கடியிலிருந்து தப்பியிருந்தன. இப்போது தமிழ்பேசும் தரப்புகள் மொத்தமாக வெளியே ஆட்சித் தரப்புக்கு எதிராக நிற்பதால், ஒட்டுமொத்தத் தமிழ்பேசும் சமூகங்களின் நலன்களும் உரிமைகளும் கேள்விக்குள்ளாகியுள்ளன. NPP எந்தளவுக்கு நியாயத்தோடும் விட்டுக் கொடுப்போடும் நடந்து கொள்ளுமோ அதைப் பொறுத்தே இந்தச் சமூகங்களின் நலன்களும் உரிமைகளும் பேணப்படும். இதில் NPP யில் உள்ள தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களும் NPP ஐ ஆதரிக்கும் தமிழ்பேசும் சமூகத்திலுள்ள நபர்களும் ஏதாவது செல்வாக்கைச் செலுத்தினால் சற்றுக் கூடுதலாக ஏதாவது நடக்கலாம்.

ஆனால் அதற்குரிய வல்லமையை அவர்களிடம் காணவில்லை. ஆகவே தமிழ்பேசும் சமூகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கட்சிகளும் NPP யுடன் கொள்ளும் தொடர்பும் உறவும் அதைக்கையாளும் முறையுமே இந்தச் சமூகங்களின் வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்கும். ஆனால் NPP ஐக் கையாளத் தெரியாமலே தமிழ்பேசும் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் உள்ளன. (இதே நிலையிற் தான் NPP யும் உள்ளது. இதைப்பற்றிப் பின்னர் சற்று விரிவாகப் பார்க்கலாம்).

ஆக, தமக்கு முன்னே உள்ள உண்மையையும் யதார்த்தத்தையும் புரிந்து கொள்ளத் தவறினால் அல்லது புரிந்து கொள்ள முடியாமல் போனால் அது எதிர்மறையான விளைவுகளையே உண்டாக்கும்.

இதுவே தமிழரின் அரசியலில் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது. இந்தியாவுடன் விடுதலைப்புலிகள் பகைத்துக் கொண்டதும் இலங்கை அரசுடன் தமிழ்த்தேசியவாதக் கட்சிகள் தொடர்ச்சியாகவே எதிர்ப்பு அரசியலை மேற் கொள்வதும் இவ்வாறான கையாள்கையின் தவறுகளாலேயே.

அரசியலில் கையாள்கை என்ற சொல்லை Handling Diplomacy Strategy என்றே கொள்ள வேண்டும்.

இவை அனைத்தும் கலந்ததாகவே 'கையாள்கை'யின் செயற்பாட்டுத் தன்மை இருக்கும். தமிழரின் அரசியலில் 'கையாள்கை' என்பது படுதோல்வியான விசயம். இப்பொழுது இந்தச் சுழிக்குள் மலையக, முஸ்லிம் கட்சிகளும் சிக்கியுள்ளன. இதற்குக் காரணம், தேசியம் (Nationalism) என்பதை இவை தவறாகப் புரிந்து கொண்டு இனவாதமாக (Racism) மடைமாற்றம் (Metamorphosis) செய்திருப்பதேயாகும். இந்தத் தவறை நீண்டகாலமாவே செய்தது தமிழ்த் தரப்பே. பின்னாளில் இதில் முஸ்லிம், மலையகச் சக்திகளும் இணைந்து கொண்டன. என்பதால்தான் இவற்றினால் அரசோடு பேசவே முடியாதிருக்கிறது. இப்பொழுது அனைத்தும் எதிர்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இதை அந்தக் கட்சியின் தலைவர்கள் மறுக்கலாம். ஆனால், உண்மை இது தான். இதை காலம் கடந்து அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

இங்கே இன்னொரு கடினமான — அவசியமான உண்மையைக் கவனிக்க வேண்டும். NPP என்பது தனியே ஆட்சியை நடத்தும் தரப்பு அல்லது கட்சி மட்டுமல்ல. அது பெரும்பான்மையான மக்களின் தரப்பாகும். முந்திய ஆட்சித் தரப்புகளைப் போலன்றி தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் செல்வாக்கையும் (ஆதரவையும்) பெற்ற தரப்பாக உள்ளது. அத்துடன் பாராளுமன்றத்தில் அது அறுதிப் பெரும்பான்மையைக் கொண்டுள்ளது. அது தான் சர்வதேச சமூகத்தின் பாதியுமாகும். எப்படியென்றால், அரசாங்கத்தைக் கடந்து எந்த வெளிச்சக்தியும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாது. அப்படித் தலையிட்டாலும் அதற்கு வரையறைகள் உண்டு. ஆகவே NPP யுடன் அல்லது அரசாங்கத்துடன் எதிர்த்து நிற்பதோ விலகி நிற்பதோ சர்வதேச சமூகத்தோடும் விலகி நிற்பதாகவே யதார்த்தத்தில் அமையும்.

அரசாங்கத்தை ஆட்சித் தரப்பைப் பகைத்துக் கொண்டு வெளிச்சமூகம் அரசுக்கு வெளியே நிற்கும் தமிழ்பேசும் தரப்போடு எந்த வேலைகளையும் செய்யாது. வேண்டுமானால் வழமையைப் போலச் சம்பிரதாயமாக அவ்வப்போது சந்திப்புகளைச் செய்யலாம். ஏதாவது உரையாடலாம். நடைமுறையில் அவற்றினால் எந்தப் பயனும் குறிப்பிடக்கூடிய நன்மைகளும் கிட்டாது.

ஆகவே NPPயின் ஆட்சியை எதிர்த்து நிற்பதென்பது, ஒரே நேரத்தில் அரசாங்கம், வெளிச்சமூகம், பெரும்பான்மை மக்கள் ஆகிய மூன்று தரப்பையும் எதிர்த்து நிற்பதாகும்.

அப்படியென்றால், NPP என்ன செய்தாலும், எப்படிச் செயற்பட்டாலும் அதைக் கண்மூடித்தனமாக எந்த விதமான நிபந்தனையும் இல்லாமல் ஏற்றுக் கொள்வதா? என்ற கேள்வியை ஒரு குண்டாக யாரும் தூக்கிப் போடலாம்.

NPP இன்னும் பொறுப்புக் கூறும் ஒரு ஆட்சித் தரப்பாக மாறவில்லை என்பது உண்மையே. அப்படி மாறியிருந்தால், ஏற்கனவே சொல்லப்பட்டதைப் போல, அரசாங்கத்தை நிர்வகிக்கும் ஆட்சியை நடத்தும் தரப்பு, மாற்றங்களைச் செய்ய விரும்பும் தரப்பு, மக்கள் நலனை முன்னிறுத்தும் தரப்பு, பன்மைத்துவத்தை அங்கீகரிக்கும் தரப்பு, பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண விரும்பும் தரப்பு, ஒட்டுமொத்தமாக ஒரு மாற்றுச் சக்தி என NPP பொதுவாகக் கருதப்படுவதால் தமிழ்பேசும் தரப்புகளை தமிழ்பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளை NPP இணக்கமான முறையில் அணுக வேண்டும்.

ஏனென்றால் NPP இப்பொழுது ஒரு அணியோ கட்சியோ அல்ல. அது ஆட்சியிலிருக்கும் தரப்பு. ஆட்சியிலிருக்கும் தரப்பு அதற்குரிய பொறுப்போடும் கடமைகளோடும் கண்ணியத்தோடும் இருக்க வேண்டும். அது கட்சி ஒன்றைப் போலச் செயற்படக் கூடாது. கட்சியாகச் செயற்படவும் முடியாது. ஏற்கனவே ஆட்சியிலிருந்த ஐ.தே.க, சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன போன்றவை அப்படித் தவறாக (கட்சியாக) செயற்பட்டதன் விளைவே கடந்த காலத் துன்பியல் வரலாறும் இலங்கையின் வீழ்ச்சியுமாகும்.

இந்தப் படிப்பினைகளிலிருந்து NPP உண்மையாகவே எதையாவது படித்திருந்தால், அது கட்சி என்ற உணர்விலிருந்து விடுபட்டு, பொறுப்புடைய அரசாங்கத் தரப்பாகவே தான் உள்ளேன் என்று கருதிச் செயற்படும். தன்னுடைய பொறுப்புக் கூறலை, இணக்க நடவடிக்கைகளை, மாற்றத்துக்கான செயற்பாடுகளை, தீர்வுக்கான முயற்சிகளை ஆரம்பித்திருக்கும்.

பொறுப்புக் கூறல் என்பது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான, காயங்களை ஆற்றக் கூடிய, எதிர் முகாம்களை இணக்கத்துக்குக் கொண்டு வரக்கூடிய, அனைவருக்கும் நம்பிக்கை அளிக்கக்கூடிய சிறப்பான ஒரு முன்னாரம்ப நடவடிக்கையாகும். அப்படிப் பொறுப்புக் கூறும் தரப்பாக, பிரச்சினைகளைத் தீர்க்க விரும்பும் தரப்பாக NPP செயற்படுமாக இருந்தால், அது எத்தகைய அரசியல் தவறுகளைத் தமிழ்பேசும் தரப்புகள் விட்டாலும் அதைக் கடந்து, அவற்றைச் சுமுகமாக்க முயன்றிருக்கும். இந்த ஓராண்டு ஆட்சிக் காலத்துள் அனைத்துத் தமிழ் பேசும் தரப்போடும் குறைந்த பட்சம் ஒரு சம்பிரதாயபூர்வமான சந்திப்பையாவது மேற் கொண்டிருக்கும். அதாவது பொருத்தமான அணுகு முறையின் மூலம் தமிழ்பேசும் தரப்புகளைக் கையாண்டிருக்கும். அதில் வெற்றி கொண்டிருக்கும். ஒரு மாற்றுச் சக்தியானால் அதுவே நிகழ்ந்திருக்க வேண்டியது.

NPP யின் அழைப்பையும் நல்லெண்ண முயற்சிகளையும் தமிழ்பேசும் தரப்புகள் புறக்கணித்தால் அல்லது தவிர்த்தால் அது NPP க்கே மதிப்பைக் கூட்டும். பதிலாக தமிழ்பேசும் தரப்புகளுக்கு நெருக்கடியை உண்டாக்கும். (12ம் பக்கம் பார்க்க)

# ஹர்த்தால்:- தனிநபர்களின் தோல்வியும் சமூகங்களின் வெற்றியும்

- அழகு குணசீலன் -

முத்தையன்கட்டு குளத்தில் மீட்கப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலம், அவரது மரணம் குறித்து பல்வேறு கேள்விகளையும், சந்தேகங்களையும் எழுப்பியிருக்கிறது. இந்த நிலையில் ஆரம்பத்தில் இளைஞனின் கொலைக்கு இராணுவமே காரணம் என்று பெரும்பாலானவர்கள் நம்பிய நிலையிலேயே, தமிழரசுக்கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனின் ஹர்த்தால் அழைப்பு வெளியானது. சுமந்திரனின் இந்த அழைப்பு தனிநபர் அழைப்பு என்பதே மக்களதும், பொது அமைப்புக்கள், கட்சிகளின் நிலைப்பாடாக ஆரம்பம் முதல் இன்று வரை இருக்கிறது.

இடையில் இது குறித்த விசாரணைகள் வேறு பல குற்றவியல் உண்மைகளை வெளிப்படுத்தி உள்ளன. இந்த உண்மைகள் மரணம் குறித்து மக்களுக்கு இருந்த ஆத்திரத்தை தணித்தன. இராணுவ பக்கம் நீட்டப்பட்ட சுட்டுவிரலை மக்கள் சம்பந்தப்பட்ட இளைஞர்கள் பக்கம் திருப்பினர். இதனால் அறிவித்த வேகத்தில் ஹர்த்தாலை முன்னெடுப்பதில் மக்கள் ஒத்துழைப்பில் இருந்து விலகி இருந்தனர். கஞ்சா வியாபாரிக்கும், திருட்டு கும்பலுக்கும் நியாயம் கோரி ஹர்த்தாலா? என்று கேட்டனர்.

அரசாங்கம் விசாரணைகளை முன்னெடுத்தது. குறிப்பிட்ட முகாமைச் சேர்ந்த மூன்று இராணுவச்சிப்பாய்கள் கைது செய்யப்பட்டு விசாரணையில் உள்ளனர். இரு பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை மேற்கொள்வதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த கட்டத்திலேயே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சுமந்திரனுடன் தொடர்பு கொண்டு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ள நிலையில் ஹர்த்தால் அறிவிப்பு எதற்கு? என்று கேட்டுள்ளார்.

மறுபக்கத்தில் சுமந்திரன் தன்னிச்சையான இந்த முடிவு குறித்து தமிழரசுக் கட்சிக்கு உள்ளும், வெளியும், தமிழ்த் தேசிய பரப்பிலும் அதிருப்திகள் வெளியிடப்பட்டன. ஹர்த்தாலுக்கு திகதியிடப்பட்ட 15ம்திகதி குறித்து விமர்சனங்கள் வெளிவந்தன. திகதி 18க்கு மாற்றப்பட்டது. விமர்சனங்கள் குறையவில்லை. முழுநாள் ஹர்த்தால் அறிவிப்பை சில மணித்தியாலங்களுக்கு குறுக்க வேண்டிய நெருக்குவாரம் சுமந்திரனுக்கும், சிவஞானத்திற்கும் ஏற்பட்டது.

நல்லூர் ஆலய நிருவாகம் இந்த ஹர்த்தால் பற்றி பெரிதும் அலட்டிக் கொள்ளவில்லை. யாழ்.குடாநாட்டில் சுமந்திரனின் ஹர்த்தால் அறிவிப்பின் தாக்கம் ஒரு புஷ்வாணம் என்று நிருவாகம் நினைத்திருக்கலாம். இதை யாழ்ப்பாணத்தில் ஹர்த்தாலின் தோல்வியாக எம்.ஏ. சுமந்திரனும், சி.வி.கே. சிவஞானமும் ஊடகச் சந்திப்பில் ஏற்றுக் கொண்டனர். நல்லூர் அலட்டிக் கொள்ளாத போதும், மன்னார் ஆயர் இல்லம் குறிப்பிட்ட 15ம் திகதி நிர்ணயம் குறித்து கடுமையான கண்டனத்தை தெரிவித்திருந்தது.

இதனால் பதறியடித்த ஹர்த்தால் அறிவிப்பாளர் சுமந்திரன் மன்னார் சென்று ஆயரைச்சந்திக்க முயற்சித்துள்ளார். கடையடைப்பைக் கோரிய சுமந்திரன் ஆயர் தனக்கு கதவடைப்பை செய்வார் என்று கனவிலும் நினைத்திருக்க மாட்டார். சுமந்திரனை சந்திக்க ஆயர் மறுத்து விட்டார். குருவானவர் ஒருவரை சந்தித்து விட்டு வெறுங்கையோடு வந்த சுமந்திரன் விடுத்த மறு அறிவிப்பு தான் ஹர்த்தால் 18ம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதாகும். மறுநாள் அது மற்றொரு திருத்தத்துடன் 18ம்திகதி காலை மட்டும் என்று அறிவிக்கப்பட்டது. முதல் கோணல் முற்றும் கோணல்.




இவை அனைத்தும் எதனைக் காட்டுகின்றன? 75 ஆண்டுகள் பழம்பெரும் தமிழரசுக் கட்சியின் தீர்மானம் எடுக்கும் சக்தியையா? பெருமையையா? தமிழரசுக்கட்சியின் யாப்பு கட்டமைப்பில் அரசியல் குழு, மத்திய குழு, வேட்பாளர் தெரிவுக்குழு, பாராளுமன்றக்குழு, மாவட்டக்குழு, பிரதேசக்குழு, கிராமியக்குழு என்பனவற்றின் ஒருங்கிணைந்த செயற்பாட்டையா? ஹர்த்தாலுக்கான இந்த முடிவை எந்த குழு, எங்கு கூடி, எப்போது எடுத்தது என்று அறியலாமா….? இவை தமிழ்ச் சமூகம் எழுப்பிய கேள்விகள்.

வடக்கு கிழக்கு மக்களோடு தொடர்புபட்ட, மக்கள் அரசியல் செயற்பாட்டு முடிவில் உள்வாங்கப்பட்ட பொது சிவில் அமைப்புகள், பல்கலைக்கழக சமூகம், வடக்கு கிழக்கில் செயற்படும் பெண்கள் அமைப்புகள், மத நிறுவனங்கள், தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் எவை? என்ற கேள்வியும் வலுப்பெற்றது.

இராணுவ பிரசன்னத்தை குறைத்தல் என்ற இந்த ஹர்த்தாலுக்கான மகுடத்தில் உள்வாங்கப்பட்ட தமிழ்த்தேசிய, தமிழ்த்தேசியம் சாராத அரசியல் கட்சிகள் எவை?

வடக்கு கிழக்கின் ரெலோ, ஜனநாயக போராளிகள் கட்சி, மற்றும் தமிழர் முற்போக்கு முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லீம் காங்கிரஸ் போன்று வெறும் ஆதரவு அறிக்கை கட்சிகள் வடக்கு கிழக்கில் நிர்வாக முடக்கத்திற்கு, கொழும்பு அரசாங்கத்தை திரும்பி பார்க்க வைப்பதற்கு இன்றைய ஹர்த்தாலுக்கு வழங்கிய வகிபாகம் என்ன? ஒரு வகையில் இந்த ஆதரவு அறிக்கைகளும் சுமந்திரன் பாணியிலான தனிநபர் அறிக்கைகள் தான். இந்த கட்சிகளின் ஆதரவாளர்கள் ஹர்த்தாலுடன் ஒருங்கிணைக்கப்படவில்லை.

வேறு தமிழ்த்தேசிய கட்சி ஒன்று இப்படி தன்னிச்சையாக ஒரு முடிவை எடுத்து தமிழரசிடம் ஆதரவு கோரியிருந்தால் அந்த கோரிக்கையை ஏற்று தமிழரசு -சுமந்திரன் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியிருப்பாரா? ரி.என்.ஏ. உடைவு, பொதுவேட்பாளர், உள்ளூராட்சி தேர்தல் பொறிமுறை, தேர்தலுக்கு பின்னர் ஒன்றிணைதல்….. போன்ற அரசியல் ஏமாற்று செயற்பாடுகளில் ஒத்துப் போகாத தமிழரசுக்கும் சுமந்திரனுக்கும் தன்னிச்சையாக முடிவை எடுத்து விட்டு மற்றைய தரப்புமீது ஆதரவு கோருவதற்கான -திணிப்பதற்கான யோக்கியதை உண்டா…?

இதனால் தான் இந்த ஹர்த்தால் அறிவிப்பு சுமந்திரன் எதேச்சையாக, எடுத்த எடுப்பில் விடுக்கப்பட்ட அறிவிப்பு என்பதில் நியாயம் இல்லாமல் இல்லை. அத்தோடு இந்த ஹர்த்தால் படுதோல்வியில் முடிவடைந்திருப்பதற்கும் இதுவே முக்கிய காரணம். இதற்கான முற்று முழுதான பொறுப்பும் சுமந்திரனைச் சாரும். சமூக ஊடகங்களும், வடக்கு கிழக்கின் ஊடகவியலாளர்களும் ஹர்த்தால் தோல்வியையே பதிவு செய்துள்ளன.

மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் கடந்த பொதுத்தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட மக்களால் பாராளுமன்றத்திற்கு வெளியே ஜனநாயக வழியில் தூக்கி வீசப்பட்டவர்.

இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று 2010 முதல் தமிழ் தேசிய அரசியல் ரீதியான சுமந்திரனின் செயற்பாடுகள் மீதான அதிருப்தி. மற்றையது என்.பி.பி. அநுர அலையில் யாழ்ப்பாணம் அள்ளுண்டு போனது. எனினும் தமிழரசு என்றால் சுமந்திரன், சுமந்திரன் என்றால் தமிழரசு என்ற நிலைப்பாட்டை கட்சிக்குள் வளர்ப்பதில், தன்னைச் சுற்றி ஒரு ஆதரவாளர் கூட்டத்தை அவர் கடந்த தேர்தலுக்கு முன்னர் இருந்தே திட்டமிட்டு உருவாக்கி வந்தார். ஆனாலும் தேர்தல் தோல்வியில் இருந்து தப்பிக்க முடியவில்லை. யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் தனது கையில் இல்லை என்பது சுமந்திரனுக்கு மெல்ல மெல்ல வெளிச்சமாகியது. இதன் மிகப் பிந்திய வெளிப்பாடே அவரே ஏற்றுக்கொண்ட ஹர்த்தால் தோல்வி.

இப்போது சுமந்திரனுக்கு இருக்கின்ற நெருக்கடி தனது அரசியல் எதிர்காலத்தை உறுதி செய்வதற்கான மாற்று தளம் ஒன்றை தேட வேண்டும். அது யாழ்ப்பாண குடா நாட்டிற்கு வெளியே வன்னியில் அல்லது கொழும்பிலேயே சாத்தியம். இந்த நெருக்கடியில் விடப்பட்ட வெள்ளோட்டம் தான் இந்த ஹர்த்தால். வன்னியில் இராணுவ கெடுபிடிகள் அதிகம், இராணுவ பிரசன்னம் அதிகம், நில அபகரிப்பு, விகாரைகள், குடியேற்றங்கள், போரின் விளைவுகள் என்று பல பிரச்சனைகள் உண்டு இவற்றை தனது அரசியலுக்கு முதலிடும் திட்டத்தின் ஒரு பகுதியே இந்த ஹர்த்தால் வெள்ளோட்டம். வன்னி மக்களைப் பொறுத்த மட்டில் இராணுவ அடக்குமுறையை அவர்கள் எதிர்க்கின்ற போதும் அதை விடவும் கடுமையாக சுமந்திரனின் அரசியலை எதிர்க்கின்றனர். வட மாகாண முதலமைச்சர் வேட்பாளராக தன்னைத் தானே அறிவித்த சுமந்திரனுக்கு குடா நாட்டில் ஆதரவற்ற நிலையில், அதை ஈடு செய்ய வன்னியில் வாக்கு கேட்கவேண்டிய நிலை. இது இந்த ஹர்த்தால் அறிவிப்பின் பின்னணி. 2020 வரை இராணுவத்தின் பாதுகாப்பில் பவனிவந்த சுமந்திரன் இப்போது அதே பாதுகாப்பு இராணுவத்தை வெளியேறத் கோருகிறார். தனக்கு பாதுகாப்பு வழங்கியது இராணுவம் அல்ல எஸ்.ரி.எப். என்ற விசேட அதிரடிப்படை என்று தமிழ் பேசும் மக்களை முட்டாள்கள் ஆக்கும் கயிறு திரிப்புகள் வேறு.

இது நீதிமன்றத்தில் சட்டவாதத்திற்கு சரியாகலாம் மக்கள் அரசியலுக்கு அல்ல. இலங்கை பேரினவாத அரச இயந்திரத்தை பாதுகாக்கின்ற படைகளைக் கொண்ட பல இராணுவ கட்டமைப்புகள் உண்டு. இதில் இராணுவம் — விசேட அதிரடிப்படை இடையேயான வித்தியாசம் என்ன? எஸ்.ரி.எப். தமிழ்பேசும் மக்களின் பாதுகாப்பு படையா? கிழக்கு மாகாணத்தை சூறையாடிய விசேட அதிரடிப் படை பயங்கரவாதத்தை அழிக்க அமெரிக்க, இஸ்ரேல் ஆலோசனையில் ஜே.ஆர். காலத்தில் அமைக்கப்பட்ட எஸ்.ரி.எப். இராணுவத்தை விடவும் மிகவும் மோசமான விசேட பொலிஸ் படையணி என்பது சுமந்திரனுக்கு தெரியாமல் இருக்க நியாயமில்லை.

சம்பவம் நடந்த இராணுவ முகாம் ஏற்கனவே மூடப்பட்ட நிலையில் உள்ளது. 200 பேர்வரை இருந்த இந்த முகாமில் தற்போது 25 பேர் வரைதான் உள்ளனர். மூடப்படுகின்ற முகாமில் உள்ள எச்ச சொச்ச பொருட்களை எடுக்கவே இந்த இளைஞர்கள் அங்கு சென்றுள்ளனர். இது அரசாங்கம் படிப்படியாக முகாம்களை மூட எடுத்துள்ள முடிவின் ஒரு விளைவு. இதில் அணில் கிணறு தோண்டிய கதையாக பேரெடுக்கும் அரசியல் செய்ய பார்க்கிறார் சுமந்திரன்.

இந்த ஹர்த்தால் தவறானதல்ல ஆனால் அதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கை அணுகுமுறை, காலப் பொருத்தம், தவறானது. சிலர் இராணுமுகாம்களால் இராணுவம் மக்கள் உறவு வளர்கிறது என்று கதிகலங்குகின்றனர். இராணுவம் நிலை கொண்டு இருப்பதால் தான் அரசாங்கம் அரசியல் தீர்வில் அக்கறையற்று இருக்கிறது என்றும் கதை விடுகிறார்கள். இராணுவம் (22ம் பக்கம் பார்க்க)

# சுமந்திரனின் ஹர்த்தால்!

சுமந்திரன் ஒரு கிறிஸ்தவர். அவரைச் சுற்றியிருக்கும் யாருமே அவருக்கு கடந்த 15ஆம் திகதி மடுப் பெருநாள் என்பதைச் சொல்லவில்லையா? இது நல்லூர் திருவிழாக் காலம் என்பதைச் சொல்லவில்லையா? இந்த இரண்டு திரு விழாக்களுக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் வருவார்கள் அவர்களை ஏற்றி இறக்க பேருந்துகள் ஓடும்.

குறிப்பாக மடுத் திருவிழாவுக்கு இந்துக்களும் போவார்கள். அது மத பேதமின்றி இன பேதமின்றி யாத்திரிகர்கள் வந்து கூடும் ஓராலயம். பெருநாளை முன்னிட்டு சில நாட்களுக்கு முன்னரே யாத்திரிகர்கள் வரத்தொடங்கி விடுவார்கள். எனவே தொடர்ச்சியாக சில நாட்களுக்கு வடக்கிலிருந்து பேருந்துகள் ஓடும். இந்த விடயங்களை ஏன் சுமந்திரன் கவனத்தில் எடுக்கவில்லை? அவரைச் சுற்றியிருக்கும் யாருமே இதை அவருக்குச் செல்லவில்லையா? அல்லது தனது மக்களின் பண்பாட்டு பெருவிழாக்களைக் குறித்துச் சிந்திக்க முடியாத அளவுக்கு அவர் தன்னுடைய மக்களின் பண்பாட்டு இதயத்திலிருந்து புறத்தியாக நிற்கின்றாரா ? இது போன்ற பண்பாட்டு விடயங்களைச் சுட்டிக் காட்டுவதற்கு அவருக்கு அருகில் யாரும் இல்லையா? அல்லது அவர் யாரிடம் கேட்டு இதுபோன்ற முடிவுகளை எடுக்கிறார்? அல்லது அவர் முடிவெடுக்கும் பொழுது யாரிடமும் எதையும் கேட்பதில்லையா?

அவர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதிநிதி அல்ல. அவருடைய வார்த்தைகளில் சொன்னால் மக்களின் ஆணை அவருக்கு இல்லை. கட்சிக்குள்ளும் அவர் பதில் செயலாளர் தான். பதில் தான். ஆனால் அவர்தான் கட்சியின் முகமாக கட்சியின் எல்லாமமாகத் தோன்றுகிறார்.

அண்மையில் அவர் வெளிநாடுகளுக்குப் போயிருந்தார். அங்கே அவர் ராஜதந்திரிகளைச் சந்தித்துப் பேசியதாக அவருடைய அரசியல் எதிரிகள் கூறுகிறார்கள். வரும் செப்டம்பர் மாதம் நடக்கவிருக்கும் ஜெனிவா கூட்டத் தொடரை முன்னிட்டு அவர் அவ்வாறு மேற்கத்திய இராஜதந்திரிகளைச் சந்தித்துப் பேசியதாகக் கூறப்படுகிறது. அது தனிப்பட்ட பயணம் என்று சுமந்திரன் கூறியிருக்கிறார். ஆனால் அவர் ராஜதந்திரிகளைச் சந்தித்ததாகப் புலம்பெயர்ந்த தமிழர் தரப்புகள் கூறுகின்றன. அவை கூறுவது உண்மையாக இருந்தால், அவர் கட்சியின் அனுமதியோடு தான் அச்சந்திப்புகளில் ஈடுபட்டாரா? அங்கே என்ன கதைக்க வேண்டும் என்பதனை கட்சி ஏற்கனவே கூடி முடிவெடுத்திருந்ததா? அவ்வாறான சந்திப்புகளில் என்ன கதைக்கப்பட்டது என்பதனை அவர் கட்சிக்குத் தெரிவித்தவரா? அதை அவர் மக்களுக்குக் கூறத் தேவையில்லையா?

நடப்பு நிலைமைகளைப் பார்த்தால், அவர் யாரோடும் எதையும் கலந்தாலோசித்து முடிவெடுப்பதில்லை என்று தான் தோன்றுகிறது. கடந்த 20 மாதங்களாக, அதாவது கடந்த ஆண்டின் தொடக்கத்தில் தனது கட்சி ஆட்களாலேயே நிராகரிக்கப்பட்ட பின் அவருடைய நடவடிக்கைகளைத் தொகுத்துப் பார்த்தால், ஏறக்குறைய மந்திரித்து விட்ட சேவலைப் போல அவர் எதையோ நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறார். அடிக்கடி காணொளிகளில் வருகிறார். கட்சிக்குள் தன்னைப் பலப்படுத்துவது கட்சியின் முகமாகத் தொடர்ந்தும் தோன்றுவது கட்சியின் தீர்மானங்களைத் தானே எடுப்பது மத்திய குழுவை தனது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பது எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கத் தக்கதாக கட்சி தொடர்பான ராஜதந்திர நகர்வுகளை தானே முன்னெடுப்பது....இதைத் தான் கடந்த 20 மாதங்களாக அவர் செய்து வருகிறார். கட்சிக்குள் யாரும் அதை எதிர்ப்பதாகத் தெரியவில்லை. அவர் கடையடைப்புக்கு அழைப்பு விடுத்த விடயம் சரியானது. அதை மனோ கணேசனும் முஸ்லீம் தலைவர்களும் ஆதரித்துள்ளார்கள்.

.படையின் முகாம்கள் மக்கள் குடியிருப்புகள் மத்தியில் இருப்பதினால் தான் கடந்த வாரம் முல்லைதீவில் இடம் பெற்றது போன்ற சம்பவங்கள் நிகழ்வதாக சுமந்திரன் கூறுகிறார். தமிழர் தாயகத்தில் படையினரை நீக்கக் கோரி தமிழ் மக்கள் போராட வேண்டும். அதில் சந்தேகம் இல்லை. அந்த இடத்தில் சுமந்திரன் சரி. ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் கடந்த 16ஆண்டுகளாக படைமய நீக்கம் முழுமையாக நிகழவில்லை. இலங்கையின் மொத்தப் படைக் கட்டமைப்பில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பகுதி தமிழ் பகுதிகளில் தான் நிலை கொண்டிருக்கிறது என்று உத்தியோகப்பற்றற்ற புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.எனவே படைமய நீக்கம் அவசியம். அதை வலியுறுத்தி தமிழ் மக்கள் போராட வேண்டியதும் அவசியம். அதில் யாருக்கும் சந்தேகம் இல்லை.




ஆனால் பிரச்சினை எங்கே வருகிறது என்றால், அதற்காக கடையடைப்பு ஒரு பொருத்தமான போராட்டமா என்பது தான். சுமந்திரனை எதிர்க்கும் பலரும் கடையடைப்பையும் எதிர்க்கிறார்கள். அது தவறு. அரசியலில் சில சமயம் பிழையான ஆட்கள் சரியான செயல்களைச் செய்வதுண்டு. கடையடைப்பு என்ற போராட்ட வடிவம் குறித்து கேள்விகளை எழுப்பலாம். வேறு போராட்ட வடிவங்களைக் குறித்துச் சிந்திக்கலாம். அரசாங்கத்துக்கு நோகக்கூடிய விதத்திலும் அரசாங்கத்தை ஆதரிக்கும் நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் விதத்திலும் குறிப்பாக, ஐநாவின் கவனத்தை ஈர்க்கும் விதத்திலும் அதை விடக் குறிப்பாக ஐநாவில் தமிழ் மக்கள் தொடர்பான தீர்மானத்தைக் கொண்டுவர இருக்கும் கோ குரூப் நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் விதத்திலும் அழுத்தங்களைப் பிரயோகிக்கத்தக்க போராட்ட வடிவங்களைச் சிந்திக்கலாம்.

அரசாங்கத்துக்கு நோகத்தக்க விதத்தில் போராடுவது என்று சொன்னால் சம்பவம் நடந்த மாவட்டத்தில் ஒரு மக்கள் பேரெழுச்சியை ஒழுங்குபடுத்தலாம். அதை ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தலாம். இது முதலாவது. இரண்டாவதாக.அரசு அலுவலகங்களை முடக்கக்கூடிய விதத்தில் அரசு அலுவலகங்களைச் சுற்றி வளைக்கலாம். மூன்றாவதாக, ஐநாவில் முடிவெடுக்கும் நாடுகளின் தூதரகங்களின் முன்னாள் கவன ஈர்ப்புப் போராட்டங்களை ஒழுங்கு செய்யலாம். அந்தக் கவன ஈர்ப்புப் போராட்டங்கள் படைப்புத் திறன் மிக்கவைகளாக இருக்க வேண்டும். மனித உரிமைகள் ஆணையாளர் செம்மணிக்கு வந்த பொழுது நிகழ்த்தப்பட்ட அணையா விளக்கு போராட்டத்தைப் போல. எனவே இது போன்ற பல வழிகளிலும் அரசாங்கத்துக்கு நோகக் கூடிய விதத்தில் போராடலாம். கடையடைப்பு அழைப்பவருக்கு இலகுவான ஒரு போராட்டம். மாறாக கடைகளை மூடும் வியாபாரிகளுக்கும் பொதுப் போக்குவரத்தை நிறுத்தும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும் அன்றாடம் காய்சிகளுக்கும் அன்றாடம் வேலை செய்பவர்களுக்கும் அதனால் இழப்பு ஏற்படும். அந்த இழப்பைக் கூட நாட்டுக்காக ஒருநாள் செய்யும் தியாகம் என்று நியாயப்படுத்த முடியும். ஆனால் கடையடைப்போ அல்லது பொது முடக்கமோ எதுவாக இருந்தாலும் அது அரசாங்கத்துக்கு நோக வேண் டும். அரசாங்கத்துக்கு நோகக் கூடிய விதத்தில் அழுத்தமாகப் போராட வேண்டும்.

அப்படிப் பார்த்தால் கடையடைப்பு அரசு அலுவலகங்களுக்கு நோகாது. ஏனென்றால் கடையை அடைத்தாலும் பொதுப் போக்குவரத்தை முடக்கினாலும் அரச அலுவலகங்கள் தொடர்ந்து இயங்கும். ஏன் பாடசாலைகளே இயங்கும். ஆசிரியர்கள் வருவார்கள் அதிபர்கள் வருவார்கள் மாணவர்கள் மட்டும் வர மாட்டார்கள். நாளை, இரண்டாம் தவணை விடுமுறை முடிந்து பாடசாலைகள் மீண்டும் தொடங்குகின்றன. எனவே கடையடைப்பைவிட அழுத்தமான கூர்மையான படைப்புத் திறன் மிக்க அறவழிப் போராட்டங்களை சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். அதற்குக் கூடிக் கதைக்க வேண்டும். அதைவிட முக்கியமாக தமது சொந்த மக்களை நேசிக்க வேண்டும்.தனது மக்களை விசுவாசிக்கும் எந்த ஒரு செயற்பாட்டாளருக்கும் போராட்டத்தின் வழி தானாகத் திறக்கும்.

அதிலும் குறிப்பாக உலகில் வெற்றி பெற்ற பெரும்பாலான எல்லா அறவழிப் போராட்டங்களும் சட்ட மறுப்புப் போராட்டங்கள் தான். சட்டத்தரணிகள் தங்களுடைய சட்டரீதியிலான சௌகரிய வலையத்துக்குள் நின்று கொண்டு போராட முடியாது.சட்ட மறுப்பாகப் போராட சுமந்திரன் தயாரா?

ஆனால் சுமந்திரனின் போராட்டத்தை விமர்சிப்பவர்கள் அவ்வாறு பார்க்கவில்லை. அவர் மக்களுக்காகப் போராடவில்லை. அல்லது பாதிக்கப்பட்ட குடும்பத்துக்காகப் போராடவில்லை.

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -




அல்லது படை மய நீக்கத்துக்காகப் போராடவில்லை. மாறாக கட்சிக்குள் தன் முதன்மையைப் பலப்படுத்தவும் தமிழ்த்தேசிய அரசியலில் தன்னுடைய இன்றியமையாமையை நிருபிப்பதற்கும் அவர் இந்தப் போராட்டத்தைப் பயன்படுத்துகிறார் என்று தான் அவர்கள் விமர்சிக்கின்றார்கள்.

அவ்வாறு விமர்சிக்கத்தக்க விதத்தில் தான் அவருடைய நடவடிக்கைகளும் காணப்படுகின்றன. கடந்த வாரம் ஐநாவுக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சிவில் சமூகங்களோடு இணைந்து அந்தக் கடிதத்தைத் தயாரித்தது. அந்தக் கடிதத்தில் தமிழரசுக் கட்சி கையெழுத்துப் போடவில்லை. அந்த முடிவைப் பெரும்பாலும் சுமந்திரனே எடுத்திருப்பதாகக் கருதப்படுகிறது. அவர் சொன்னதைச் சிவஞானம் திரும்பிச் சொல்கிறார் என்று தான் எல்லாரும் நம்புகிறார்கள்.

எனவே இந்த விடயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு இணைந்து ஒரு கூட்டுக் கடிதத்தை அனுப்புவதற்கு சுமந்திரன் தயாராக இருக்கவில்லை. அந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளோடு இணைந்து முடிவெடுத்திருந்திருந்தால் இன்றைக்கு கடையடைப்பை அல்லது அதுபோன்ற ஏதோ ஒரு போராட்டத்தை எல்லாருமாகச் சேர்ந்து தரமாகச் செய்திருக்கலாம். அதற்குத் தமிழரசுக் கட்சியின் ஈகோ இடம் கொடுக்கவில்லை.

ஆனால் அதற்கு சுமந்திரன் ஒவ்வொரு நாளும் காணொளியில் வந்து விளக்கம் கொடுக்கிறார். அவர் தரும் விளக்கங்களில் முக்கியமானது, நாங்களே பெரிய கட்சி நாங்களே முதன்மைக் கட்சி எனவே நீங்கள் கடிதத்தை எழுதிவிட்டு எங்களை அதில் கையெழுத்துப் போடுமாறு கேட்க முடியாது என்ற பொருள்பட அமைந்துள்ள விளக்கந் தான். அதில் ஒரு பகுதி உண்மை. அவர்கள் தான் பெரிய கட்சி.அவர்கள்தான் முதன்மைக் கட்சி. அதில் யாருக்கும் சந்தேகமில்லை. ஆனால் இங்கே கேள்வி என்னவென்றால், கடந்த 16 ஆண்டுகளாக அவர்களே முதன்மைக் கட்சியாகவும் முடிவெடுக்கும் கட்சியாகவும் இருந்து தமிழ் மக்களுக்கு செய்த நன்மைகள் என்ன? கடந்த 16 ஆண்டு காலத் தமிழரசியலில் ஏற்பட்ட தேக்கங்கள், தோல்விகள், பின்னடைவுகள் போன்ற எல்லாவற்றிற்கும் அவர்கள் தான் பொறுப்பேற்க வேண்டும்.

அது மட்டுமல்ல அனைத்துலக அளவில் குறிப்பாக ஐநாவில் தமிழ் மக்களின் விவகாரம் மேலும் நீர்த்துப் போகக்கூடிய ஆபத்து தெரிகிறது.அதற்கும் தமிழரசுக் கட்சி தான் பொறுப்பேற்க வேண்டும். 2015இலிருந்து ஐநாவின் நிலைமாறு கால நீதிக்கான தீர்மானத்தை நோக்கி தமிழரசியலைச் செலுத்தியது முக்கியமாக சுமந்திரனும் சம்மந்தரும் தான். அது ஒரு தோல்வியுற்ற பரிசோதனை என்று பின்னர் சுமந்திரன் சொன்னார். அது அவர்களுடைய தனிப்பட்ட தோல்வி அல்ல. இனத்தின் தோல்வி. இப்பொழுதும் ஐநாவை கையாளும் விடயத்தில் தமிழரசுக் கட்சியின் அணுகுமுறை வெளிப்படையானதாக, ஐக்கியமானதாக இல்லை .இதில் வரக் கூடிய தோல்விக்கு யார் பொறுப்புக் கூறுவது? கட்சி வேறுபாடுகளைத் தூக்கி ஓரத்தில் வைத்து விட்டு இனமாகத் திரள வேண்டிய பொறுப்பு யாருடையது?




# ஹர்த்தால் ஒரு இலகுவான அரசியல் வியாபாரம்!

முத்தையன் கட்டு மிகவும் பின்தங்கிய பகுதி. அப்பகுதியில் பாடசாலையில் படிப்பதற்கு மாணவர்கள் இல்லை. பெண் பிள்ளைகள் சாமத்தியப்பட்டவுடன் திருமணம். கூலிவேலை, காட்டுப்பகுதியில் விறகு வெட்டுவது இவைகள் தான் அப்பகுதியின் பிரதான தொழில்கள். யுத்தம் முடிவுற்று பதினாறு வருடங்களாகி விட்டது. அந்தப் பகுதியிலுள்ள மக்களின் வாழ்வை மேம்படுத்த வேண்டும் என்று எந்தவொரு அரசியல் தரப்பும் முயற்சிக்கவில்லை. ஆனால் அந்தப் பகுதியில் ஒருவர் உயிரிழந்தவுடன், முத்தையன் கட்டு இப்போது தமிழ்த் தேசிய பூமியாகி விட்டது.

கிடைக்கும் தகவல்களின்படி, முத்தையன்கட்டில் நீண்டகாலமாக நிலைகொண்டிருந்த இராணுவ முகாம் விரைவில் அகற்றப்படவுள்ளது. ஏற்கனவே அங்கிருந்த இராணுவத்தின் பெரும்பகுதி வேறு இடத்திற்கு அனுப்பப்பட்டு விட்டது. அந்த முகாமிலிருக்கும் பொருட்களுக்கான காவலாளிகளாக சில எண்ணிக்கையான இராணுவத்தினர் மட்டுமே அங்கிருக்கின்றனர். முகாமின் பொருட்கள் ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறித்த இராணுவ முகாம் நீண்டகாலமாக நிலை கொண்டிருப்பதால் அப்பகுதியிலுள்ள மக்களும் இராணுவத்தினருடன் நெருக்கிப் பழகிவருகின்றனர்.

இந்த அடிப்படையில் அப்பகுதியிலுள்ள இளைஞர்கள் சிலர் இராணு சிப்பாய்களுடன் தாராளமாக பழகி வருகின்றனர். இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் குறித்த சம்பவம் இடம் பெற்றிருக்கின்றது.

முத்தையன் கட்டுவைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர், இரவு நேரத்தில் இராணுவ முகாமிலிருந்த சில பொருட்களை களவாக ஏற்ற முற்பட்ட போது, கடைமையிலிருந்த இராணுவச் சிப்பாய்கள் தாக்கியிருக்கின்றனர். அவர்களிடமிருந்து தப்பியோடும் முயற்சியில் குளத்திற்குள் குதித்ததன் காரணமாக ஒருவர் இறந்திருக்கின்றார். இராணுவ முகாமிலிருந்து பொருட்களை ஏற்ற முற்பட்டால், அதனைப் பார்த்துக் கொண்டு இராணுவத்தினர் சும்மா இருப்பார்களா என்பது முதல் கேள்வி. ஒரு வேளை குறித்த இளைஞர் தாக்குதலினால் குளத்திற்குள் நீத்த முடியாமல் மூழ்கியுமிருக்கலாம்.

இதற்குத் தான் தற்போது ஹர்த்தால் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது. வடக்கு கிழக்கில் இராணுவ பிரசண்ணம் தொடர்பில் ஆரம்பத்தில் அதிகம் பேசப்பட்டிருக்கின்றது. சம்பந்தன், அவரது நாடாளுமன்ற உரைகளில் இது பற்றி பல தடவைகள் சுட்டிக் காட்டியிருக்கின்றார். அதே போன்று வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் இது தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது.

இதன் தொடர்சியாக சில முகாம்கள் அகற்றப்பட்டிருக்கின்றன. இந்த விடயத்தில் இன்னும் அதிக மாற்றங்கள் தேவை என்றால் அது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் பேசிப் பார்க்கலாம். ஜனாதிபதியுடன் பிரத்தியேக பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருக்கலாம் ஆனால் இராணுவ முகாம் ஒன்றில் பொருட்களை களவாக ஏற்ற முற்பட்டவர்களை ஆதாரமாகக் கொண்டு, இராணுவ பிரசண்ணத்தை எதிர்ப்பதாக கூறுவது முற்றிலும் தவறானது. உதாரணமாக வீதியால் சென்ற ஒரு பெண்ணை வழி மறித்து இராணுவத்தினர் தவறாக நடந்திருந்தால் அல்லது இளைஞர் ஒருவர் தமிழர் என்னும் காரணத்திற்காக மட்டும் தாக்கப்பட்டிருந்தால், நிச்சயம் இராணுவ பிரசன்னத்தை எதிர்ப்பதில் பொருளிருந்திருக்கும் ஆனால் இங்கோ காரணமும் தவறு, அதற்காக முன்வைக்கப்படும் வாதமும் தவறானது.

இந்த விடயத்தை எவர் முன்னெடுக்கின்றார் என்னும் விடயம் இந்தக் கட்டுரையாளருக்கு முக்கியமானதல்ல. எவர் இவ்வாறான விடயத்தை செய்தாலும், அதன் சமூகப் பெறுமதி பற்றியே நாம் ஆராய வேண்டும். விடயங்களை இரண்டு வகையில் நோக்கலாம். ஒன்று அறிவு ரீதியாக நோக்குவது இரண்டு, பொதுப் புரிதலிருந்து அறிய முற்படுவது. ஆங்கிலத்தில் இதனை கொமன் சென்ஸ் என்பார்கள். ஈழத் தமிழரின் அரசியல் பயணத்தை எடுத்து நோக்கினால் முதலில் மிதவாத வழிமுறை, பின்னர் ஆயுத வழிமுறை என்னுமடிப்படையில் விடயங்கள் கையாளப்பட்டன. தற்போதுள்ள அரசியல் சூழல் இரண்டு அணுமுறைகளினதும் தோல்விக்கு பின்னரான காலகட்டமாகும்.

எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையிலான தமிழரசு கட்சியின் காலத்தில் ஹர்த்தால் என்பது ஒரு எதிர்ப்பு அரசியல் நடவடிக்கையாக கையாளப்பட்டிருந்தது. ஆனால் அன்றைய சூழலில் கூட ஜனநயாக தமிழ் தலைவர்கள் எவரும் சாத்வீக அரசியலை உச்சநிலைக்கு கொண்டு செல்லவில்லை. உணவு தவிர்ப்பு நடவடிக்கையின் மூலம் ஒரு தமிழ் தலைவர் உயிரிழந்த வரலாறு இல்லை. ஒரு பானைச் சோற்றுக்கு, ஒரு சோறு பதம் என்பது போல், மேற்படி உதாரணம் தமிழ் தலைவர்களின் அன்றைய சாத்வீகப் போராட்டத்திலிருந்த போதைமைக்கு தெளிவான சான்றாகும்.

ஒரு வேளை அன்றைய சூழலில் சாத்வீகப் போராட்டங்களின் போது ஒரு தமிழ் தலைவர் உயிரிழந்திருந்தால், அன்றைய சூழலில் மக்கள் எழுச்சிக்கான காரணமாக அது இருந்திருக்கலாம். இந்தியாவில், ஆந்திர தேசக் (மானில) கோரிக்கையை முன் வைத்து பொட்டி சிறிராமுலு என்பவர், 56 நாட்கள் தொடர் உணவு தவிர்ப்பை மேற்கொண்டு உயிரிழந்தார். அதன் மூலம் ஏற்பட்ட மக்கள் எழுச்சியைத் தொடர்ந்தே ஆந்திரக் கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டது. அதுவே பின்னர் இந்தியாவின் மொழிவாரி மானில முறைமையாக மாற்றமடைந்தது. ஆனால் பொட்டி சிறிராமுலு போன்று, தியாகத்தைச் செய்வதற்கான அர்பணிப்புள்ள தமிழ் தலைவர் எவரும் அன்றைய தமிழரசு கட்சியில் இருந்திருக்கவில்லை.

தமிழ் அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரையில் அர்பணிப்பை மக்களிடம் எதிர்பார்த்தார்களே தவிர, தங்களை உச்சமாக அர்பணிக்கத் தயாராக இருந்திருக்கவில்லை. வக்கில் தொழிலும் வேண்டும், நாடாளுமன்ற கதிரைகளும் வேண்டும் என்னுமடிப்படையில் தான் இருந்தனர். இப்போது அந்த நிலைமை முன்னரை விடவும் படு மோசமாகி விட்டது. முன்னர் இருந்தவர்களிடம் நேர்மையாவது இருந்தது. தமிழர் அரசியல் ஆயுத இயக்கமாக மாற்றமடைந்த பின்னர் தான் தங்களை தியாகம் செய்வதற்கு ஒரு தலைமுறை வெளியில் வந்தது. அந்தத் தியாகங்களும், இறுதியில் விழலுக்கிறைத்த நீரானது. அது தொடர்பில் அதிகம் பேசுவதில் இனிப் பயனில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் நீங்கள் உங்களுக்குள் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி, ஒரு நாள் கடைகளை பூட்டி, மறுநாள் திறப்பதால், தமிழர் அரசியலில் எதைச் சாதித்து விட முடியும்? ஒரு வேளை வடக்கு கிழக்கில் கடைகள் பூட்டப்பட்டன என்னும் செய்தியைக் கொண்டு தமிழ் மக்கள் தமிழரசு கட்சியுடன் தான் இருக்கின்றனர் என்னும் பிரச்சாரத்தை மேற் கொள்ளலாம். இதற்கப்பால் ஹர்த்தால் என்பது ஒரு நாள் கூத்தாகவே முடிவுறும்.

தமிழ் மக்கள் தங்களின் கொமன் சென்ஸ் கொண்டு கேட்க வேண்டிய கேள்வி, இவ்வாறான ஒரு நாள் கூத்துக்களால் கடந்த பதினாறு வருடங்களில் ஏதாவது உருப்படியாக நடந்திருக்கின்றதா? அரசியல்வாதிகள் தங்களின் கட்சி நலன்களுக்காக எதனையும் கூறலாம் – அவர்களை ஆதரிப்பவர்கள் எவ்வாறான நியாயங்களையும் கூறலாம். ஆனால் சமானிய மக்களை நோக்கிச் சிந்திப்பர்கள் தங்களுக்குள் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி, காலாவதியாகிப் போன இவ்வாறான அணுகுமுறைகளால் என்ன பயன்? இன்னொரு

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –



விடயத்தையும் நீங்கள் நோக்க வேண்டும். வடக்கு கிழக்கில் இடம்பெறும் இவ்வாறான அடையாள எதிர்ப்புக்களை தென்னிலங்கை ஒரு விடயமாகவே எடுத்துக் கொள்வதில்லை.

ஏன் அப்படி? வடக்கு கிழக்கு அடிப்படையில் ஒரு தொழில்துறை பகுதியல்ல. தொழில்துறைப் பகுதிகள் மக்களால் முடக்கப்படும் போது நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்படும்.

அவ்வாறான சூழலில் அரசாங்கம் போராட்டக் காரர்களுடன் பேசுவதற்கு இறங்கிவரும். கடந்த பதினாறு வருடங்களில் தமிழ் பகுதிகளில் பல விடயங்கள் இடம்பெற்றிருக்கின்றன. எழுக தமிழ் தொடங்கி பொத்துவில் தொடங்கி பொலிகண்டி என்னும் பெயரிலான நிகழ்வு வரையில் எதிர்ப்புக்கள் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறான நடவடிக்கைகளின் பின்னர் கொழும்பின் ஆட்சியாளர்கள் தமிழ் கட்சிகளுடன் பேசுவதற்காக இறங்கி வந்திருக்கின்றார்களா? கடந்த பதினாறு வருடங்களில் ஒப்பீட்டடிப்படையில் அதிகமானவர்கள் திரண்ட ஒரு நிகழ்வு என்றால் பொத்துவில் தொடங்கி பொலி கண்டி கும்பல் நிகழ்வை குறிப்பிடலாம் அதிகமானவர்கள் கும்பலோடு கும்பலாக இணைந்திருந்தனர் ஆனால் அதனைக் கூட தென்னிலங்கை ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை. கொஞ்சமாவது கொமன் சென்சை பயன்படுத்தினால் இதற்கான பதில் இலகுவானது. கொழும்பின் அதிகார பீடம் உங்களை திரும்பியே பார்க்கவில்லை என்றால் இது போன்ற நடவடிக்கைகளை எதற்காக செய்ய வேண்டும்.

வடக்கு கிழக்கில் கடைகளை பூட்டினால் ஒரு நாள் வியாபாரம் பாதிக்கப்படும், அதன் நஸ்டம் முழுவதும் கடைகளை பூட்டுபவர்களுக்கு மட்டும் தான். அனுர குமாரவிற்கோ ஹரினி அமரசூரியவிற்கோ, பிமல் ரத்நாயக்கவிற்கோ எந்தவொரு நஸ்டமும் ஏற்படப் போவதில்லை. இதனை இன்னும் இலகுவாக புரிந்து கொள்வதற்காக முன்னர் இடம் பெற்ற ஒரு சம்பவத்தை சொல்கின்றேன் அப்போது அரசியல் கைதிகள்என் போர், அவர்களின் விடுதலையை வலியுறுத்தி, சிறைக்குள் உணவு தவிர்ப்பை மேற்கொண்டனர். இது தொடர்பில் அப்போது வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்த சி.வி.விக்கி னேஸ்வரன், ஜனாதிபதி மைத்திரியுடன் பேசினார், மைத்திரி கூறியது அவர்களிடம் சொல்லுங்கள். அவர்கள் சாப்பிடாமல் இருந்தால் (20ம் பக்கம் பார்க்க)

# ஒருமுகப் பட வேண்டிய சூழல்

முல்லைத்தீவு முத்தையன்கட்டில் இராணுவத்தினரோடு ஏற்பட்ட பிரச்சினையில் கபில்ராஜ் என்ற இளைஞர் மரணமடைந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடையடைப்புப் போராட்டத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது. இந்தப் போராட்டத்துக்கு தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆதரவைத் தெரிவித்துள்ளது. பொது அமைப்புகளும் தமது ஆதரவை வழங்குவதாகத் தெரிகிறது. இதற்கான முழுமையான ஆதரவை எல்லோரும் வழங்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் கோரியுள்ளார்.

சிவஞானத்தின் கோரிக்கை, வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மக்கள் வாழிடங்களில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை விலக்க வேண்டும் என்பதேயாகும். அதற்கு அவர் இந்தக் கொலைச் சம்பவத்தோடு ஒரு மக்கள் எழுச்சியைக் கோருகிறார். இதே கருத்துப்படத் தான் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

இந்தப் போராட்டம் தொடர்பாக பொது அமைப்புகளுடன் பேசிய தமிழரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன், இராணுவம் அல்லது படையினர், மக்கள் வாழிடங்களில் நிலைகொண்டிருப்பதால்தான் இந்த மாதிரியான சம்பவங்களும் பிறழ்வு நடவடிக்கைகளும் உருவாகுவதற்கான சூழல் ஏற்படுகிறது.


அத்துடன், அரசியல் தீர்வைப் பற்றி ஆட்சியாளர்கள் சிந்திக்காமல் இருப்பதற்கும் அதைத் தவிர்ப்பதற்கும் படைகளின் நிலை கொள்ளல் (படை ஆதிக்கம்) பிரதானமான காரணமாக உள்ளது. மக்களுடன் படைகளை நெருக்கமடைய வைப்பதன் மூலம் இராணுவப் பிரசன்னத்தை அல்லது படைகள் நிலை கொள்வதை நியாயப் படுத்துவதற்கு அரசு முயற்சிக்கிறது.

நீண்ட காலமாக மக்கள் வாழிடங்களில் படையினர் இருக்கும் போது மக்களுக்கும் படையினருக்குமிடையில் பல வழிகளிலும் உறவு ஏற்படக் கூடிய வாய்ப்புகள் அதிகரிக்கும். சந்தை, கடை, அலுவலங்கள், வழி, தெரு எனச் சகல இடங்களிலும் படையினர் புழங்கும்போது மக்களுக்கும் படையினருக்குமிடையில் உறவு ஏற்படும். இது படையினரின் பிரசன்னத்தை (இராணுவ மேலாதிக்கத்தை) பற்றிய தெளிவின்மையை மக்களிடத்திலே ஏற்படுத்தும்'' என்ற அடிப்படையில் இந்த விடயத்தைப் பார்க்க வேண்டும் என்ற சாரப்படக் கூறியுள்ளார். ஆக இந்தக் கடையடைப்புப் போராட்டம், இராணுவத்தை அல்லது படைகளை விலக்குவதையே பிரதானமாகக் கொண்டுள்ளது. அது ஒரு முக்கியமான விடயமே.

யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் கடந்த பிறகும் அரசியற் தீர்வைப் பற்றி நேர்மையாகச் சிங்களத் தரப்புகள் பேசவில்லை. சிந்திக்கவில்லை. அதற்காக முயற்சிக்கவே இல்லை. பதிலாக படை மேலாதிக்கத்தின் மூலமாக வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் முஸ்லிம் மக்களைக் கையாளலாம் என்று அரசு சிந்திக்கிறது. உண்மையும் அது தான். படை மேலாதிக்கத்தில் ஆட்சியாளர்களுக்கு உள்ள நம்பிக்கையே அரசியற் தீர்வைப் பற்றிய அக்கறையின்மையாகும்.

2009க்கு முன்னர் இராணுவத்தினரைக் குறித்து மக்களிடம் இருந்த உணர்வு வேறு. இப்பொழுது உள்ள உணர்வு வேறு. அப்பொழுது படையினரைக் குறித்த அச்சமே அனைவரிடத்திலும் இருந்தது. படைகளுக்கும் அப்படித் தான். அவர்கள் எல்லோரையும் சந்தேகித்தனர். ஆக இரண்டு தரப்புக்குமிடையில் இடைவெளி இருந்தது.

இந்த இடைவெளியை இல்லாதொழிக்கவே அரசாங்கம் முயற்சித்து வருகிறது. இதற்காக அது படையினரைப் பொது அரங்கில் இறக்கியுள்ளது. உணவுக் கடைகள், சலூன்கள், தையற்கடை போன்றவற்றைப் படையினர் நடத்துகிறார்கள். மட்டுமல்ல, மக்களுடைய காணிகளை அபகரித்து, அங்கே மரக்கறி உற்பத்தி செய்து சந்தைகளில் விற்பனை செய்கின்றனர். தென்னைப் பயிர்ச்செய்கை, நகர அழகு படுத்தல், சிரதானங்கள், இரத்ததானம் செய்தல்



என சனங்களோடு ஐக்கியமாகும் உபாயங்களைச் செய்து கொண்டிருக்கின்றனர். சில இடங்களில் வறிய மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறோம் என்ற பேரில் சில வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. விளையாட்டுக் கழகங்கள் சிலவற்றுக்கு சில உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இப்படி எந்தெந்த வகையில் சனங்களுக்குள் ஊடுருவ முடியுமோ அதையெல்லாம் செய்து கொண்டுள்ளனர். இதையெல்லாம் படைத்தரப்பு தன்னிச்சையாகச் செய்யவில்லை. இதற்குப் பின்னால் அரசியல் நிகழ்ச்சி நிரல் உண்டு. அதைக் குறித்தே நாம் தொடர்ந்து பேசி வந்திருக்கிறோம். இப்போது இந்தச் சந்தர்ப்பத்திலும் பேச வேண்டியுள்ளது.

மக்களுடன் படைகள் பல வகையிலும் உறவாடும் போது ஒரு நெருக்கமான உணர்வு மக்களுக்கு ஏற்படும். அவர்கள் பிறகு படையினரை ஒரு மேலாதிக்கச் சக்தியாகப் பார்க்க மாட்டார்கள் என்று அரசாங்கம் எண்ணுகிறது. இதில் அரசாங்கம் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளது. ஏனென்றால் கிராமங்களில் உள்ள சாதாரண மக்கள் மட்டுமல்ல, படித்தவர்கள், அரசியல் செயற்பாட்டில் உள்ளவர்கள், இலக்கியத் துறையில் இயங்குகின்றவர்கள், வணிகர்கள் எனப் பலரும் படைத் தரப்போடு தனிப்பட்ட ரீதியிலும் பழகும் அளவுக்கும் உறவை வளர்த்துக் கொள்ளும் அளவுக்கும் நிலைமை வளர்ச்சி அடைந்துள்ளது. சில இடங்களில் கொண்டாட்டங்களில் படையினர் கலந்து கொள்ளும் அளவுக்கு இது உயர்ந்துள்ளது. மட்டுமல்ல, குடிவிருந்து கூட நடக்கிறது.

இதையெல்லாம் சரியென்று விமல் வீரவன்ஸ கூடச் சொல்ல முடியாது. ஏனென்றால், படைகளின் வேலையே வேறு. தேசிய பந்தோபஸ்தில் (தேசிய பாதுகாப்பில்) இவை பற்றி எந்த வாக்கியமும் இல்லை. அல்லது யுத்த காலத்தில் படைகள் இந்த மாதிரிப் பணியாற்றியிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் பல ஆயிரம் பேர் உயிர் தப்பியிருப்பார்கள். அதில் பல ஆயிரம் படையினரும் இருந்திருப்பார்கள்.

யுத்தத்திற்குப் பிறகு படையினர் செய்திருக்க வேண்டியது மீள்நிலைப் படுத்துதலை. அப்படியென்றால், அவர்கள் பழைய நிலைகளுக்குத் திரும்புவதைச் செய்திருக்க வேண்டும். கூடவே உடைந்த அழிக்கப்பட்ட ஊர்களையும் கட்டிடங்களையும் மீள்நிலைப்படுத்தியிருக்கலாம். அதைக் கூடத் தனியாகச் செய்திருக்கக் கூடாது. குறித்த பிரதேசங்களின் மக்கள் பிரதிநிதிகள், மக்கள் அமைப்புகள், அரசாங்கத் திணைக்களங்களின் திட்டம், தீர்மானம் போன்றவற்றை நிறைவேற்றும் ஒரு தரப்பாக இருந்து அந்தப் பணிகளைச் செய்திருக்கலாம். அப்படி நடக்கவே இல்லை. இப்பொழுது நடப்பதோ எதிர்மாறான சங்கதிகள்.

அரசாங்கம் செய்திருக்க வேண்டியது மீளமைப்பை. இயல்பு வாழ்க்கையில் மக்கள் முழுமையாக ஈடுபடக் கூடிய சூழலை உருவாக்கியிருக்க வேண்டும். அரசியல் தீர்வை எட்டியிருக்க வேண்டும். அரசியல் தீர்வு எட்டப்பட்டிருந்தால் படைகள் ஊர்களில் இருக்க வேண்டிய தேவையே இருந்திருக்காது. ஆக அடிப்படையிலேயே தவறு நடந்து கொண்டிருக்கிறது.

இத்தகைய பின்னணியில் காரணங்களின் அடிப்படையில் தான் இந்தப் பிரச்சினையையும் இந்தப் போராட்டத்தையும் நாம் பார்க்க வேண்டியுள்ளது.

தமிழரசுக் கட்சி ஹர்த்தாலை அறிவித்தவுடன் அதற்கு சில இடங்களில் மாற்று நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. சமூக வலைத்தளங்களிலும் இணையத் தளங்களிலும் இதைக் குறித்த விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஏன் தமிழரசுக் கட்சிக்குள்ளேயே சில கறுப்பாடுகள் எதிர் நிலையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாக முத்தையன்கட்டில் கொலையான கபில்ராஜின் மரணம் தொடர்பாகப் பல விதமான கதைகள் (கருத்துகள்) உண்டு. அதை விட அது ஒரு தனிப்பட்ட விவகாரம். படையினரில் சிலருக்கும் கபில்ராஜ் மற்றும் நண்பர்களுக்கும் இடையில் நடந்த கொடுக்கல் வாங்கல், மதுப் பரிமாற்றம், முகாமைக் காலி செய்யும் போது மிஞ்சும் பொருட்களை எடுத்தல் அல்லது கையகப்படுத்தல் போன்றவற்றினால் ஏற்பட்ட விளைவு என்று சொல்லப்படுகிறது.

இவை அனைத்தும் உண்மையாக இருக்கலாம். ஆனாலும் இதனால் நடந்திருப்பது ஒரு மரணம். இப்படியெல்லாம் படைத்தரப்போடு உறவு வைத்துக் கொள்ளும் அளவுக்குத் தான் நிலைமை உள்ளது என்பதை இந்தக் கட்டுரை வாதிட்டதை இந்தக் கொலை அல்லது மரணம் நிரூபிக்கிறது. ஒப்புக்கொள்கிறது உண்மை என ஏற்றுக் கொள்கிறது.

இந்த இடத்தில் ஒரு கேள்வியை எழுப்ப வேண்டும். 2009க்கு முன்பு இந்த மாதிரி படைத்தரப்புக்கு மதுவை வாங்கிக் கொடுப்பதற்கு யாராவது முன்வருவார்களா? அல்லது, படையினர்தான் சந்தேகமில்லாமல் அதை வாங்கிப் பருகுவார்களா?

அப்பொழுது படை முகாம்களில் யாராவது திருடவோ பொருட்களை எடுக்கவோ செல்வார்களா? செல்ல முடியுமா? அதற்குப்படையினர் அனுமதிப்பார்களா? ஆகவே இதைக் குறித்தெல்லாம் நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். சமூகத்தைப் பிளவு படுத்தும் உத்தியில் அரசு திட்டமிட்டுச் செயற்படுகிறது. அதன் ஓரம்சமே இதுவும்.

இனி தமிழரசுக் கட்சியின் ஹர்த்தாலுக்கு வருவோம். ஹர்த்தால், ஊர்வலம், பாராளுமன்றத்தில் முழக்கம், தேர்தல் மேடைகளில் ஆவேசம், அரசியல் பத்திகளில் கண்டனம் போன்றவற்றினால் அரசியல் தீர்வோ, மக்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வுகளோ கிடைக்கும் என்பது பொய்யென நிரூபிக்கப்பட்டாயிற்று. வடக்குக் கிழக்கை மையப்படுத்தி நடத்தப்படும் போராட்டங்களால் எந்தப் பயனுமில்லை. இதற்கு உதாரணம் அறகலய. அது கொழும்பில் நடத்தப்பட்டது. அரசாங்கத்தை முடக்கும் விதமாக நடத்தப்பட்டது. பல்வேறு தரப்புகளையும் பல தரப்புச் சக்திகளையும் ஒருங்கிணைத்து அல்லது அவற்றின் ஆதரவோடு நடத்தப்பட்டது. அது தான் அந்தப் பெரிய வெற்றியை ஈட்டுவதற்குக் காரணமாகியது.

வடக்கு கிழக்குக்கு மட்டுமான பிரச்சினைக்கு எப்படிக் கொழும்பில் ஆதரவைத் திரட்ட முடியும்? என்ற கேள்வியை யாரும் எழுப்பலாம். வடக்குக் கிழக்குப் பிரச்சினை என்பது வடக்குக் கிழக்குக்கு மட்டுமான பிரச்சினை இல்லை. அது முழு நாட்டுக்குமான பிரச்சினை என்பதை கடந்த கால வரலாற்று அனுபவம் சொல்கிறது. ஆகவே, அதைக்குறித்த புரிதல் உள்ள சக்திகளோடு இணைந்து எல்லோருக்கும் சொல்ல வேண்டும். நடத்தப்படும் போராட்டத்தை அரசு உணரக் கூடிய பொறிமுறை இடம் போன்றவற்றைப் பற்றிச் சிந்திப்பது அவசியம். அதைக்குறித்து நாம் பேச வேண்டும். உரையாட வேண்டும்.

அதற்கு முன் சரியோ, தவறோ, தன்னுடைய பாரம்பரிய முறைமையின் படி தமிழரசுக் கட்சி இந்தப் போராட்டத்தை அறிவித்து விட்டது. அதைப் பலவீனப்படுத்தாமல் முழுமையாக்குவதற்கு ஒத்துழைக்க வேண்டும். அந்த அடிப்படையில் தான் மனோ கணேசன் போன்றவர்களும் பேசியிருக்கிறார்கள். எதிர் காலப் போராட்டங்களைப் பற்றி புதிதாகச் சிந்திப்போம். அதற்கான உரையாடல்களை விரிந்த தளத்தில் செய்வோம்.

ஏனென்றால், குழுக்களாகச் செயற்படும் காலம் முடிவுக்கு வருகிறது. அதனால் எந்தப் பயனுமில்லை என்பதை அனுபவங்கள் சொல்கின்றன. பல தரப்பும் இணைந்து ஒரு முகப்பட்டுச் சிந்திப்பதும் செயற்படுவதுமே இன்று வேண்டப்படுவது. அதைச் செய்யும் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. இங்கே இப்பொழுது நடந்து கொண்டிருப்பது கட்சிகளுக்கிடையிலான முதன்மைப் போட்டியே தவிர, மக்களுக்கான அரசியல் விளைவுகளல்ல. என்பதால் தான் ஒரு கட்சி எடுக்கும் முயற்சியை மறு தரப்புகள் விமர்சிப்பதும் நிராகரிப்பதும் நடக்கிறது. இந்தப் பண்பு பழக்கம் மாற வேண்டும். சரி பிழைகளுக்கு அப்பால் ஒரு தரப்பின் அறிவிப்பை மறுதரப்பு மறுதலிக்காமல் இருக்கலாம். இப்படித்தான் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்திலும் தவறுகள் இழைக்கப்பட்டன.

# அது நடந்திருக்கவே கூடாது!

## டிராம்ப் - புடின் சந்திப்பில் அரங்கேறிய காட்சி குறித்து யுக்ரேன் மக்கள் கருத்து



ரஷ்யா – யுக்ரேன் போரில், ரஷ்யாவிற்கு குறிப்பிடத்தக்க சலுகைகளை வழங்கும் வகையில் ஒப்பந்தத்தை டொனால்ட் டிரம்ப் ஏற்படுத்தி விடுவதற்கான சாத்தியக்கூறுகள் இருந்த நிலையில், யுக்ரேன் மக்கள் 15 ஆகஸ்ட் 2025 வெள்ளிக்கிழமை இரவு அச்சத்துடனே படுக்கைக்குச் சென்றனர்.

சனிக்கிழமை காலை அவர்கள் விழித் தெழுந்த போது அலாஸ்காவில் நடந்த டிரம்ப்–புதின் உச்சிமாநாடு எந்தவித மான மூலோபாய அல்லது அரசியல் ஒப்பந்தங்களும் இல்லாமல் தோல்வி யடைந்ததைக் கண்டு நிம்மதியடைந் தனர். ஒப்பந்தம் ஏதும் ஏற்படவில்லை என்பது இந்த உச்சிமாநாடு தோல்வி யுற்றது என்பதற்கான உதாரணமாகும்.

தற்போதைய நிலையில் உண்மையான முன்னேற்றங்கள் எதுவும் இல்லாத நிலையில், யுக்ரேன் மக்களின் கவனம் உச்சிமாநாட்டில் என்ன நடைபெற்றது என்பதை நோக்கித் திரும்பியது.

அரசியல் ரீதியாக இதை 'ஆப்டிக்ஸ்' (optics)என்று சொல்வார்கள். அதாவது ஊடகங்கள் காட்டும் விதத்தில் ஒரு சூழ்நிலையைப் பார்த்த பிறகு, பொதுமக்களின் கருத்து மற்றும் புரிதல். இதன் சாத்தியமான அரசியல் விளைவுகள் என்ன என்பதை அவதானிப்பது 'ஆப்டிக்ஸ்' எனப்படும். யுக்ரேனுக்கு எதிரான பேரழிவு தரும் ஆக்கிரமிப்புப் போருக்குக் காரணமான புதினுக்கு அலாஸ்காவில் மிகச் சிறந்த வரவேற்பு கிடைத்தது. அமெரிக்கா ரஷ்ய அதிபருக்கு சிவப்பு கம்பள வரவேற்பு கொடுத்து சிறப்பு செய்தது. அவர் நெருங்கி வந்தபோது டிரம்ப் அவரை அன்புடன் அணுகி, நட்புடன் கைகுலுக்கினார். இரு தலைவர்களும் அமெரிக்க அதிபரின் பிரத்யேக லியூமோசின் வாகனத்தில் ஒன்றாக பயணித்தனர். கார் செல்லும் போது புதின் சிரித்துக் கொண்டிருப்பதைக் காண முடிந்தது.

யுக்ரேன் மீதான முழு அளவிலான படையெடுப்பிற்குப் பிறகு சர்வதேச அளவில் கண்டனங்களைப் பெற்ற ரஷ்ய அதிபர் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், உலகளாவிய இராஜதந்திர நிலையில், ரஷ்ய அதிபரை அமெரிக்கா வரவேற்றது ஒரு குறிப்பிடத்தக்க தொடக்கத்தைக் குறித்தது. அன்றைய நாள் முழுவதுமே ரஷ்ய அதிபருக்கு சிறப்பான மரியாதை வழங்கப்பட்டது. இந்தக் காட்சி யுக்ரேனில் வரவேற்கத்தக்கதாக இல்லை.

சர்வதேச நிகழ்வுகளில், சிவப்பு கம்பள வரவேற்பும், பெரிய அளவிலான சந்திப்புகளும் விழாக்களும் இயல்பானவை, ஆனால் லட்சக்கணக்கான மக்களின் மரணத்திற்கு காரணமான ஒரு ஆக்கிரமிப்பாளரை இவ்வளவு மரியாதையுடன் வரவேற்றிருக்கக் கூடாது' என்று யுக்ரேன் தலைநகர் கியவில் உள்ள வழக்கறிஞர் மரியா டிராச்சோவா கருதுகிறார்.

காலை உணவருந்திக் கொண்டே இந்தக் காட்சிகளைப் பார்த்த டிராச்சோவா, 'முழு நிகழ்வும் புதினை மகிழ்விக்க அரங்கேற்றப்பட்டது போலவே தோன்றியது' என்று அவர் கூறினார். அவருக்கு இவ்வளவு சிறப்பான வரவேற்பை வழங்குவதன் மூலம் பகுத்தறிவு உலகம் பகுத்தறிவற்ற முறையில் நடந்து கொள்கிறது,' என்று 40 வயதான மரியா டிராச்சோவா தெரிவித்தார்.

நான்கு அமெரிக்க போர் விமானங்கள் புடைசூழ புதினின் விமானம் அலாஸ்காவில் உள்ள விமானப்படை தளத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டது. விமானத்தில் இருந்து இறங்கிய அவர் சிவப்பு கம்பளத்தில் நடந்து சென்று, டிரம்புடன் மகிழ்வுடன் பேசிக் கொண்டிருந்தபோது நான்கு எஃப்–35 போர் விமானங்கள் சூழ அமெரிக்க வி–2 குண்டுவீச்சு விமானம் ஒன்று வானில் பறந்தது.

டிரம்ப், புதினை சந்திக்கும் காட்சியை பார்ப்பதற்காக உறங்காமல் கண்விழித்துக் காத்திருந்த யுக்ரேனியர்கள், 'போர்க்குற்றவாளி ஒருவரை உயர்ந்த மட்டத்தில் நியாயப்படுத்துவதை' கண்டதாக நினைக்கிறார்கள் என்று யுக்ரேனிய எழுத்தாளரும் அரசியல் ஆய்வாளருமான ஒலெக்சாண்டர் கோவலென்கோ கூறினார். இவ்வளவு ஆடம்பரமாக அவரை வரவேற்றிருக்க வேண்டிய அவசியம் இல்லை' என்று கோவலென்கோ கூறினார்.

'இந்த அளவில் இல்லாமல் குறைந்த பட்ச மரியாதையுடன் மிகவும் நிதானமான முறையில் நடத்தப்பட்டிருக்க வேண்டிய ஒரு சந்திப்பு அது' என்று அவர் கருதுகிறார்.

இரு தலைவர்களும் சம்பிரதாயப்படி சந்தித்தப் பிறகு, டிரம்பும் புதினும் எல்மென்டோர்ஃப் விமானப்படை தளத்தில் 'சமாதானத்தை நாடுதல்' என எழுதப்பட்டிருந்த பதாகையின் கீழ் அமர்ந்தனர். அப்போது ஒரு செய்தியாளர், 'நீங்கள் பொதுமக்களைக் கொல்வதை நிறுத்துவீர்களா?' என்று புதினை நோக்கி கேள்வி எழுப்பினார்.

கேள்வியைக் கேட்ட ரஷ்யத் தலைவர் புன்னகைப்பது போல் தோன்றியது, மேலும் தனக்கு கேள்வி கேட்கவில்லை என்று அவர் சைகை செய்தார்.

புன்னகையுடன் சிரித்துக் கொண்டே பேசுவது இயல்பான பொது மரியாதை, நாகரிகம் என்றாலும், புதினின் இந்தச் செயல் யுக்ரேனில் பரவலாக கசப்புணர்வைத் தூண்டியது. ரஷ்யாவின் ஆக்கிரமிப்புப் போரில் லட்சக்கணக்கான யுக்ரேனியர்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அங்கு நடந்ததைப் பார்த்த போது நான் நொறுங்கிப் போனேன்,' என்று யுக்ரேனின் கிழக்கு மாகாணமான டோனெட்ஸ்கைச் சேர்ந்த 50 வயது செர்ஹி ஓர்லிக் கூறினார். ரஷ்யப் படைகளின் மிகத் தீவிரமான போரை அனுபவித்த இந்த பிராந்தியத்தின் பெரும்பாலான இடங்களை ரஷ்யா கைப்பற்றியுள்ளது.

நான் இரண்டு முறை என் வீட்டை இழந்தேன், ஒருமுறை ஸ்லோவியன்ஸ்க்கில் என்றால், மறுமுறை டொனெட்ஸ்கில்... என் உறவினர்களை இழந்தேன்' என்று ஆர்லிக் கூறினார். எதையாவது ஒப்புக் கொள்ள ஒரு நெறிமுறை இருக்க வேண்டும் என்பதை நான் புரிந்து கொள்கிறேன். புதின் வரும்போது அவரது முகத்தில் உங்களால் அறைய முடியாது. ஆனால் அங்கு நடந்தது குறிப்பாக அவரது புன்னகை மிகவும் விரும்பத்தகாத காட்சியாக இருந்தது' என்று செர்ஹி ஓர்லிக் கூறினார்.

பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகும் புதினுக்கு மரியாதை தொடர்ந்தது. கூட்டு செய்தியாளர் சந்திப்பில், ரஷ்யத் தலைவரை முதலில் பேச வழிவிட்டார் டிரம்ப். சுமார் எட்டு நிமிடங்கள் பேசிய புதின், போர் எவ்வாறு தொடங்கியது என்பது பற்றிய எந்தக் குறிப்பையும் கவனமாகத் தவிர்த்து உற்சாகமாக பேசினார்.


உற்சாகமாக பேசிய ரஷ்ய அதிபர், உச்சிமாநாடு சிறப்பாக நடந்த திருப்தியில் இருந்தார். இதற்கு நேர் மாறாக, வழக்கத்தைப் போலில்லாமல் டிரம்ப் மந்தமாக இருப்பது போல தோன்றியது. அவர் இரண்டு நிமிடங்கள் மட்டுமே பேசினார். ஒப்பந்தம் ஒன்றை நெருங்குவதாக எதையும் சொல்லி அவரால் பெருமை கொள்ள முடியவில்லை.

அதற்கு பதிலாக, இந்த முயற்சியை புதினிடம் டிரம்ப் ஒப்படைத்து விட்டது போல் தோன்றியதாக சாத்தம் ஹவுஸில் ரஷ்யா மற்றும் யூரேசியா திட்டத்தின் மூத்த உறுப்பினரான கியர் கில்ஸ் கூறினார்.

'விமானத்தில் இருந்து இறங்குவதற்கு முன்பே, புதின் இந்த முறையில் மறு

(20ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# கற்பனையில் தமிழ்ச் சமூகம்

தமிழ்த்தேசியவாத அரசியல் இரு கூறுகளாக உள்ளன. (இன்று மட்டு மல்ல, முன்பும் அப்படித்தான். ஆனால் இப்பொழுது அது மிகத் துல்லியமாக முன்வைக்கப்படுகிறது)

1. மாகாணசபை முறையைத் தீர்வுக்கு ஆரம்பமாக எடுத்துக் கொள்வது. அதுதான் சாத்தியமானது. அதற்கே இந்தியாவின் அனுசரணை அல்லது ஆதரவு இருக்கும். இந்தியாவின் ஆதரவைப் பெற்று, இலங்கைக்கு அழுத்தத்தைக் கொடுத்து, மாகாணசபையின் அதிகாரத்தை முழுமைப்படுத்துவது. குறிப்பாக 13 திருத்தத்தை முழுமையான அமுல்படுத்துவது. அதிலிருந்து படிப்படியாக மேலதிக அதிகாரத்தை தீர்வை நோக்கிப் பயணிப்பது. இதொரு அரசியற்தொடர் செயற்பாடாகும்.. என்று வாதிடுவது.

2. மாகாணசபை என்பதே சூ தான ஒரு பொறி. அதனால்தான் விடுதலைப்புலிகள் இயக்கமும் அதனுடைய தலைவர் பிரபாகரனும் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அது தமிழ் மக்களின் நலனுக்காகச் செய்யப்படவே இல்லை. இந்திய நலனை முதன்மைப்படுத்திச் செய்யப்பட்ட ஒன்று. இதை அந்த ஒப்பந்தம் செய்யப்பட்ட 29.07.1987 இலிருந்து சரியாக ஐந்தாவது நாளான 04.08.1987 அன்று, யாழ்ப்பாணம் சுதுமலையில் வைத்துப் பல்லாயிரக்கணக்கான மக்களின் முன்னிலையில் பிரபாகரன் சொல்லியிருக்கிறார்.

தம்முடன் கலந்தாலோசிக்கப்படாமலே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது என்று. அதனால் தான் அந்த ஒப்பந்தத்தையும் மாகாண சபையையும் புலிகள் எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. அது மட்டுமல்ல, 1987இல் இலங்கை இந்திய உடன்படிக்கையில் வலியுறுத்தப்பட்ட வடக்குக் கிழக்கு இணைந்த மாகாண சபையோ, அன்று மாகாணசபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களோ இன்று இல்லை. அவற்றில் ஒரு பகுதியை 1990இல் பிரேமதாச பிடுங்கி விட்டார்.

புலிகள் இல்லாமலாக்கப்பட்ட 2009க்குப் பிறகு, மிஞ்சிய அதிகாரத்தைக் கொண்டு, கடந்த 16 ஆண்டுகளில் ஏன் மாகாணசபை முறைமை சரியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை? 2009க்குப் பிறகு தமிழர்களின் பிரதிநிதிகளாகச் செயற்பட்ட மக்களால் அங்கீகரிக்கப்பட்டிருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மாகாணசபை முறைமையையோ இந்தியாவின் அனுசரணையையோ மறுக்கவில்லையே. அதை நடைமுறைப்படுத்துமாறு தானே கேட்டது. மட்டுமல்ல, மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு, அதிகாரத்தைப் பெற்று அதை நடைமுறைப்படுத்தியும் பார்த்ததே! இப்போது கூட மாகாணசபைத் தேர்தலை நடத்துங்கள். அதிகாரங்களைப் பகிருங்கள் என்று கேட்கப்படுகிறது. ஆனால் அதற்கு அரசாங்கம் தயாரில்லையே. இந்த நிலையில் எப்படி மாகாணசபை முறைமையை நாம் ஏற்றுக் கொள்வது?

இந்தப் பலவீனமான வஞ்சகத்தனமான மாகாணசபை முறையை ஏற்றுக் கொண்டால், தமிழ் மக்களுடைய போராட்டத்திற்கான பெறுமதியை இழந்ததாக ஆகிவிடும். அது மட்டுமல்ல, சர்வதேச சமூகமும் எமது மக்களின் அரசியல் உரிமையைப் பற்றியோ எமக்கான தீர்வைப் பற்றியோ கவனிக்காது. ஆகவே நாம் மாகாணசபை முறையை ஏற்றுக் கொள்ளாமல், தமிழ் மக்களுடைய அபிலாஷையை நிறைவு செய்யக் கூடிய தீர்வைப் பற்றியே பேச முடியும். அதற்காகவே போராட வேண்டும என விவாதிப்பது.

இந்த இரண்டு வாதங்களையும் கேட்கும் போது சரி போலவே தோன்றும். அல்லது ஒவ்வொன்றும் சரி போலிருக்கும். என்றபடியால் தான் இரண்டு நிலைப்பாட்டுக்கும் ஆதரவாளர்கள் உள்ளனர். ஆனால் இந்த இரண்டு வாதங்களையும் அல்லது இந்த இரண்டு விடயங்களையும் குறித்து விளக்கமளியுங்கள் என்றால், பலரும் தெளிவற்றுக் குழப்பமடைகிறார்கள். அல்லது திருதிருவென விழிக்கிறார்கள்.

இந்தத் தெளிவற்ற நிலையும் விளக்க முடியாத தடுமாற்றமும் மக்களுக்கு மட்டுமல்ல, இந்த நிலைப்பாடுகளுக்குத் தலைமையேற்றிருக்கும் அரசியல் தலைவர்களுக்குமில்லை. அவர்களுக்கு அடுத்த நிலையில் உள்ளோ



ருக்கும் இல்லை. அப்படி இருந்திருக்குமானால் அவர்கள் இதுவரையில் அதைத் தெளிவாக முன்வைத்திருப்பர். அப்படி எங்கும் காணவில்லை.

மாகாணசபை முறைமையை ஓரளவுக்கு வெளிப்படையாக ஏற்றுக் கொண்டிருப்பது ஈ.பி.ஆர்.எல்.எவ் வழி வந்தோராகும். சுரேஸ் பிரேமச்சந்திரனின் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ், சுகு ஸ்ரீதரன் தலைமையிலான தமிழர் சமூக ஜனநாயக் கட்சி (ஈ.பி.ஆர்.எல்.எவ்), முருகேசு சந்திரகுமார் தலைமையிலான சமத்துவக் கட்சி (ஈ.பி.ஆர்.எல்.எவ்), டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.ஆர்.எல்.எவ்) கலாநிதி விக்னேஸ்வரன் — கோபாலகிருஸ்ணன் தரப்பின் கிழக்குத் தமிழர் ஒன்றியம் (ஈ.பி.ஆர்.எல்.எவ்) போன்றவை வெளிப்படையாகவே மாகாணசபை முறைமையை ஆதரிக்கின்றன. ஏற்கின்றன. இந்தக் கட்சிகள் ஒவ்வொன்றுக்குமிடையிலும் வேறுபாடுகளும் இருக்கலாம். ஆனால், இவை மாகாணசபை முறைமையை ஏற்கின்றன. அதிலிருந்து முழுமையான தீர்வுக்குப் பயணிக்க வேண்டும். அதுவே சாத்தியம் என வலியுறுத்துகின்றவை.

இவற்றோடு செல்வம் அடைக்கலநாதனின் ரெலோ, தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையிலான புளொட், பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், உதயராசாவின் தலைமையிலான சிறி ரெலோ போன்றவையும் மாகாணசபை முறைமையை ஆதரிக்கும் தரப்புகளே.

தமிழரசுக் கட்சியும் ஏறக்குறைய மாகாணசபை முறைமையை ஏற்றுக் கொள்கிறது. ஆனால் அதை வெளிப்படையாக உறுதியாகச் சொல்வதற்கு அதனால் முடியவில்லை. அப்படிச் சொன்னால், அது வலியுறுத்தி வரும் சமஸ்டி கோரிக்கைக்கு என்ன நடந்தது என்று எதிரணிகள் (குறிப்பாக ஏனைய தமிழ்க்கட்சிகள்) தலையில் குட்டத் தொடங்கி விடுவார்கள் என்ற அச்சத்தினால் இந்த விடயத்தில் பட்டும்படாமல் உள்ளது. மாகாணசபை முறைமையை முன்தொடக்கமாக ஏற்றுக் கொள்ளலாம். அதுவே சாத்தியமான தொடக்கம் என்று வலியுறுத்தும் தரப்புகள் புலம்பெயர் சூழலிலும் உண்டு. ஆனால், அவை அங்கே வலுவான வையாக இல்லை. அல்லது அந்த நிலைப்பாட்டை வலுப்படுத்தக் கூடிய அளவுக்கு அவை வேலைகள் எதையும் செய்வதில்லை. அந்த நிலைப்பாட்டுடன் தாயகத்தில் உள்ள தரப்புகளைப் பலப்படுத்துவதுமில்லை.

தமிழ் ஊடகங்களைப் பொறுத்த வரையிலும் ஒன்றிரண்டு ஊடகங்களில் மட்டும் தான் மாகாணசபை முறைமை அல்லது அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதைக் குறித்து எழுதப்படுகிறது் பேசப்படுகிறது.

இதேவேளை மாகாணசபை முறைமையை வெளிப்படையாக ஆதரிக்கும் தரப்புகளை இந்தியாவின் ஆட்கள் (உளவாளிகள், சார்பு நிலைப்பட்டவர்கள், இந்தியாவின் ஏஜென்டுகள்.) என்று குற்றம் சாட்டப்படுகிறார்கள் பழித்துரைக்கப்படுகிறார்கள் சந்தேகிக்கப்படுகிறார்கள். ஆனால் யதார்த்தமான அரசியல் என்பது மாகாணசபையிலிருந்தே தொடங்க முடியும் என்பது தான். ஆனால், அதை நடைமுறைப்படுத்த வேண்டும், அதற்கான அதிகாரத்தை இலங்கை அரசாங்கம் வழங்க வேண்டும். இந்தியா அதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று சொல்வோர், மாகாணசபை முறைமையை வலுவாக்கம் செய்வதற்கு அதனுடைய சக பங்காளித் தரப்பான முஸ்லிம்களைப் பற்றிச் சிந்திப்பதுமில்லை பேசுவதுமில்லை. முஸ்லிம்களைச் சேர்த்துக் கொள்ளாத அல்லது அவர்களும் இணைந்து கோராத மாகாணசபை முறைமை வெற்றியளிக்கப் போவதில்லை.

மாகாணசபை முறைமையை வெற்றிகரமாக்குவதற்கு இலங்கையின் ஏனைய மாகாணங்களில் உள்ள சக்திகளுடைய ஆதரவையும் திரட்ட வேண்டும். குறிப்பாக மலையக அரசியற் சக்திகளையும் மக்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் மாகாணசபை முறைமையை ஆதரிக்கும் அதை வேண்டும் என்று கருதும் சிங்களத் தரப்பையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

இது இலகுவானது மட்டுமல்ல, சாத்தியமானதும் கூட. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தொடக்கம் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் வரையில் பலர் மாகாண சபையின் வழியாகவே அரசியலில் நுழைந்தவர்கள். இன்றைய ஆட்சியாளர்களான ஜே.வி.பியினர் கூட மாகாணசபையின் வழியாகப் பயன்களைப் பெற்றவர்களே. ஆகவே, இதையெல்லாம் புரிந்து கொண்டு, அதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும்.

மாகாணசபை முறைமையை முற்றாக எதிர்ப்பது — மறுதலிப்பது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தரப்பு. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி என்ற பெயரில் இயங்கும் இந்தத் தரப்பு, ஒரு நாடு இரு தேசம் என்ற நிலைப்பாட்டைக் கொண்டது. ஏறக்குறைய இது அதிதீவிர நிலைப்பாட்டைக் கொண்டது. விடுதலைப் புலிகளின் அரசியல் தொடர்ச்சியாக தம்மை அடையாளப்படுத்துவது.

இதை ஒத்ததாகவே நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தொடக்கம் தேசமாகத் திரள்வோம் என்ற நிலைப்பாட்டைக் கொண்ட சில அணிகளும் உள்ளன. புலம்பெயர் மக்களில் பெரும்பாலானோர் இந்த நிலைப்

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



பாட்டை ஆதரிக்கின்றனர். அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்களாகவும் பிரபாகரனை நேசிப்பவர்களாகவும் இருப்பதால் இந்த நிலைப்பாட்டை வெற்றியடைய வைக்க வேண்டும் என்பதற்காக உழைக்கின்றார்கள், பாடுபடுகிறார்கள். பொருளாதார ரீதியாகவும் பெரும் பங்களிப்பைச் செய்கிறார்கள்.

அதாவது தாம் எதை நம்புகிறோமோ அதற்காகத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்று நம்புகிறார்கள், அதைச்செய்கிறார்கள்.

கோட்பாட்டளவில், இந்த நிலைப்பாடு பலருக்கும் ருசிகரமாகவே இருக்கும். அதற்குக் காரணமும் உண்டு. சிங்கள ஆதிக்கத்தரப்பின் நடைமுறை மற்றும் சிந்தனைகள் தரும் வரலாற்றுப்படிப்பினை அவர்களை இப்படித் தான் சிந்திக்க வைக்கும். இந்தியாவும் மாகாணசபை முறைமையை வலுவாக்கம் செய்யவில்லை. இலங்கை அரசும் அதைத் தட்டிக் கழிக்கும் மனோநிலையில் உள்ளது என்பதால், அவர்கள் அதற்கு மாறான பிரிந்து செல்லும் தனியாக நிற்கக் கூடிய தீர்வொன்றைப் பற்றியே சிந்திக்கின்றனர்.

ஆனால், அதை அடைவதற்கான சாத்தியங்களைக் குறித்து இவர்களிடம் தெளிவில்லை. இருக்கின்ற நம்பிக்கை எப்படியானதென்றால், இலங்கை அரசாங்கம் செய்த இன ஒடுக்குமுறைக் குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் இனப்பிரச்சினைக்குத் தீர்வை முன்வைக்காத போக்கும் என்றோ ஒருநாள் சர்வதேச சமூகத்தை ஈழத்தமிழ்ச் சமூகத்தின் பால் திருப்பும் என்பது மட்டுமேயாகும். அதற்காக தொடர்ந்தும் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் விதமாக அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சிங்களத் தரப்பைத் தொடர்ச்சியாக எதிர்க்க வேண்டும் என்று சிந்திக்கின்றன் நம்புகின்றன.

சர்வதேச சமூகம் என்பதை இவை மேற்குலக நாடுகள் என்றே வரையறையும் செய்துள்ளன. இலங்கையின் இனப்பிரச்சினையில் தமிழ் மக்களின் நிலை குறித்து கனடா, பிரித்தானியா போன்ற நாடுகளில் கிடைக்கின்ற வரையறுக்கப்பட்ட அளவிலான ஆதரவை தமக்கான முழுமையான நம்பிக்கையாகக் கொள்கின்றன. இந்த ஆதரவு காலப் போக்கில் ஏனைய மேற்கு நாடுகளின்

(22ம் பக்கம் பார்க்க)

# செம்மணி முதல் துண்டி வரை கைதாகி சித்திரவதையில் உயிர் இழந்தோர் மணியம் தோட்டத்தில் புதைக்கப்பட்டனர்!

## மரணதண்டனைக் கைதி சோமரத்ன கூறும் திடுக்கிடும் தகவல்!

அண்மையில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களுக்கு மேலதிகமாக செம்மணிக்கு அப்பால் பல முக்கிய ஆதாரங்களுடன் சாட்சியமளிக்கத் தயாராக இருக்கிறேன் என நான் ஒட்டுமொத்த தமிழ்மக்களுக்கும் வாக்குறுதியளிக்கிறேன் என்று அறிவித்துள்ள கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, 1996களில் செம்மணி முதல் துண்டி முகாம் வரை சகல சோதனைச்சாவடிகளிலும் மக்கள் கைது செய்யப்பட்டதுடன் சித்திரவதைக்கூடங்களில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் மணியம் தோட்டத்தில் புதைக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கண்டறியப்பட்டு, அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்ட செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் 141 மனித எச்சங்கள் கண்டறியப்பட்டிருக்கும் நிலையில், 1996களில் செம்மணி முகாம் துண்டி முகாம் வரை இடம் பெற்ற கைதுகள், படுகொலைகள் மற்றும் சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்கள் தொடர்பில் மரணதண்டனைக் கைதியான சோமரத்ன ராஜபக்ஷ முக்கிய வெளிப்படுத்தல்களைச் செய்துள்ளார். அவரது வெளிப்படுத்தல்களின் முதற்பகுதி வருமாறு:

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை மற்றும் செம்மணி மனிதப்படுகொலை தொடர்பில் இதனூடாக வெளிப்படுத்துகிறேன். கடந்த ஜூலை மாதம் 9ஆம் திகதியன்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த கடிதத்துக்கு மேலதிகமாக விடயங்களை யாழ் மக்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த தமிழ்மக்களும் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டு இதனை வெளிப்படுத்துகிறேன்.

எனது மனைவி ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் கடந்த 3 ஆம் திகதியன்று 'வீரகேசரி' பத்திரிகையில் முதற்பக்கத்தில் வெளியானது. அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த சகல விடயங்களும் உண்மையானவை என்பதை நான் யாழ் மக்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். அதில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களுக்கு மேலதிகமாக செம்மணிக்கு அப்பால் முக்கிய ஆதாரங்களுடன் சாட்சியமளிக்கத் தயாராக இருக்கிறேன் என நான் ஒட்டுமொத்த தமிழ்மக்களுக்கும் வாக்குறுதியளிக்கிறேன்.

1998ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம் பெற்ற வழக்கு விசாரணையில் செம்மணி மனிதப்படுகொலை தொடர்பில் வெளிப்படுத்திய போது, அவை நீதிமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இருப்பினும் கடவுளும், இயற்கையும் அவை உண்மை என்பதை நிரூபித்துள்ளன. 1998 ஆம் ஆண்டு எனக்கு மரணதண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்டதன் பின்னர் எனது கூற்று தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஊடாக சிறைச்சாலை அதிகாரியான நாமல் பண்டார என்ற அதிகாரி மூலம் எனக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தார். அக்கடிதம் அமைச்சராலேயே எழுதப்பட்டிருந்தது. நான் மேல் நீதிமன்றத்தில் கூறிய விடயம் கோபத்தில் கூறப்பட்டது எனவும் அதனை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் அந்தக் கடிதத்தை வாசித்ததன் பின்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அதனைக் கையளிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்ட போது அந்த அதிகாரி கடிதத்தை வாசித்து விட்டுத் திருப்பித் தாருங்கள் என்றார்.



நான் அந்தக் கடிதத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு மறுத்த போது அவர் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் என்னை மிலேச்சத்தனமாகத் தாக்கிக் கொல்ல முற்பட்டனர். இருப்பினும் அங்கிருந்த ஏனைய சிறைக்கைதிகளின் தலையீட்டால் அம்முயற்சி தோல்வியடைந்தது. அவ்வதிகாரிகளுக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழு வழக்குத் தொடர்ந்திருந்த போதிலும், அதற்கு என்ன நேர்ந்தது என்று எனக்குத் தெரியவில்லை.

1999ஆம் ஆண்டு குமார் பொன்னம்பலத்தை போகம்பரை சிறைச்சாலையில் சந்தித்தபோது கடந்த ஜூலை மாதம் 9ஆம் திகதியன்று ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்த விடயங்களை அவரிடம் கூறினேன்.

அப்போது அவர் என்னிடம் 'பயப்படாமல் இருங்கள். ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்று உங்களை விடுத்து செம்மணி வழக்கின் சாட்சியாளராக மாற்றுகிறேன்' எனக் குறிப்பிட்டார். 1999ஆம் ஆண்டு இந்த செம்மணி மனிதப் புதைகுழியைக் காண்பிப்பதற்காகச் சென்றபோது எனது சார்பில் முன்னிலையாவதற்காக யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவதற்கு குமார் பொன்னம்பலத்துக்கு விமான வசதி வழங்கப்படவில்லை. அதன் பின்னர் அவர் திடீரெனப் படுகொலை செய்யப்பட்டார்.

அவரது மறைவை அடுத்து அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் அனுப்பி வைக்கப்பட்ட இரங்கல் செய்தியில் குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்ட தினத்துக்கு முன்னைய தினத்துக்குரிய திகதியே இடப்பட்டிருந்தது. இவ்விடயம் அவ்வேளையில் ஊடகங்களில் பரவலாகப் பேசப்பட்டது. இதன் மூலம் குமார் பொன்னம்பலம் கொல்லப்படுவதற்கு முன்னரே ஜனாதிபதி அந்த இரங்கல் செய்தியை எழுதியிருந்தார் என்பது தெளிவாகிறது.

1999ஆம் ஆண்டு நான் மனிதப்புதைகுழிகள் உள்ள இடங்களைக் காட்டிக் கொடுத்த வேளையில், அவற்றைக் காட்டிக் கொடுக்க வேண்டாம் எனவும், ஜனாதிபதி எனக்கு மன்னிப்பு வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டதன் காரணமாக சிலவற்றை மாத்திரம் காட்டிக் கொடுத்ததன் பின்னர், அதனைக் கைவிட்டுவிட்டேன். இவ்விடயம் தொடர்பில் மேலதிகமாக பல விடயங்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் செம்மணி மாத்திரமல்ல பலசேனா தலைமையகம் முதல் 1996ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டிருந்த முகாம்களில் சித்திரவதைக் கூடங்கள் நடாத்திச் செல்லப்பட்டமையை அன்றைய பாதுகாப்புச் செயலாளர் தொடக்கம் சந்திரிக்கா வரை அறிந்திருந்தனர் என்பதை நான் யாழ் மக்களுக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரியப்படுத்துகிறேன்.

அரியாலை 7ஆவது இலங்கை இராணுவக் காலாட்படையினால் செம்மணி முதல் துண்டி முகாம் வரை சகல சோதனைச் சாவடிகளிலும் மக்கள் கைதுசெய்யப்பட்டதுடன் சி3 முகாமின் 7 ஆவது இராணுவக் காலாட்படைக்கு உரிய சித்திரவதைக் கூடங்களில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் மணியம் தோட்டம் என அறியப்படும் பிரதேசத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு புதைக்கப்பட்டன. அது இராணுவக்கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பகுதிகளுக்கு வெளியே இருந்த பிரதேசமாகும். அவ்வாறு சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்கள் எனக்கு சரியாகத் தெரியாவிட்டாலும், அந்தப் பிரதேசம் (மணியம் தோட்டம்) எனக்கு நன்றாகத் தெரியும் என்பதை நான் உங்களுக்குக் கூறுகிறேன். இதற்கு மேலதிகமாக பிரதான கைதுகள் செம்மணியில் இடம் பெற்றதுடன், அங்கு கைது செய்யப்படமுடியாதவர்கள் ஏனைய சோதனைச்சாவடிகளில் கைது செய்யப்பட்டனர். அடுத்த வாரமும் தொடரும்.

நன்றி– வீரகேசரி

# அது நடந்திருக்கவே கூடாது!

(18ம் பக்கத் தொடர்ச்சி) வாழ்வு பெற்றது அவருக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி' என்று கில்ஸ் கூறினார். சர்வதேச அளவில் தேடப்படும் போர்க்குற்றவாளி என்பதால், புதின் பயணம் செய்வது கடினமாக இருக்க வேண்டும். ஆனால், ஒரு நாட்டின் தலைவராக அவர் வரவேற்கப்படுவதற்கு டிரம்ப் வசதி செய்து கொடுத்துவிட்டார். `ஐரோப்பிய தலைவர்கள் டிரம்பின் அணுகுமுறையை பின்பற்ற வாய்ப்பேயில்லை' என்று கில்ஸ் கூறினார். மேலும், `யுக்ரேன் மீதான புதினின் கோரிக்கைகளை ஆதரிப்பதில்லை என்றும், டிரம்பின் அவமதிப்பைப் பெறும் சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொள்ளாமல் இருப்பது எவ்வளவு முக்கியம் என்பதையும் புதினுடனான டிரம்பின் அணுகுமுறை வலுப்படுத்தும்.'

யுக்ரேன் அதிபர் ஜெலன்ஸ்கி சனிக்கிழமை வெளியிட்ட ஓர் அறிக்கையில், பேச்சு வார்த்தைகளின் ஒவ்வொரு கட்டத்திலும் ஐரோப்பிய தலைவர்கள் இருப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார். புதின், டிரம்ப் மீது செல்வாக்கு செலுத்தலாம் என்ற அச்சம் நிலவுவதால் அதை தவிர்க்கும் அரணாக ஐரோப்பிய தலைவர்கள் பார்க்கப்படுகிறார்கள். இந்த ஆண்டு பிப்ரவரியில் டிரம்பை ஜெலன்ஸ்கி ஓவல் அலுவலகத்தில் சந்தித்த போது அந்த சந்திப்பு மோசமானதாக இருந்தது. அதே இடத்தில் இந்த முறை அவர் சிறந்த முடிவையும், ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு கோரிக்கைகளுக்கு சரணடையாத அமைதிக்கான பாதை கிடைக்கும் என்றும் அவர் நம்புவார்.

யுக்ரேனுக்கு இந்த பணியில் உதவ அமெரிக்காவிடம் `பரந்த அளவிலான கருவிகள்' இருந்தன என்று அரசியல் ஆய்வாளர் ஒலெக்சாண்டர் கோவலென்கோ கூறினார். ஆனால் ரஷ்ய அதிபர் புதினுக்கு ஆடம்பரமும் சிறப்பான விழாவும் இருந்திருக்கக் கூடாது என்று அவர் கூறினார். ஒருவேளை இவை அனைத்தும் புதினை ஏமாற்றவும், புகழ்ந்து பேசவும், வெள்ளை மாளிகையின் உத்தியைப் பின்பற்ற அவரைக் கட்டாயப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருக்கலாம்' என்று கோவலென்கோ கூறினார். ஆனால் எனக்கு அதில் சந்தேகமாக இருக்கிறது. எந்த உத்தியும் இல்லாமல், அது டிரம்பின் விருப்பமாகத் தான் இருக்கும். – பிபிசி

# ஹர்த்தால் ஒரு இலகுவான அரசியல் வியாபாரம்!

(16ம்பக்கத் தொடர்ச்சி) அவர்கள் தான் செத்துப் போவார்கள். ஹர்த்தால் என்பது வீதிகளில் சிலர் கூடி காட்போட் மட்டைகளை உயர்த்திக் கொண்டிருப்பது இவ்வாறான நடவடிக்கைகளால் சில அரசியல்வாதிகள் பயன்படலாம். அடுத்த தேர்தலில் தங்களின் வாக்கு வங்கியை அதிகரிப்பதற்கு இவ்வாறான விடயங்களை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் ஒரு சமூதாயத்தில் சிந்திக்கும் தரப்பாக இருப்பவர்கள் தங்களுக்குள் கேட்க வேண்டிய கேள்வியோ, மக்கள் பற்றியதாக இருக்க வேண்டும். தங்களை படித்தவர்களாக எண்ணிக் கொள்பவர்கள். பாமரர்களை ஏமாற்ற முற்படும் போதெல்லாம், பாமரர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள இருக்கின்ற ஒரேயொரு ஆயுதம் அவர்களின் கொமன் சென்ஸ் மட்டும் தான்.

# மனிதஉரிமைகள் ஆணையாளரின் இறுதி செய்யப்படாத அறிக்கை!

கட்டுரையாளர்:- நிலாந்தன்-

மனித உரிமைகள் ஆணையாளருடைய திருத்தப்படாத அறிக்கையின் முதல் வடிவம் வெளியிடப்பட்டிருக்கிறது. எதிர்பார்க்கப்பட்டதை போல தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கும் நோக்கம் அந்த அறிக்கையில் உண்டு. மூன்று இனங்களுடையதும் ஆணையைப் பெற்று வந்திருக்கும் இந்த அரசாங்கம் பொறுப்புக்கூறும் விடயத்தில் இறந்த காலத்தில் இருந்து உடைத்துக ̇கொண்டு வருவதற்கான வாய்ப்புக்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஐநாவிடம் இருப்பதாகத் தெரிகிறது. அது ஐநாவின் எதிர்பார்ப்புத் தான். நிச்சயமாக யதார்த்தமல்ல.

இது ஏறக்குறைய 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின் வந்த நிலைமையை நினைவுபடுத்துவது. 2015 ஆட்சி மாற்றத்தின் போதும் மூவினங்களும் இணைந்து ரணில் மைத்திரி அரசாங்கத்தை கொண்டு வந்தன. எனவே புதிய அரசாங்கத்துக்கு கால அவகாசத்தை கொடுக்கும் நோக்கத்தோடு ஜெனிவா கூட்டத்தொடர் செப்டம்பர் மாதத்திற்கு ஒத்திவைக்கப் பட்டு, தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அதுவரையிலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இலங்கை அரசாங்கங்களுக்கு எதிரானவை.எனவே இலங்கை அரசாங்கங்களும் அதன் நட்பு நாடுகளும் அந்த தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்துவந்தன. ஆனால் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பொறுப்புக் கூறலுக்கான ,அதாவது நிலை மாறு கால நீதிக்கான தீர்மானம் எனப்படுவது இலங்கை அரசாங்கத்தின் இணை அனுசரணையோடு நிறைவேற்றப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் இணை அனுசரணையோடு நிறைவேற்றப்பட்ட முதலாவது தீர்மானம் அது.

அந்த தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கம் நிலைமாறு கால நீதியை இலங்கைத் தீவில் ஸ்தாபிப்பதற்கு ஒப்புக் கொண்டது. அதை விட முக்கியமாக தமிழ்த் தரப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் பங்காளியாக மாறி அந்த தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக உழைத்தது.

இது பழைய கதை. இப்பொழுது அதே கதை திரும்பி வருகிறது. ஆனால் அரசாங்கம் வித்தியாசமானது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை பகை நிலைக்கு தள்ளாத விதத்தில் மீண்டும் ஐநா மனித உரிமைகள் பேரவை நகர்வுகளை முன்னெடுப்பதாக தெரிகிறது. இது அண்மையில் ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வந்து போனபோது ஊகிக்கப்பட்டது. அவர் தன்னுடைய இலங்கைப் பயணத்தின் முடிவில் தெரிவித்த கருத்துக்களில் இருந்து அதை உணரக்கூடியதாக இருந்தது.

இப்பொழுது அவருடைய வருகைக்குப் பின்னரான திருத்தப்படாத அறிக்கை வெளிவந்திருக்கிறது. அந்த அறிக்கையின்படி புதிய அரசாங்கத்துக்கு ஒரு வாய்ப்பை வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஐநாவிடம் இருப்பது தெரிகிறது. அந்த அடிப்படையில் தான் வரும் செப்டம்பர் மாதம் நடக்கவிருக்கும் ஐநா மனித உரிமைகள் கூட்டத் தொடரிலும் முடிவுகள் எடுக்கப்படலாம் என்பதனை இப்பொழுதே ஊகிக்கத் தக்கதாக உள்ளது.

இது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. சில கிழமைகளுக்கு முன் யாழ்ப்பாணம் ரில்க்கோ விருந்தினர் விடுதியில் நடந்த சந்திப்பின் போது அதாவது ஐநாவுக்கு கடிதம் எழுதுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பின் போது இது சுட்டிக் காட்டப்பட்டது. ஐநா பல விடயங்களை ஏற்கனவே இறுதி செய்து விட்டது. அதன்படி புதிய அரசாங்கத்திற்கு வாய்ப்புகளை வழங்கும் நோக்கம் ஐநாவிடம் உண்டு என்ற விளக்கம் அந்த சந்திப்பில் இருந்தது.

ஒரு புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்திருப்பதனால் அதற்கு ஒரு வாய்ப்பை வழங்க வேண்டும் என்று ஐநா சிந்திக்கின்றதா? ஆனால் ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய அறிக்கைகள் ஒரு விடயம் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்கள் முழுமையாக பொறுப்பு கூறவில்லை என்பது தான் அது. அவ்வாறு



இலங்கையின் சிங்கள பௌத்த அரசாங்கங்கள் கடந்த 16 ஆண்டுகளுக்கு மேலாக பொறுப்புக் கூறத் தவறியிருக்கும் ஒரு வரலாற்று பின்னணியில், புதிய அரசாங்கம் மட்டும் பொறுப்பு கூறும் என்று ஐநா எப்படி எதிர் பார்க்கலாம்?

ஏற்கனவே 2015இல் இருந்து 18 வரையிலும் ரணில் மைத்திரி அரசாங்கம் பொறுப்புக் கூறும் என்று ஐநா எதிர்பார்த்தது. ஆனால் அந்த அரசாங்கத்தின் தமிழ்ப் பங்காளியாக இருந்து பொறுப்பு கூறுவதற்காக உழைத்த சுமந்திரன் கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகளின் பின் வவுனியாவில் வைத்துச் சொன்னார். அது ஒரு தோல்வியுற்ற பரிசோதனை என்று.

அதாவது ஆட்சி மாற்றத்தின் மூலம் அரசு கட்டமைப்பில் மாற்றம் வரும் என்ற கருதுகோள்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகளில் பாதிக்கப்பட்ட தரப்பாகிய தமிழர் தரப்பை பிரதிநிதித்துவப்படுத்திய சுமந்திரன் கூறுகிறார் அது தோல்வியுற்ற பரிசோதனை என்று.

இப்பொழுது அதே தோல்வி கண்ட பரிசோதனையை மற்றொரு புதிய அரசாங்கத்தோடு இணைந்து முன்னெடுக்க ஐநா தயாராகி வருகிறதா? ஏற்கனவே ரணில் மைத்திரி அரசாங்கத்துக்கு அதாவது நல்லாட்சி அரசாங்கத்துக்கு ஐ நா வாய்ப்புகளை வழங்கியது. ஆனால் அந்த வாய்ப்புகளை நிலை மாறுகால நீதியின் பெற்றோரில் ஒருவராகிய மைத்திரிபால சிறிசேனவே தோற்கடித்தார். இப்பொழுது மீண்டும் ஒரு தடவை தேசிய மக்கள் சக்திக்கு ஐநா வாய்ப்பை வழங்கக் கூடுமா?

நிலைமாறு கால நீதிக்கான தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றத் தவறிய ஒரு பின்னணிக்குள் தான் 46-1 தீர்மானம் 2021ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. அத் தீர்மானத்தின் பிரகாரம் ஸ்ரீலங்காவை பொறுப்புக் கூற வைப்பதற்கான அலுவலகம் என்ற பெயரில் சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கான ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் அந்தக் கட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்குள் வருவதற்கு இன்றுவரை விசா வழங்கப்படவில்லை.

அதேசமயம், அந்த அலுவலகம் அமைந்திருக்கும் ஐநா மனித உரிமைகள் ஆணையகத்தின் பொறுப்பதிகாரியான மனித உரிமைகள் ஆணையாளருக்கு இலங்கைக்கு வர விசா வழங்கப்பட்டதால் அவர் அண்மையில் இங்கு வந்து சென்றிருக்கிறார். இப்படித் தான் இருக்கிறது ஐநா தீர்மானங்களை இலங்கை அரசாங்கம் எப்படி நிறைவேற்றுகிறது மதிக்கிறது என்று அனுபவம். இப்படிப்பட்டதோர் பின்னணியில் புதிய அரசாங்கத்துக்கு ஐநா வாய்ப்புகளை வழங்க கூடுமா? கடந்த 16 ஆண்டு கால ஐநா அனுபவத்தை தொகுத்து பார்க்கும் பொழுது தெளிவாக ஒரு சித்திரம் கிடைக்கின்றது. அதன்படி இலங்கையை எதிர் நிலைக்குத் தள்ளும் விதத்தில் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ அல்லது இலங்கையை பாதிக்கக்கூடிய அழுத்தங்களை பிரயோகிப்பதற்கோ ஐநா தயார் இல்லை. மாறாக ஆட்சி மாற்றங்களின் போது ஏற்படக்கூடிய புதிய வாய்ப்புகளை கையாண்டு எப்படி புதிய இலங்கை அரசாங்கத்தை ஐநாவின் பொறுப்புக்கூறும் செய்முறைக்கு கடப்பாடு உடையதாக மாற்றலாம் என்றுதான் ஐநா முயற்சித்து வருகின்றது. அதாவது ஆட்சி மாற்றங்களின் மூலம் தமக்கு சாதகமான அரசியல் சூழல்கள் உருவாக்கும் பொழுது அவற்றைக் கையாள்வது. 2015-லும் அதைத்தான் செய்தார்கள். இப்பொழுது 2025லும் அதைத்தான் செய்ய முயற்சிக்கின்றார்களா?

அதாவது அரசாங்கங்கள் மாறும் பொழுது பொறுப்பு கூறுவதற்கான வாய்ப்புகள் மாறும் என்று ஐநா நம்புகிறதா? மேற்கு நாடுகள் நம்புகின்றனவா? ஆனால் இலங்கைத் தீவில் பொறுப்புக் கூறாமை என்பது அரசாங்கத்தின் கொள்கை மாற்றங்கள் சம்பந்தப்பட்ட ஒரு விடயம் அல்ல. அது சிங்கள பௌத்த அரசுக் கொள்கை. தேசிய மக்கள் சக்தி மட்டுமல்ல யார் அங்கே பொறுப்பில் இருந்தாலும் ஒரு கட்டத்துக்கு மேல் இறந்த காலத்துக்கு பொறுப்புக்கூற மாட்டார்கள். பொறுப்புக் கூறுமாறு மூன்றாவது தரப்பு ஒன்று கடுமையான பயன் பொருத்தமான அழுத்தங்களைப் பிரயோகித்தால் தவிர சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு என்றைக்குமே முழுமையாகப் பொறுப்புக் கூறாது.

இப்போது இருக்கும் தேசிய மக்கள் கட்சி அரசாங்கம் முழு அளவுக்கு பொறுப்பு கூறாது என்பதற்கு இரண்டு நடைமுறை உதாரணங்களைக் காட்டலாம். முதலாவது, அனுர ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு அசோசியேட்டட் நியூஸ் பிரஸ் ஊடகத்துக்கு வழங்கிய ஒரு பேட்டியில் கூறியது. பாதிக்கப்பட்ட மக்கள் உண்மையை கண்டறிவதற்குத் தான் விரும்புகிறார்கள். குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்று அவர்கள் கேட்கவில்லை என்ற பொருள்பட அந்த பேட்டியில் அவர் கூறுகிறார்.

அதாவது அவர் குற்றவாளிகளைத் தண்டிக்க மாட்டார். இதைத்தான் முன்னைய அரசாங்கத்தில் நீதி அமைச்சராக இருந்த விஜய்தாச ராஜபக்சவும் வேறு வார்த்தைகளில் சொன்னார். நீதி விசாரணையும் இனப்பிரச்சினைக்கான தீர்வும் சமாந்தரமாகச் செல்ல முடியாது என்று.

இரண்டாவது எடுத்துக் காட்டு, அனுரவின் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் கடந்த ஐநா கூட்டத் தொடரில் என்ன சொன்னார் என்பது. அங்கே அவர் பன்னாட்டு விசாரணைப் பொறிமுறையை நிராகரித்துப் பேசியிருந்தார். ஏன் அதிகம் போவான்? ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய திருத்தப்படாத அறிக்கையிலும் இலங்கை என்னென்ன விடயங்களில் ஐநா தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது.


எனவே ஐநா தீர்மானங்களில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளாத, ஐநாவில் இயங்கும் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகத்தைச் சேர்ந்தவர்களை இலங்கைக்குள் வரவிடாத ஓர் அரசியல் ராஜதந்திரப் பின்னணியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்று ஐநா கருதுகின்றதா?

ஐநா இந்த விடயத்தில் தன்னை பெருக்கடிக்கு உள்ளாக்காது என்பது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு தெரிகிறது.உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையைப் பலப்படுத்தலாம் என்ற கருத்தை ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் கொண்டிருப்பது தனக்குச் சாதகமானது என்று அனுர கருதுகிறார்.எனவே உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைக்கு எப்படி அனைத்துலக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்கலாம் என்றுதான் அவர் சிந்திக்கின்றார். ஏறக்குறைய ரணில் சிந்தித்தது போல. அந்த அடிப்படையில் தான் செம்மணி விவகாரத்தை அரசாங்கம் கையாண்டு வருகிறது.


மேலும் ஊழலுக்கு எதிராக அரசாங்கம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் ஐநாவின் ஆர்வத்தை தூண்டக்கூடியவை. முன்னாள் கடற்படை தளபதி போன்றவர்கள் கைது செய்யப்பட்டு இருப்பதும் உள்நாட்டு நீதியின் மதிப்பை கூட்டும் முயற்சிகள் தான். ஆனால் ஊழலுக்கு எதிராகவும் படைப்பிரதானிகளுக்கு எதிராகவும் எதுவரை போகலாம் என்பதில் அரசாங்கத்துக்கு வரையறைகள் உண்டு.

சிங்கள பௌத்த உயர் குழாமானது ஒரு கட்டத்துக்கு மேல் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை நகர விடாது. அதுபோலவே யுத்த வெற்றி நாயகர்கள் ஆகிய படைத்தரப்பையும் ஒரு கட்டத்துக்கு மேல் விசாரிக்க விடாது. அப்படி விசாரித்தாலும் தண்டிப்பதற்கு அனுரவே தயாராக இல்லை. எனவே பொறுப்புக் கூறல் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் என்ன செய்யலாம் என்பதில் அடிப்படையான வரையறைகள் உண்டு. கடந்த 16 ஆண்டு கால அனுபவத்தின் அடிப்படையில் அதைத் தொகுத்துக் கண்டுபிடிப்பது ஐநாவுக்கு கடினமான விடயம் அல்ல. ஆனாலும் ஐநா இலங்கையில் ஆட்சி மாற்றங்கள் நிகழும் பொழுது குறிப்பாக புதிய அரசாங்கம் ஐநாவை அனுசரித்துப் போவதான ஒரு தோற்றத்தை காட்டும் பொழுது அந்த அரசாங்கத்துக்கு வாய்ப்புகளை வழங்கி வருகிறது. ஏன்? (12ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! அனுகூலமாக அனைத்து காரியங்களும் நடக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்சனைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற் கொள்வீர்கள். தொழில் வியாபாரம் சீராக நடக்கும்.




ரிஷபராசி அன்பர்களே! பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரசசனைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணத்தின் போது கவனம் தேவை. குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே திடீர் மனவருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல்பாடுகள் மனதுக்கு திருப்தி அளிக்கும். வழக்குகளில் மெத்தனம் காணப்படும்.





மிதுனராசி அன்பர்களே! தேவையற்ற மனக்கவலை அகலும். வழக்கு விவகாரங்களில் இருந்த தாமதமான போக்கு நீங்கும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை. ஆயுதங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை.




கடகராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். வேலை பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு வரலாம். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர்.




சிம்மராசி அன்பர்களே! சிக்கல்கள் தீரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சனையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவர். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்பு கூடும். வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும்.




கன்னிராசி அன்பர்களே! மன சஞ்சலம் நீங்கும். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். குடும்பத்தினரின் செயல்பாடுகள் மகிழ்ச்சியை கொடுக்கும். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகளை அனுசரித்து செல்வதும், அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பதும் நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும்.





துலாம்ராசி அன்பர்களே! எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பூமி, வீடு தொடர்பான பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மன வருத்தம். நீங்கும். எதிர்பாராத செலவு உண்டாகலாம். குடும்பத்தினரின் பேச்சுக்கு எதிர்த்து பேசுவதை தவிர்ப்பது நன்மை தரும். கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகளிடம் அன்பாக பழகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும்





விருச்சிகராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த சங்கடங்கள் தீரும். பிள்ளைகள் கல்வி பற்றிய கவலை நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பரபரப்பு நீங்கி பணிகளை கவனிப்பர்.








தனுசுராசி அன்பர்களே! திட்டமிட்டு எதையும் செய்ய வேண்டியது அவசியம். வீண்பழிவர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதம், பிள்ளைகளின் செயல்களால் மனவருத்தம் போன்றவை ஏற்படலாம். வீட்டில் உள்ள பொருட்களை கவனமாக பாதுகாப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல்கள் ஏற்படும்.




மகரராசி அன்பர்களே1 சாமர்த்தியம் அதிகரிக்கும். மனவருத்தம்நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தனாதிபதி சூரியன் சஞ்சாரத்தால் பணதேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும், குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.




கும்பராசி அன்பர்களே! வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்னைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம்.




மீனராசி அன்பர்களே! சாதகமான பலன்கள் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பணவரவில் திருப்தி இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும். திருமணம் தொடர்பான பேச்சு நடக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# ஹர்த்தால்:- தனிநபர்களின் தோல்வியும் சமூகங்களின் வெற்றியும்

(14ம் பக்கத் தொடர்ச்சி) இல்லாத காலத்தில் அரசியல் தீர்வு கிடைத்ததா? இராணுவம் மக்கள் உறவு துரோகத்தனம் என்று சென்.ஜோன்ஸ். அதிபர் ஆனந்தராஜா புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார் அரசியல் தீர்வு கிடைத்ததா? சுட்டுக்கொண்டவர்களும் படைத்தளபதிகளும் கை குலுக்க வில்லையா? அல்லது கிடைத்த தீர்வைத் தான் ஏற்றுக் கொண்டீர்களா?

இந்த ஹர்த்தாலுக்கு பதிலாக கொழும்பில் ஒரு போராட்டத்தை ஏன்? செய்ய முடியாது என்ற கேள்வி சமூக ஊடகங்களில் கேட்கப்பட்டது. பல பதிவுகள் உண்ணாவிரதத்தை முன் மொழிந்தன. அந்த உண்ணாவிரதத்தை தமிழரசு பாராளுமன்ற உறுப்பினர்கள் எட்டும் பேரும் செய்ய வேண்டும் என்றும், முடியுமானால் சாகும்வரை செய்யவேண்டும் என்றும் கேட்கப்பட்டது. இவை ஒரு பகுதி தமிழ்பேசும் மக்களின் கருத்துக்கள். இதற்கு தமிழரசின் பதில் என்ன? முடியுமானால் ஹர்த்தாலுக்கு ஆதரவு அறிக்கை விட்டவர்களும் நோன்பிருந்தால் அதன் கனதி சர்வதேசத்தில் அதிகமாக இருக்கும்.

இப்பவும் காலம் கடந்து விடவில்லை. ஹர்த்தால் போட்டு அன்றாடம் உழைக்கும் கூலிகளை பட்டினி போடுவதை விடவும் இது இதயசுத்தியான அரசியல். அதுவும் ஜெனிவாவில் மனித உரிமைகள் கூட்டத்தொடர் காலத்தில், ஜனாதிபதி ஐ.நா.பொதுச்சபையில் உரையாற்றும் காலத்தில் தமிழரசு எம்.பி.க்கள் சாகும்வரை உண்ணாவிரதம்? இது எப்படி இருக்கு? இதைச் செய்யலாமே. ஒரு வகையில் மக்களுக்கு கட்டளையிட்டு அவர்களை வதைப்பதை விடவும். மக்கள் இட்ட கட்டளையை சிரமேற்கொண்டதாகவும் வரலாற்றில் அமையும்.

இராணுவ முகாம்களை மூடுவது என்பது நூறு வீதம் அரசாங்கத்தின் முடிவிலேயே தங்கியுள்ளது. காலாவதியாகிப் போன ஹர்த்தால்களால் அதை சாதிக்க முடியாது. இந்திய இராணுவம் வந்திறங்கிய போது இலங்கை அரசாங்கம் எடுத்த முடிவின் படி இராணுவம் முகாமுக்குள் முடங்கவில்லையா? அரசியல் தீர்வுக்கும் இராணுவ பிரசன்னத்திற்கும் போடும் முடிச்சு முழங்காலுக்கும், மொட்டத்தலைக்கு மானது. ஜதார்த்தமற்றது. உண்மையான, நேர்மையான அரசியல் அற்றது.

அரசியல் தீர்வு ஒன்று கிடைக்கும் போது இராணுவம் வரையறுக்கப்பட்ட வகையில் குறைக்கப்படலாம். வடக்கு கிழக்கில் இருந்து இராணுவம் முற்றாக அகற்றப்பட வேண்டும் என்றால், தனிநாடே வழி. இதற்கு போராட, புருடா விடாமல் சுமந்திரனும், தமிழரசுக்கட்சியும் தயாரா?

அரசாங்கம் நல்லெண்ண அடிப்படையில் இந்த யுத்த சூழல் எச்சங்களை படிப்படியாக குறைக்க முயற்சிக்கிறது. அரசாங்கம் தென்னிலங்கை சிங்கள பௌத்த தீவிர அரசியல் சக்திகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையிலும் உள்ளது. இதை கவனத்தில் கொள்ளாத தமிழ்த்தேசிய உணர்ச்சி எதிர்ப்பு அரசியல் இராணுவத்தை நிலை நிறுத்தவும், இனப்பிரச்சினைக்கான தீர்வை பின் தள்ளவும், பயங்கரவாத சட்டத்தின் நீக்கத்தை தடுக்கவும் தமிழ்த்தேசியம் அரசாங்கத்திற்கு செய்யும் சேவகமாக அமையும். எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும்.

இது தான் தமிழரசுக்கட்சியினதும், சுமந்திரனதும் பின்கதவு இலக்கா? இது தந்தை செல்வாவின் அசரீரி. சுமந்திரா..! உனது முதலமைச்சர் கனவு வில்லங்கமானது. உன்னை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும். ஆமேன்..!

# கற்பனையில் தமிழ்ச் சமூகம்

(19ம் பக்கத் தொடர்ச்சி) ஆதரவாக மாறும் என்று நம்புவோர் இதில் அதிகமுண்டு. என்பதால் முடிந்த முடிவாக பிரிவினை என்ற மனநிலையில் தான் இவர்கள் உள்ளனர். யதார்த்தத்தைப் பற்றி இவர்கள் சிந்திப்பதாகவே இல்லை. யதார்த்த நிலையே பிராந்திய ஆதிக்கத்தைக் கடந்து சிந்திக்கக் கூடிய நிலை இன்னும் உருவாகவில்லை. பிராந்தியம் என்பது இந்தியாவும் சீனாவும் இணைந்த நிலையே. இரண்டு நாடுகளையும் தமிழர்கள் தமது அரசியற் தொடர்பு வலயத்திலோ வலையமைப்பிலோ கொண்டு, அதற்கான பொறிமுறைகளை வகுத்துச் செயற்படவில்லை. ஏன் மேற்குலகைக் கையாளக் கூடிய பொறிமுறைகள் (இராஜதந்திர நடவடிக்கைகள்) எதையும் இவை மட்டுமல்ல எந்தத் தரப்பும் மேற் கொள்ளவில்லை. இந்தப் பலவீனமான நிலையில்தான் தமிழ்ச் சமூகத்தின் அரசியல் உள்ளது.

ஜனநாயக அரசியலில் பல்வேறு நிலைப்பாடுகளும் போக்குகளும் இருக்கும். அதற்கு இடமும் உண்டு. ஆனால், தமக்கென ஒரு நிலைப்பாட்டை அல்லது கோட்பாட்டை முன்னெடுக்கும் தரப்புகள் அவற்றின் நடைமுறைச் சாத்தியம் என்ன? அதற்கான கால வரையறை (உத்தேசமாக) என்ன? அதற்கான உத்தரவாதம் என்ன? அதை முன்னெடுக்கும் வழிமுறை சாத்தியப்படுத்தும் பொறிமுறை என்ன? என்றெல்லாம் மக்களுக்குக் கூற வேண்டும். அது முக்கியமான கடப்பாடு.

இங்கே தமிழ் அரசியல் தரப்பில் அந்தக் கடப்பாடு என்று எதுவுமே கிடையாது. ஏனெனில் இங்கே நடந்து கொண்டிருப்பது, தேர்தலை மையப்படுத்திய அரசியலாகும். தேர்தல் வெற்றிக்காக எதை முன்னே வைக்க வேண்டும், எதை முதலீடாக்க வேண்டுமோ அதையே அவர்கள் செய்கிறார்கள்.

இதற்கு அப்பால், தாம் முன்னிறுத்தும் அல்லது தாம் நம்பும் கோட்பாட்டை அல்லது நிலைப்பாட்டை மெய்யாகவே வெற்றியடைய வைக்க வேண்டும் என்றால், அதற்காக அவை பாடுபட வேண்டும். அதற்கான பொறிமுறைகளை உருவாக்க வேண்டும். அதாவது அதைச் செயற்படுத்த வேண்டும். இங்கே கற்பனைக் குதிரைகளே அதிகம். அவை நிஜமாக ஓடுவதுமில்லை. நிஜமாகக் கனைப்பதுமில்லை. நிஜமாக வெற்றியடைவதுமில்லை.

பாவம் தமிழ் மக்கள். இல்லை இல்லை. மன்னிக்க வேண்டும். இன்னும் தண்டனை பெற வேண்டும் தமிழ் மக்கள். ஏனென்றால், இவ்வளவு பட்ட பிறகும் இன்னும் புத்தி தெளியாமல் இருந்தால், அதற்கான தண்டனையைப் பெறத்தானே வேண்டும்!. ஆகவே தொடர்ந்தும் சிங்கள மேலாதிக்கத் தரப்புக்கு வெற்றிகளைக் குவிக்கிறார்கள் தமிழ் மக்கள்.

**எவரையும் திட்டாதீர்கள்! எவருக்கும் சாபம் போடாதீர்கள்! கெடுதல் நினைக்காதீர்கள்! நாம் எதைச் செய்கின்றோமோ அதுவே எமக்கு வந்து சேரும் என்பதை மறவாதீர்கள்**

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial*
- *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







# முள்ளிவாய்க்காலில் மாற்று வலுவுள்ளோர் பாடசாலைக்கான கட்டுமானப் பணியின் ஆரம்ப வேலைக்கான நிகழ்வு நடைபெற்றது!

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாற்று வலுவுள்ளோர் பாடசாலை ஒன்றின் தேவை தொடர்பாக மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடியதற்கு அமைவாக மாவட்ட செயலாளரினால் சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று முள்ளிவாய்க்காலில் அரசினால் வழங்கப்பட்ட 2 ஏக்கர் காணியில் அமையவுள்ள மாற்று வலுவுள்ளோர் பாடசாலை கட்டுமான ஆரம்ப வேலைக்கான நாள் கல்லு வைத்தல் நிகழ்வு 20 ஆகஸ்ட் 2025 புதன்கிழமை இடம் பெற்றது.

சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் அவர்களும் கலந்து சிறப்பித்து கட்டட வேலைகளை ஆரம்பித்து வைத்தனர். இதற்கு முன்னதாக 19 மார்ச் 2025 அரசினால் வழங்கப்பட்ட 2 ஏக்கர் காணியில் வேலிகள் அடைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

முள்ளிவாய்க்கால் என்பது எமது மக்கள் அந்தரித்தது நின்ற நிலம் மட்டுமல்ல எத்தனையோ உயிர்கள் கொத்துக் கொத்தாகப் பலியாகிப் போன மண். அந்த மண்ணில் மனநலம் குன்றியோர், மனவளம் அற்றோர், உடல் ஊனமுற்றுப் போனவர்களைத் தாங்கிக் கொள்ள ஈழத்தின் அறப்பணியாளர் - அருளாளர், செஞ்சொற்செல்வர் திரு ஆறு திருமுருகன் மேற்கொள்ளும் இந்த வரலாற்றுப் பணிக்கு அனைவரும் முடிந்தளவு நிதிப் பங்களிப்பை நல்க வேண்டுமென்பதே ஈழநாடு பத்திரிகையின் வேண்டுகோளாகும். ஈழநாடு 22 ஆகஸ்ட் 2025













